Free Circulation Germany- England
மணி: 75 - ஓசை: 350 கார்த்திகை. November 2025

# வெற்றிமணி
Vettimaniy
ESTD 1950

31TH years IN EUROPE
Successful Publishing
Monthly Newspaper
பிரதம ஆசிரியர் மு.க.சு.சிவகுமாரன் B.F.A

இதழ் 350

# தமிழர்களுக்கு வழங்கிய தேர்தல் வாக்குறுதிகளை ‘அப்படியென்றால் என்ன’ எனச் செயற்படுகிறதா அரசு

கொழும்பிலிருந்து... என்.அசோக்

## இதழ் 350



## திரையுலகில் இப்போ டிஜிட்டல் யுத்தம்!

Dr.IN

“அம்பிகையின் பரதநிருத்திய அரங்கப்பிரவேசம்
யாழ்ப்பாண சமூகத்துக்கான பரிசு”

## -பேசும் படம்-







# வெற்றிமணி 350 வது இதழ் விரிந்து மணம் பரப்புகின்றது

ஒன்று, இரண்டு, மூன்று, நூறுவரை எண்ணச் சொன்னாலே மூச்சு முட்டும். இங்கு ஒன்றல்ல, நூறல்ல இருநூற ல்ல, முந்நூறுமல்ல, முந்நூற்றி ஐம்பது.

முச்சு முட்டுவது அல்ல, மூச்சு இருப்பதே பெரியகாரியம்.

வெற்றிமணி யின் இந்த வெற்றிக்கு எனக்குள் உள்ள ஒரு வெறித்தனமும் ஒரு காரணம்.

இந்த வெறித்தனத்தால் எவருக்கும் வெறுப்பேற்றியது கிடையாது. பதிலுக்கு,

காலத்திற்கு காலம் கடந்த 31 வருடங்களாக யாரோ ஒரு சிலரையாவது அவரவர்கள் துறைகளில் முன்னேற்றம் காண வழிசமைத்துக் கொடுத்தது.

பணத்தை மட்டும் அல்ல சொல்லமுடியாத அளவு நேரத்தையும் எம் மக்களின் கலை இலக்கிய வளர்ச்சிக்காக செலவு செய்து உள்ளது. கட்டி வைத்து ஆவணமாக வைத்திருக்கும் வெற்றிமணி பத்திரிகையை, ஒவ்வொரு இதழ்களாகக் தட்டிப் பார்ப்பது உண்டு.

எத்தனை எத்தனை எழுத்தாளர், கலைஞர்கள் வெற்றிமணி எனும் ஏணிப்படியில் ஏறி வெற்றிக் கனி பறித்து உள்ளனர்.

நன்றாக நடக்கத் தொடங்காத குழந்தையையும், நடக்கிறான்! நடக்கிறான்!! என்று சொல்லி உற்சாகப்படுத்தி நடக்க வைக்கும் ஒரு அன்னை போல, தந்தை போல, பலரின் ஆரம்பகாலத்தில் உற்சாகம் வழங்கி, அவர்களை விரைவாக வெற்றிமணி நடக்க வைத்து உள்ளது, அப்படி நடந்தவர்களில் பலர் இன்று நன்றாக தங்கள் கலை இலக்கிய பயணங்களின் ஓட்டத்தில் முன்னிலை வகிப்பதைக் கண்டு பெருமகிழ்வு கொள்கிறது.

எல்லோரும் உயர்வாய் வாழ்ந்திட வேண்டும் என்பதே வெற்றிமணி யின் பேரவா.

உங்கள் கரங்களில் தவழும் வெற்றிமணி பத்திரிகை யின் 350வது இதழ் அயராத உழைப்பிலும், பல அபிமானிகளது தன்னலமற்ற தொண்டாலும், வியாபார நிறுவனங்களின் அனுசரனையாலும் இன்றும் வெளிவரச் சாத்தியமாகிறது.

வெற்றிமணிக்கு ஐரோப்பாவில் நீண்டகாலம் தொடர்ந்து ஒலித்த, ஒலிக்கும் ஒரே மாத பத்திரிகை என்ற ஒரு பெயரும் காலம் தந்த பரிசு.

எனது தந்தையார் மு.க.சுப்பிரமணியம் அவர்கள் 1950 ம் ஆண்டு வெற்றிமணியை ஆரம்பித்தார். இன்று பவள விழா ஆண்டில் அன்னை தந்தையின் ஆசிகள் என்றும் எனக்கு கிடைக்கிறது என்பதும் தெளிவு.

**என்றும் அன்புடன்**
**மு.க.சு.சிவகுமாரன்**




வெற்றிமணி

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்

ஓசை : 350





ஆரம்பம்: 1950

ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
( முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன். பரமானந்தர்
வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
‘ஓவியக்கலைவேள்’
மு.க.சு.சிவகுமாரன்
Chief Editor:
M.K.S.Sivakumaran B.F.A

Tel: +49 01631992333
+49 01631992333

e-mail: vettimaniy@hotmail.com

“வெற்றிமணிமொழி’
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது

Vettimaniy Ltd
Company No: 8876276


# தமிழர்களுக்கு வழங்கிய தேர்தல் வாக்குறுதிகளை ‘அப்படியென்றால் என்ன’ எனச் செயற்படுகிறதா அரசு

கொழும்பிலிருந்து...
**என்.அசோக்**

அனுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் இலங்கையை பொறுப்பெடுத்து 1 வருட ங்கள் கடந்திருக்கிறது.

இந்த 1வருடத்தில் போதை ஒழிப்பு, நிர்வாக சீரமைப்பு, இலஞ்ச ஊழல் ஒழிப்பு என சில வேலைத்திட்டங்களை முன்னெடுத்து செல்வதை அவதானிக்க முடிகிறது. இவை தேசிய ரீதியிலான வேலைத்திட்டங்களாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது.



ஆனால்,ஈழத்தமிழர்கள் தொடர்பில் அனுரா அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன?. இதுவரை அனுர அரசு பொறுப்பேற்ற இந்த ஒரு வருடத்தில் இலங்கையில் இனப்பிரச்சினை ஓன்று இருப்பதாகவோ அல்லது ஈழத்தமிழர்களுக்கு ஒரு தீர்வை வழங்க வேண்டுமென்றோ எந்த ஒரு இடத்திலும் பேசியதுமில்லை.அப்படியொன்று இருப்பதாக சமிக்ஞை காட்டியதுமில்லை. புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினை விடயத்தில் அனுர அரசின் நிலைப்பாடு என்ன? என்பது இதுவரை புரியாத புதிராகவே இருந்து வருகிறது.புரையோடிப் போயுள்ள தமிழ் மக்களின் அரசியற் பிரச்சினைக்கு நியாயமானதொரு தீர்வு காண்பதைத் தவிர்த்து ஏனைய அரசியல், சமூக, பொருளாதார முன்னெடுப்புகளின் மூலம் மாத்திரம் நாட்டை கட்டியெழுப்பிவிட முடியும் என கனவு காண்பது எந்தளவுக்கு பிற்போக்குத்தனமானது என்பதை கடந்த ஆட்சியாளர்களின் வரலாற்றுத்தவறுகள் அனுரா அரசின் முன் படிப்பினைகளாக இருக்கிறது.

அந்நியர் ஆட்சியிலிருந்து விடுபட்ட பின் 76 வருட அரசியல் வரலாற்றைக் கொண்ட இலங்கைத் தீவில், தமிழர்களின் இனப் பிரச்சினைக்கான தீர்வு குறித்து இதுவரை யாரும் வெளிப்படையான கருத் தையோ அல்லது அதற்கான திட்டமொன் றையோ முன்வைக்கவில்லை.

ஆனால்,முள்ளிவாய்க்கால் அவலம் நடந்தேறிய பின்னரான காலகட்டத்தில் மகிந்த அரசும் ரணில் -மைத்திரி அரசும் சமஷ்டி, 13+ தருவோம் என்று ஏமாற்றி ஏமாற்றி ஆட்சிக்கதிரையை இறுகப்பிடித்துக்கொண்டும் சர்வதேச சமூகத்தை சமாளித்துக்கொண்டும் காலத்தை கடத்தினார்கள்.

ஆனால்,அனுரா அரசு தமிழர்களுக்கு அரசியல் தீர்வு அல்ல என்றவாறும் மாறாக இலங்கையின் பொருளாதாரப்



பிரச்சினைகளை மாத்திரமே மையப்படுத்தி அவர் தனது உரைகளை தேர்தல் காலத்திலும் தற்பொழுதும் முன்னெடுத்து வருகிறார்கள்.அத்துடன், அனுரகுமார திசாநாயக்க தேர்தல் பிரசார மேடைகளில், “நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழித்து, அதை பாராளுமன்றத்தால் நியமிக்கப்பட்ட நிறைவேற்று அதிகாரங்கள் இல்லாத ஜனாதிபதியால் மாற்றுவதாக உறுதியளித்தார். 2015 இல் தொடங்கப்பட்ட சீர்திருத்த செயல்முறையை கட்டியெழுப்ப, ஜனநாயகத்தை வலுப்படுத்துவதையும் அனைத்து குடிமக்களின் சமத்துவத்தையும் உறுதி செய்வதையும் நோக்கமாகக் கொண்ட ஒரு புதிய அரசியலமைப்பை அறிமுகப்படுத்துவதாகவும்“ உறுதியளித்தார்.அதற்காக அனுரா அரசுக்கு 2/3 பெரும்பான்மையை இலங்கையர்கள் வழங்கியிருந்தார்கள்.ஆனால், ஒரு வருடங்கள் கடந்தும் புதிய அரசியலமைப்பு உருவாக்கத்திற்கான முன்னகர்வுகள் எதனையும் அவதானிக்க முடியவில்லை. குறிப்பாக புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படுவதாயின் இலங்கைப் பாராளுமன்றம் அரசியலமைப்பு பேரவையாக மாற்றப்பட வேண்டும். எனினும் அத்தகைய முன்னகர்வுகளை கூட பேச்சளவில் கூட அவதானிக்க முடியவில்லை.

தமிழர்களின் தேசிய இன அடையாளங்களை படிப்படியாக அழிப்பதன் மூலம் நீண்டகாலத்தில் அவர்களின் அரசியல் உரிமைக்கான கோரிக்கைகளை வலுவற்றதாக்க முடியும் என்றதொரு நிகழ்ச்சி நிரலிலேயே யுத்தம் மௌனிக்கப்பட்டதன் பின்னரான தென்னிலங்கையின் அரசியல் பயணம் தொடர்கிறது.அதே கொள்கையை தான்

22 ஆம் பக்கம் பார்க்க...




# அதிசயம் ஆனால் உண்மை!

வெற்றிமணி ஆரம்பமான 1994 ஆண்டு ஆனி முதல் இன்று வரை 2025 புரட்டாசி மாதம் வரை, 31 வருடங்கள் ஒரு இதழும் தவறாது, இடம் மாறாது விளம்பர அனுசரனை தந்து வெற்றிமணிக்கு ஒலி சேர்த்தவர் ச.ஜெகதீஸ்வரன்.



இந்த அதிசய வரலாறு தமிழ் உலகில் எங்கும் நடக்காத ஒன்று. பெருமைக்காக அல்ல ஒரு பதிவுக்காக இதனை இங்கு பதிவு செய்கிறேன்.

தங்க நகைகளின் நம்பிக்கை நட்சத்திரமாக இன்று வரை திகழ்கிறார்.

கடைக்கு பெயர் orientalisch Textilien und Schmuck என்றும் முவுளு என்றும் கடைக்கு பெயர் இருந்தாலும் “ஜெகதீஷ் நகைக் கடை“ என்ற பெயரே யாவர் மனதிலும் பதிவாகிவிட்டது.

ஐப்பசி மாதம் முதலாம் திகதி முதல் அவர் 37 வருடங்களாக உருவாக்கிய தங்கநகை மாளிகையில் இருந்து ஓய்வுபெறுகின்றார்.

சமூக சேவையாளர். கலை, இலக்கிய முன்னெடுப்புகளுக்கும், ஆலய வளர்ச்சிக்கும், தாயகத்தின் விடுதலைக்கும், வாரி வழங்கியவர்.



டோட்மூண்ட் சாந்தநாயகி சமேத மௌலீஸ்வரர் ஆலயத்தின் பரிபாலன சபைத் தலைவராக இருந்து, ஆலய வளர்ச்சிக்கு அயராது பணிபுரியும் திரு. ச.ஜெகதீஸ்வரன் அவர்கள், தனது ஓய்வு காலத்தில் சிவன் ஆலயத்தில் சிவப்பணி புரிந்து சிவனருள்பெற்று மகிழ்வுற்று வாழ வாழ்த்தி வணங்கி மகிழ்கின்றோம்.

**மு.க.சு.சிவகுமாரன்**
**பிரதம ஆசிரியர் வெற்றிமணி பத்திரிகை. பிரதம ஆசிரியர் சிவத்தமிழ் சஞ்சிகை. யேர்மனி. 01.11. 2025.**

# இலங்கை, தென்னிந்திய நட்சத்திரங்கள் நடித்த ‘நீறுபூத்த நெருப்பு’ விரைவில்

இலங்கைச் சினிமாவின் பெருமையை உலக அரங்கில் ஒலிக்கச் செய்யும் வகையில் உருவாகியுள்ள “நீறுபூத்த நெருப்பு (Fire Beneath Ash)“ திரைப்படம் விரைவில் வெளியாகவுள்ளது.

இத்திரைப்படம் இலங்கை மற்றும் தென்னிந்திய நட்சத்திரங்களை ஒரே மேடையில் இணைத்து உருவாக்கப்பட்டிருப்பது இதன் சிறப்பாகும்.

யாழ்.மண்ணில் பெரும் பொருட்செலவில் படமாக்கப்பட்ட இத்திரைப்படத்தை இயக்கியுள்ளார் சர்வதேச விருது பெற்ற இலங்கை இயக்குநர் தேவிந்த் கோங்காகே. ஜெர்மனிக்கான இலங்கை தூதுவரும் முன்னாள் நீதியரசருமான சரத் கோங்காகேவின் புதல்வர் தேவிந்த், இலங்கையின் இளம் தலைமுறை இயக்குனர்களில் குறிப்பிடத் தக்கவர். அவரின் முன்னணி படைப்புகளில் கிரிவசிபுர, பவதாரண, நாட்டாமி ஆமி ஆகியவை அடங்கும்.

“போய்வாரேன் உயிரே“ என ஆரம்பிக்கும் இதயத்தை நெகிழ்விக்கும் பாடலை எழுதியுள்ளார் தமிழ் சினிமா பாடலாசிரியர்,“ஐயோ சாமி நீ எனக்கு வேணாம்“ பாடல் புகழ் கவிஞர் பொத்துவில் அஸ்மின்.இது அவரது முதல் இலங்கை தமிழ் திரைப்படப் பாடல் ஆகும்.

இந்தப் பாடல் மூலம் இலங்கைப் பாடகி Zee Tamil Title Winner கில்மிஷா, மேலும் Shakthi TV Junior Superstar



புகழ் சாதீர் அஹமத் ஆகியோர் திரைபாடகர்களாக அறிமுகமாகின்றனர்.

பொத்துவில் அஸ்மின் எழுதி , சாதீர் பாடிய “வானம் பூமி“ பாடல் இன்னும் ஆசிரியர் தினங்களில் இலங்கையெங்கும் பாடப்படுவதால் பிரபலமானது.

இந்திய தமிழ் நடிகர்கள் போஸ் வெங்கட், ஜி. எம். குமார், வெங்கட் ஆகியோரோடு இணைந்து அரவிந்தன் சிவஞானம், தர்ஷிபிரியா, சௌவ்மியா சத்தியசீலன், எல்ராய் அமலதாஸ்,கோபி ரமணன், கிரேஸ் தென்னகோன், மகேந்திரநாத் வீரரத்ன், வகீஷா சால்காடோ, ஜெராட் நோயல், பால்ரெஜி பிரேம்குமார், மரியம் விஜயரத்ன் உள்ளிட்ட பலரும் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர்.




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# அறிவு; ஆற்றலின் நுட்பமான பயணம் 03





தீபா ஸ்ரீதரன் (தைவான்)

மனிதனால் தாவரங்களையும் விலங்குகளையும் பழக்கப்படுத்தி வளர்த்தல் (Domestication), கிடைக்கக்கூடிய ஆற்றலை மேலும் பல மடங்காக உயர்த்தியது. தானியங்கள் பயிரிடப்பட்டதால் நீண்டகாலச் சேமிப்பு சாத்தியமானது் கால்நடைகள் இறைச்சி மட்டுமல்லாது பால், கம்பளி, போக்குவரத்து மற்றும் உழவு போன்ற பணிகளுக்கான தசை ஆற்றலையும் அது வழங்கியது. வேளாண்மை தனி நபரின் அளவில் அதிக ஆற்றல் செலவாக இருந்தாலும், அது கூட்டுத் தரத்தில் பெரும் ஆற்றல் விளைவுகளை ஏற்படுத்தி, சமூகச் சிக்கல்முறைகளையும் கலாச்சார வளர்ச்சியையும் ஊக்குவித்தது. இவ்வாறு, மனித அறிவும் நாகரிகமும் ஆற்றல் செலவினத்தைக் குறைப்பதன் மூலம் அல்ல, மாறாக அதிக அளவிலான ஆற்றலை நீண்டகால நன்மை தரும் அமைப்புகளுக்குள் செலுத்தும் வழிகளைக் கண்டுபிடிப்பதன் மூலமே முன்னேறின.

உயிரின் கதையை நுணுக்கமாக நோக்கினால், அது இரண்டாம் வெப்ப இயக்கவியல் சட்டத்திலிருந்து ( Second law of Thermodynamics) பிரிக்க முடியாதது – அதாவது, ஆற்றல் எப்போதும் அதிகச் செறிவிலிருந்து குறைந்த செறிவுக்குத் தன்னியக்கமாகப் பரவுகிறது என்பதே அந்தச் சட்டம். இதனால் பிரபஞ்சத்தின் என்ட்ரோப்பி (நுவெசழில்அமைதியின்மை) அதிகரிக்கிறது.

மேலான பார்வையில், வாழ்க்கை இந்தச் சட்டத்தை மீறுவது போலத் தோன்றும். அதாவது ஒழுங்கையும், கட்டமைப்பையும், சிக்கலையும் தானே உருவாக்குகிறது என்று எண்ண வைக்கும். ஆனால் உண்மையில் வாழ்க்கை என்ட்ரோப்பியிலிருந்து தப்பவில்லை — அதைப் பயன்படுத்துகிறது. ஒவ்வொரு உயிரும் தனது உட்புற ஒழுங்கை பராமரிக்க வெளிப்புறத்திற்கு வெப்பமும் கழிவுகளும் வெளியேற்றுகிறது. குறிப்பிடுட்டுச் சொன்னால், உயிரினங்கள் தங்கள் சூழலின் என்ட்ரோப்பியை அதிகரிப்பதன் மூலமே குறைந்த என்ட்ரோப்பியுடைய சிறிய தீவுகளாகத் தங்க முடிகிறது.



இந்தக் கோணத்தில் பார்த்தால், உயிரியல் பரிணாமம்

28 ஆம் பக்கம் பார்க்க...

**ஆற்றல் ஓட்டம் வாழ்க்கையை எவ்வாறு வடிவமைத்தது என்பதைப் புரிந்துகொள்ள, பரிணாம வரலாற்றை ஆற்றல் திறன் மற்றும் தேவையின் கோணத்தில் காணலாம்.**

| பரிணாம நிலை | முக்கிய ஆற்றல் மூலங்கள் | சராசரி ஆற்றல் வெளியீடு / திறன் | ஆற்றல் திறனின் தாக்கம் | முக்கிய மாற்றங்கள் மற்றும் பரிணாம விளைவுகள் |
|---|---|---|---|---|
| புரோகாரி யோட்டுகள் (3.5 பில்லியன் ஆண்டுகள் முன்பு) | வேதியியல் வினைகள் (கந்தகம், இரும்பு, மீத்தேன் போன்றவை) | குறைந்தது - சுமார் 2 ATP / வினை | உயிரியல் அமைப்பு எளிமை, சிறிய அளவு | ஆற்றல் குறைவால் கட்டமைப்பு சிக்கலாக மாற முடியவில்லை |
| சயனோ பாக்டீரியா (3 பி.ஆ. முன்பு) | சூரிய ஒளி (ஒளிச்சேர்க்கை) | அதிகம் - சுமார் 36 ATP / குளுக்கோஸ் | ஆக்ஸிஜன் உற்பத்தி, சுற்றுச் சூழல் மாற்றம் | ஆக்ஸிஜன் சேர்க்கையால் வளிமண்டலம் மாற்றம்; ஆற்றல் கிடைக்கும் திறன் பெரிதாக உயர்வு |
| ஈயுகாரி யோட்டுகள் (2 பி.ஆ. முன்பு) | ஏரோபிக் சுவாசம் | 18 மடங்கு அதிகம் (36 ATP எதிராக 2 ATP) | பெரிய மற்றும் சிக்கலான செல்களுக்கு வழிவகுத்தது | செல்களில் ஆற்றல் மையங்கள் (மைட்டோ காண்ட்ரியா) உருவானது |
| பல்லுயிரினங்கள் (1 பி.ஆ. முன்பு) | பல்வகை உயிரியல் மூலங்கள் | உயர் சிதை மாற்ற விகிதம் | ஆற்றல் பகிர்வு மற்றும் ஒழுங்கு படுத்தல் | திசுக்கள், உறுப்புகள், மற்றும் நரம்பு அமைப்புகள் தோற்றம் |
| கேம்ப்ரியன் வெடிப்பு (540 மில்லியன் ஆண்டுகள் முன்பு) | ஆக்ஸிஜன் அதிகரிப்பு, ஒளிச்சேர்க்கை விரிவு | ஆற்றல் மிகுதி | பன்முகத்தன்மை, புதிய உடல் வடிவங்கள் | சிக்கலான உயிரினங்கள் மற்றும் புதிய பரிணாம வழிகள் உருவானது |
| பாலூட்டிகள் (200 மில்லியன் ஆண்டுகள் முன்பு) | அதிக கலோரி உணவு, ஆக்ஸிஜன் நிறைந்த சுவாசம் | உடல் வெப்பம் தக்க வைத்தல் - 10 மடங்கு அதிக ஆற்றல் | சுறுசுறுப்பான உடல் இயக்கங்கள் | நுரையீரல், இரத்த சுழற்சி, மூளை வளர்ச்சி |
| மனிதர்கள் (200,000 ஆண்டுகள் முன்பு) | சமையல், விவசாயம், சமூக ஆற்றல் பகிர்வு | மூளை 20% ஆற்றல் பயன்படுத்துகிது | அறிவாற்றல் முன்னேற்றம் | கருவிகள், நெருப்பு, விவசாயம், கலாச்சாரம் வளர்ச்சி |





Luckyfly
January 2026
offer
AB. 749€ – 799€
40 KG Luggage Included
01791484892
www.luckyfly.eu
02342399032
info@luckyfly.eu
Allee Str 98-40 44793
Bochum, Germany


Luckyfly
Time To
Travel
GET READY
For A New Adventure
Sri Lanka
SUMMER 2026


Luckyfly
Romance in
Paradise
Sri Lanka Honeymoon Escape
உங்கள் வருமானத்திற்கு ஏற்ப எம்மிடம் வாங்கும்
விமானச் சீட்டுகளுக்கு Tickets வங்கிகடன் பெற்று தரப்படும்.



# நேற்று நீங்கள்தானே வந்து மூன்று சில்லு புட்டு வாங்கி போனீங்கள்!



மாதவி

ஒரு சனிக்கிழமை மாலை 4.00 மணி இருக்கும், அவசரம் அவசரமாக மோலில் காரை நிறுத்திவிட்டு இலங்கை உணவகம் ஏதும் இருக்கிறதா என்று நோட்டமிட்டேன்.

நல்ல கடை ஒன்று இந்த மோலில் (Mall) உள்ளது என பலர் சொன்னதால்தான் இந்த மோலுக்கு வந்தேன்.

அந்த நேரத்தில் நெத்தலி பொரியல் வாசம் மூக்கை துளைக்க ஒருவர் உணவு பாசலுடன் வந்து நான்

நிறுத்திய காருக்கு அருகில் உள்ள கார்க்கதவை திறந்து ஏறினார்.

அவரிடம் சட்டேன எங்கே அந்த உணவகம் இருக்கு என்றேன். நேரே பாருங்கள் சைனீஸ் கடை தெரியுது, அதில் இருந்து வலப்பக்கம் போங்கோ மூலைக்கடை அதுதான். சுடச் சுட வாங்கலாம் நல்ல சாப்பாடு என்றார்.

உண்மையில் ஒரு பத்திரிகையில் அல்லது அடிக்கடி யூரிப்பிலோ வரும் பெரும் விளம்பரத்திற்கு மேலாக ஒரு வாடிக்கையாளரான அவர் சொன்ன "சுடச் சுட நல்ல சாப்பாடு" என்ற வார்த்தை மனதை ஈர்த்தது.

நேராக கடைக்குச் சென்றேன். சுடச் சுட என்று சொன்வர் வார்த்தை இன்னும் ஆறவே இல்லை.

அப்படியே கடையில் உணவுகள் சுட்டபடி இருந்தது.

எனக்கு ஒரு குழல் பிட்டு தாருங்கள், என்ன கறி, சம்பலோ அதிலும் கொஞ்சம் போடுங்கள் என்றேன்.

ஒரு குழல் புட்டு போதுமா என்றார்.



ஓம் அம்மாவுக்கு ஒரு சில்லு புட்டே கூட, ஆனால் புட்டு என்றபடியால் விரும்பி சாப்பிடுவா என்று சொன்னேன்.

பேசிக்கொண்டு போகப்போகப் போக பிட்டு புட்டாக மாறியது.

விரைந்து புட்டு பாசலை தந்தார். நானும் பெற்றுக்கொண்டு திரும்பினேன்.

"அட பிள்ளை நேற்றும் நீங்கள் தானே மூன்று சில்லுப்புட்டு வாங்கிப்போனீங்கள் "என்று ஒரு குரல் அருகில் கேட்டது. திரும்பி பாரத்தேன். என் பெரியப்பாவின் வயதிருக்கும் ஒரு ஐயா. அவருக்கு சற்று இருகில் சென்று இல்லை ஐயா நான் இன்றுதான் முதல் இந்தக் கடைக்கு வந்தேன்.

நான் நேற்று வரவில்லை என்பதனை அவருக்கு உறுதிப்படுத்த முயன்றேன்.

ஆனால்

அவர் நான் சொல்வதை எதுவும் காதில் விழுத்தியதாக தெரியவில்லை, அவர் தான் ஊரிலை அந்த ஊர், பிள்ளைகள் எல்லம் திக்காலுக்கு திக்கால் இருக்கினம் என்று தொடர்ந்தார்.

அவர் நேற்றும் நீங்கள் தானா? மூன்று சில்லு புட்டு வாங்கினீங்கள் என்ற கேள்வி பேச்சுக்கு முன் மெயின் உணவுக்கு முன் ஆரம்பிக்கும் ஸ்ராட்டர் போன்றது என்பதை இப்போ புரிந்து கொண்டேன். இப்போது புட்டு வாங்க வந்தவள் என்பதுபோல் அல்லாமல் ஐந்து நிமிடம் ஐயாவையே பார்க்க வந்ததுபோல் அவருடன் கதைத்தேன்.

படத்தை போனில் சூம்பண்ணி மணிக் கணக்கில் பார்த்தாலும் தெரியாத ஒரு பூரிப்பை அவர் முகத்தில் கண்டேன்.

பிள்ளை இன்று முழுக்க இதில் இருக்கிறேன். 12 மணிக்கே இங்கு வந்து ஏதும் வேண்டி சாப்பிட்டு விட்டு இருப்பேன். பலரோடும் கதைக்க தொடங்குவேன் எவரும் காது கொடுக்க மாட்டார்கள். பிள்ளை நீ மட்டும்தான் நிண்டு கதைத்தாய். என் தாய் போல நீ அம்மா என்றார்.

நான் ஐயா உங்களிடம் போன் இருந்தால் தாருங்கள் நான் தினமும் ஒரு பத்து நிமிடம் என்றாலும் கதைக்கிறேன் என்றேன். பிள்ளை எனக்கு போனிலை கதைக்கிறதிலை இஸ்டம் இல்லை. காதும் பெரிதாக கேட்காது என்றார்.

சரி ஐயா இனி சுடச் சுட புட்டு என்ன

ஆறின புட்டு என்றாலும் இனி இந்த கடைக்கே வருகிறேன்.

வரும்போது எல்லாம் கதைக்கிறேன் என்று சொல்லிவிட்டு வாங்கின புட்டை எடுத்து சென்று தனிமையில் இருக்கும் வயதான அந்த அம்மாவிடம் கொடுத்தேன்.

அம்மா புட்டு சுடச் சுடத்தான் வாங்கினேன் ஆனால் கொஞ்சம் ஆறிப்போச்சு என்றேன்.

பிள்ளை உண்மையைச் சொன்னால் கோவிப்பியா. இந்தப்புட்டு நான் நாளைக்கு காலமைதான் சாப்பிடுவேன், ஆனால் உன்னை ஒரு முறை மாலையில் பார்த்தால்தான் எனக்கு இரவு நித்திரையே வரும் என்றா.



நாலு வார்த்தை நின்று நிதானமாக நேருக்கு நேர் நின்று வயதானவர்களுடன் பேசினால் எவ்வளவு மகிழ்ச்சி. நீங்கள் பேசவே வேண்டாம், அவர்கள் பேசுவதைக் கேட்டாலே போதும் அவர்கள் அடையும் ஆனந்தம் சொல்லமுடியாது.



விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# மலையக பிள்ளைகளின் போசாக்குக் குறைபாட்டு பிரச்சனைகள்!

**கண்மணி (அட்டன்)**

இலங்கையின் மைய மலைப்பகுதிகளில், தேயிலைச் சாகுபடிக்காக உருவாக்கப்பட்ட மலையகச் சமூகங்கள், நூற்றாண்டுகளாக வறுமை, ஒதுக்கல் மற்றும் சமூக புறக்கணிப்பின் சுமையைச் சுமந்துகொண்டு வாழ்கின்றன. இந்த சமூகத்தின் மிக நுண்மையான பாதிப்பு போசாக்குக் குறைபாடு பெரும்பாலும் பிள்ளைகளின் வாழ்வை ஆழமாகக் காயப்படுத்தியுள்ளது.

“குழந்தை பருவ ஊட்டச்சத்து குறைபாடு என்பது வெறும் உடல்நலப் பிரச்சினை மட்டுமல்ல அது சமூக சமத்துவமின்மையை பிரதிபலிக்கும் ஒரு கண்ணாடி.,” என்று யுனிசெஃப் 2023ல் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடுகிறது. அதேபோல், மலையகத்தின் குழந்தைகள் மீது நடக்கும் அமைதியான சோகத்தைப் புரிந்துகொள்வதற்கு, பசி, கல்வி, பொருளாதாரம், ஆரோக்கியம் ஆகிய அனைத்தையும் இணைத்து ஆய்வு செய்ய வேண்டியுள்ளது.

மலையகப் பகுதிகளில் வாழும் தமிழ் தொழிலாளர் சமூகங்கள் முக்கியமாக தேயிலை தோட்டங்களில் பணிபுரியும் குடும்பங்கள் தங்கள் வருமானத்தின் பெரும் பகுதியை அன்றாட வாழ்க்கைச் செலவுகளுக்கே ஒதுக்குகிறார்கள். அவர்களிடம் போசாக்கு உணவுகளை வாங்கும் ஆற்றல் குறைவாகவே உள்ளது. இதன் விளைவாக, சிறுவர்கள் மற்றும் சிறுமிகள் வளர்ச்சிக் கட்டங்களில் தேவையான புரதம், இரும்பு, விட்டமின் மற்றும் கனிமச் சத்துக்கள் இல்லாமையின் காரணமாக குறைநிலை உடல் அமைப்புடன் வளர்கின்றனர்.சமீபத்திய சுகாதார அமைச்சின் தரவுகள் படி, இலங்கையின் பொதுச் சிறுவர்களில் சுமார் 15–18% குழந்தைகள் போசாக்குக் குறைவால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆனால் மலையக தமிழ் பகுதிகளில் இந்த விகிதம் 30%க்கும் மேல் என குறிப்பிடப்படுகிறது.

“ஊட்டச்சத்து என்பது ஒரு குழந்தையின் விதி,” என சுகாதார நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர் – அது மலையக சமூகத்தில் மிகவும் உண்மையான வாசகமாகும். மலையக பிள்ளைகளின் போசாக்கு குறைபாட்டின் அடிப்படை காரணங்கள் பல அடுக்குகளாக அமைந்துள்ளன:- மலையகத் தோட்டங்களில் பணிபுரியும் பெரும்பாலான பெற்றோர் தினசரி கூலி அடிப்படையில் வாழ்கின்றனர். அவர்களின் மாத வருமானம் குடும்பத் தேவைகளை பூர்த்தி செய்ய போதாது. இதனால் அவர்களுக்கு உணவில் புரதம், பால், காய்கறி, பழம் போன்ற பொருட்களைப் பெறுவது கடினமாகிறது.

பெற்றோர்கள் போசாக்கு உணவின் முக்கியத்துவத்தை அறியாத நிலையும் மிகப்பெரிய பிரச்சனையாகும். பல குடும்பங்கள் ‘அரிசி கிடைத்தால் போதும்’ என்ற எண்ணத்துடன் வாழ்கின்றன. உணவின் சத்துத்தன்மையைப் பற்றிய அறிவு குறைவாக இருப்பதால், குழந்தைகளுக்குத் தேவையான சமநிலை உணவு கிடைப்பதில்லை. இதன் காரணமாக பெண் குழந்தைகள் அதிகமாக போசாக்கு குறைவால் பாதிக்கப்படுகின்றனர்.மேலும், பால் அல்லது முட்டை போன்ற பொருட்கள் “அது விலையுயர்ந்தது” என்ற கருத்தால் தவிர்க்கப்படுகின்றன. சில சமயங்களில் மத நம்பிக்கைகளும் உணவுப் பழக்கங்களில் தடை ஏற்படுத்துகின்றன.



மலையகத்தின் சில தூர பகுதிகளில் சுத்தமான குடிநீர், நவீன சமையல் வசதிகள், சுகாதார மையங்கள் கிடைப்பதில்லை. இது சுத்தமின்மை, வயிற்றுப்போக்கு போன்ற நோய்களை ஏற்படுத்தி, குழந்தைகளின் சத்துக்கள் உறிஞ்சும் திறனை மேலும் குறைக்கிறது.போசாக்கு குறைபாடு என்பது வெறும் “பசி” அல்ல அது ஒரு தொடர் நோய் வலையமைப்பு. போசாக்கு குறைவான குழந்தைகள் பெரும்பாலும் குறைவான உயரம், எடை மற்றும் தசை வளர்ச்சியுடன் காணப்படுகின்றனர். அவர்கள் வளர்ந்தபின் கூட உடல் சக்தி குறைவாகவே இருக்கும்.

கல்வி துறையில் பள்ளிப் படிப்பை நிறு த்தும் விகிதம் அதிகரிக்கிறது, பெண் குழந்தைகளின் இளவயது திருமணம் வாய்ப்புகளை உயர்த்துகிறது, வேலை வாய்ப்பில் சமத்துவமின்மையை உருவா க்குகிறது. இதனால் சமூகத்தில் வறுமையின் வட்டம் தொடர்கிறது – வறுமை மற்றும் ஊட்டச்சத்து குறைபாட்டின் சுழற்சி. இலங்கை அரசு “போஷணம் 2020”, “திரிபோஷா” போன்ற திட்டங்கள் மூலம் குழந்தைகளுக்கு இலவச சத்துணவு வழங்க முயன்றாலும், மலையகப் பகுதிகளில் அது முழுமையாகச் சென்றடையவில்லை. பெரும்பாலான குழந்தைகள் பள்ளிக்குச் செல்லாமை, பெற்றோர்கள் வேலைக்கு சென்றபோது கவனிப்பு இல்லாமை போன்ற காரணங்களால் இந்த திட்டங்கள் பயனளிக்கவில்லை.மேலும், சுகாதார அலுவலகங்கள் மற்றும் கிராம சுகாதார செவிலியர்கள் அடையும் தூரமும் இப்பிரச்சனைக்கு தடையாகவே இருக்கிறது.

இந்த வாக்கியம் மலையக சமூகத்தின் எதிர்காலத்தைக் குறிக்கிறது. மலையக தமிழ் பிள்ளைகளின் போசாக்குக் குறைபாடு என்பது ஒரு சமூக நீதிப் பிரச்சனையாகும். இது உணவு பற்றாக் குறை மட்டுமல்ல, சமத்துவம், கல்வி, ஆரோக்கியம் ஆகியவற்றில் உள்ள பின்தங்கிய நிலையை வெளிப்படுத்துகிறது.போசாக்கு குறைவின் வேர்கள் பொருளாதார வறுமை, கல்வி அறிவின்மை, சமூக பழக்கவழக்கங்கள் ஆகியவற்றில் உள்ளன. ஆனால் தீர்வுகளும் இதே சமூகத்திலிருந்து தோன்றக்கூடியவை – பெண்கள், ஆசிரியர்கள், தாய்மார்கள், சமூக தலைவர்கள் இணைந்து செயல்பட்டால் மட்டுமே மாற்றம் சாத்தியம். இலங்கையின் மலையகம் ஒருநாள் பசியின் அடையாளமாக அல்ல, சத்துணவின் உதாரணமாக மாற வேண்டும். அதற்கு கல்வி, சுகாதாரம், சமத்துவம் ஆகிய மூன்று தூண்களும் ஒன்றிணைந்திருப்பதே அவசியம்.

மேலும் அரசாங்கம் இது சம்பந்தமாக அதிகமான அக்கறையை மலையக சமூகத்தின் மீது காட்ட வேண்டும் , எதிர்கட்சிகள் இது சம்பந்தமாகவும் கேள்வி கேட்கவேண்டும் . மாற்றம் என்பது கேள்விகளில் இருந்தே பிறக்கிறது . ஒரு நல்ல கேள்வி ஒரு வளமான வாழ்வை உருவாக்கும் .இதோ இந்த அரசாங்கத்தை பார்த்து நான் கேட்கிறேன் ” எங்கள் பிள்ளைகளின் ஊட்டச்சத்து குறைபட்டு பிரச்சனையை போக்க ,உங்களில் நிகழ்கால செயற் திட்டம் என்ன ?

**”ஆரோக்கியமான குழந்தை ஒரு வலிமையான தேசத்தின் விதை.”**



விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.




# இணையமே நம்முள் வாழ்கிறது!

## AI ஜிமினி மற்றும் ChatGPT: மனித முகம் அறிந்த கலைஞர்கள் தொழில்நுட்பம் நம்மை பிரதிபலிக்கும் கண்ணாடியா, இல்லை நம்மை மாற்றும் சக்தியா?

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்பு, இந்தியாவின் வட மாநிலத்தைச் சேர்ந்த ஒரு இளம் பெண் தனது புகைப்படத்தை AI ஜிமினி எனப்படும் செயற்கை நுண்ணறிவு செயலியில் திருத்தக் கோரினார். "Naano Banana" என்ற தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, முகத்தில் சிறு மாறுதல்களும், நிறத் திருத்தங்களும் செய்யும்படி கேட்டார். ஆனால் முடிவாக AI திருத்திய புகைப்படம் அவருக்கு அதிர்ச்சியை அளித்தது – ஏனெனில் அந்தப் படத்தில் அவரது தோள்பட்டையில் ஒரு புதிய மச்சம் தோன்றியிருந்தது! அச்சமடைந்த அவர், "AI ஜிமினி எனது தனியுரிமையை மீறியுள்ளது" என சமூக ஊடகங்களில் பதிவிட்டார். இதனைத் தொடர்ந்து "AI அபாயகரம்", "தரவு திருட்டு", "முக அடையாள களவாடல்" போன்ற வார்த்தைகள் இணையத்தில் வெடித்தன.அந்தச் சம்பவம் ஒரு பெரிய கேள்வியை எழுப்புகிறது – நாம் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகிறோமா, இல்லை அது நம்மைப் பயன்படுத்துகிறதா?

**அருண் செல்வராஜ்**
(அட்டன்– பொகவந்தலாவை)

இன்று ஒவ்வொருவரும் ஒரு ஸ்மார்ட் போன் வைத்திருக்கிறோம். அதில் நாம் ஒரு Google கணக்கை திறக்கும் போதே, அந்த நிறுவனம் நமக்கென தனித்த சர்வர் (Server) ஒன்றைத் தொடங்குகிறது.அந்த சர்வர் என்ன செய்கிறது தெரியுமா?நாம் எடுக்கும் ஒவ்வொரு புகைப்படமும், நம்முடைய GPS இடம், அழைப்புகள், ஆவணங்கள் – அனைத்தும் நம்முடைய கணக்கில் பதிவு செய்யப்படுகின்றன.Google Photos போன்ற சேவைகள் நம்முடைய முகங்களைப் புரிந்து, நம்முடைய புகைப்படங்களை வருடங்கள் ரீதியாக தொகுத்து வைக்கின்றன. இதுவே ஜெமினி போன்ற AI களுக்கு ஒரு பெரிய தரவுத் தளமாகிறது.அதாவது, நாம் ஒரு படம் கொடுத்து "இதில் எனது முகத்தை சிரிப்பாக மாற்றுங்கள்" என்றால்,

ஜெமினி முதலில் நம் புகைப்படத் தொகுப்பிலிருந்து நம் முக அமைப்புக்கு மிக அருகில் உள்ள படங்களைத் தேடுகிறது.

அதில் இருந்து – கண்கள், மூக்கு, தோல் நிறம், முக வடிவம் ஆகியவற்றை பிரிக்கிறது.அவற்றை "Facial Recognition & Segmentation" எனப்படும் முறையில் அடையாளப்படுத்துகிறது.பின்னர் "Image Generation Model" மூலம் தேவையான மாற்றத்தைச் செய்கிறது.இதன் விளைவாக, படம் நிஜமாக எடுத்தது போலவே மாறி விடுகி றது. ஜிமினி அல்லது ChatGPT போன்ற AI மாடல்கள் "Diffusion Model" அல்லது "GANs" எனப்படும் நரம்புக் கம்பி அமைப்புகளைப் பயன்படுத்துகின்றன.இவை பல கோடி புகைப்படங்களை ஆய்வு செய்து, ஒவ்வொரு முகத்தின் பிம்பத்தையும் புரிந்துகொள்கின்றன.உதாரணமாக: கண் சாயல் – இயற்கை வெளிச்சத்துடன் பொருந்துமா என்று பார்க்கும்.தோல் வண்ணம் ஒளி, நிழல், பிரதிபலிப்பு ஆகியவற்றுடன் இணைக்கும்.முக வெளிப்பாடு நம் உணர்ச்சியை பிரதிபலிக்கும் வகையில் மாற்றும்.இது ஒரு கலைஞனைப் போல சிந்திக்கும், ஒரு விஞ்ஞானியைப் போல கணக்கிடும், மற்றும் ஒரு தத்துவஞானியைப் போல வெளிப்படுத்தும் நுண்ணறிவு.

AI நம் புகைப்படங்களை திருத்தும் பொழுது, அது நம் முந்தைய புகைப்படங்களையும், நம் கணக்கில் சேமித்துள்ள தகவல்களையும் பயன்படுத்தும் வாய்ப்பு உண்டு. அதாவது நாம் தான் புகைப்படங்களை அளிக்கிறோம், நம் முகம், நிறம், முக வடிவம் போன்ற அனைத்து தகவல்களையும் பதிவு செய்ய அனுமதிக்கிறோம்.ஆனால் திருத்தப்பட்ட படத்தில் ஏதாவது கூடுதல் அம்சம் வந்துவி ட்டால், உடனே நாம் "AI எனது தனியுரிமையை மீறியது" என்று குறை கூறுகிறோம். ஆனால் யார் அந்த தகவல்களை அளித்தது நாம்தான்.



இதுவே நவீன உலகின் மிகப்பெரிய உண்மை:நாம் தானாகவே நம் தனியுரிமையை உலகத்துக்குக் கொடுக்கிறோம் – ஒரு "agree" பொத்தானை அழுத்துவதன் மூலம்.ஒவ்வொரு புதிய செயலியும் நம்மை வசதியாக்கத்தான் உருவாக்கப்படுகிறது. ஆனால் நாம் அதை அறியாமலோ, அலட்சியமாகவோ பயன்படுத்தினால் அது ஆபத்தாக மாறும்.சில செயலிகள் நம் குரலையும் பதிவு செய்கின்றன.

சில செயலிகள் நம் முகத்தையும், நம் புன்னகையையும், நம் வீட்டு பின்னணியையும் பகுப்பாய்வு செய்கின்றன.

இவை அனைத்தும் நமக்குத் தெரியாமல் ஒரு பெரிய "டிஜிட்டல் சுயவிவரம்" உருவாக்குகின்றன.

இதுவே "சமூகமயப்படுத்தப்பட்ட மனிதன்" என்ற புதிய நிலையை உருவாக்குகிறது –

அதாவது நாம் இணையத்தில் மட்டும் இல்லாமல், இணையமே நம்முள் வாழ்கிறது.நாம் ஸ்மார்ட் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகிறோம் என்றால், அதற்கான அடிப்படை அறிவு அவசியம்.

எந்த செயலி எதை அணுகுகிறது என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.உங்கள் புகைப்படங்களை கிளவுட் சேமிப்பிலிருந்து அடிக்கடி நீக்குங்கள்.முகம் அல்லது உடல் அடையாளம் அடங்கிய புகைப்படங்களை AI செயலிகளுக்கு அனுப்பும்போது, அதன் privacy policy வாசியுங்கள்.முக்கியமாக —"இது சுலபம் என்பதற்காக, பாதுகாப்பை மறக்காதீர்கள்."AI ஜிமினி மற்றும் ChatGPT போன்ற நுண்ணறிவுகள் நம் கற்பனையை கணினி மூலம் வெளிப்படுத்தும் அதிசய கருவிகள்.ஒரு சொல், ஒரு படம் போதும் – அவை நம் உணர்ச்சியையும் முகத்தையும் நுணுக்கமாக உருவாக்கும்.



# ஜெர்மனியில் தண்மலர்த் தடாகம் கவிதை நூல் வெளியீட்டு விழா





'தண்மலர்த் தடாகம்' என்னும் மரபுக் கவிதை நூல் வெளியீட்டு விழா 11.10.2025 அன்று யேர்மனி டோட்மூண்ட் நகரில் அமைந்துள்ள 'தமிழர் அரங்கம்' என்னும் மண்டபத்தில் மண்டபம் நிறைந்த மக்களோடு மிகச் சிறப்பாக நடைபெற்றது. இவ் விழாவை ஜெர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கம் நடத்தியது. மங்கல விளக்கேற்றலின் பின் மௌன அஞ்சலி இடம்பெற்றது. தொடர்ந்து தமிழ்த்தாய் வாழ்த்து , வரவேற்பு நடனம், வரவேற்பு உரை ஆகியன இடம்பெற்றன. ஜெர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர் திரு. பொன். சிறி ஜீவகன் அவர்கள் தலைமை உரையாற்றினார். தலைமை உரையைத் தொடர்ந்து அச்சங்கத்தின் செயலாளர் திரு.சி.சிவவினோபன் அவர்கள்



நூலாசிரியர் – கவிஞர் இரா.சம்பந்தன்



கவிஞரைப்பற்றியும் அவரின் முன்னைய நூல்கள் பற்றியும் நகைச்சுவையோடு மிக அழகாக விமர்சித்துச் சபையோரின் பாராட்டுகளைப் பெற்றார்.

முதல் பிரதியை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட புங்குடுதீவு தொண்டர் திருநாவுக்கரசு சர்வோதய நற்பணி ஒன்றியத்தின் சர்வதேச ஒருங்கிணைப்பாளர் திரு. மகாலிங்கம் அவர்கள் பெற்றுக்கொண்டு சிறப்புரை வழங்கியதோடு கவிஞருக்கு தங்கமாலை அணிவித்துக் கௌரவித்தார். சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட 'மண்' சஞ்சிகையின் பிரதம ஆசிரியர், சிறப்புரை வழங்கியதோடு கவிஞர் இரா. சம்பந்தன் அவர்களுக்கு விருதினை வழங்கிக் கௌரவித்தார். ஜெர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கம் கவிஞருக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்ததோடு பாராட்டுப்பத்திரமும் வழங்கியது. நூலுக்கான ஆய்வுரையை யேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் பொரு ளாளர் கவிச்சுடர் அம்பலவன் புவனேந்திரன் அவர்கள் சிறப்பாக வழங்கியிருந்தார். நூலுக்கான சிறப்புப் பார்வையை இலக்கிய ஆளுமை தமிழ் வான் அவை நிறுவுநர் திருமதி. சந்திர கௌரி சிவபாலன் (கௌசி) அவர்கள் சிறப்புடன் வழங்கியிருந்தார். நூலாசிரியருக்கான வாழ்த்துரைகளையும், வாழ்த்துக் கவிதைகளையும் பலர் வழங்கியிருந்தனர். வாழ்த்துரை வழங்கிய அனைவருக்கும் நூலாசிரியர்தனது முன்னைய கவிதை நூல்களை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. விழாவுக்கு மெருகூட்டும் வகையில் ஜெர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் உபதலைவர் திருமதி. சாந்தினி துரையரங்கனும், இராட்டிங்கன் தமிழாலய நிருவாகி திருமதி கலையரசி லிங்கேஸ்வரன் அவர்களும் சிறப்பாக நிகழ்வினை தொகுத்து வழங்கியிருந்தார்கள். இந்நூல் வெளியீட்டு விழாவில் பல கவிஞர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், பத்திரிகை, சஞ்சிகை, வானொலி, அதிபர்களோடு பல்துறை சார்ந்த நிபுணர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

நிகழ்வில் பலமுறை இரா.சம்பந்தன் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டது. வந்திருந்த அனைவருக்கும் சிற்றுண்டி கோப்பி வழங்கப்பட்டது நூலாசிரியரின் ஏற்புரையைத் தொடர்ந்து சகலமக்களின் பாராட்டுகளோடு விழா நிறைவு கண்டது.

**கௌசி- ஜெர்மனி**

## 12 ஆண்டுக்கு பின்னர் பூத்து குலுங்கும் குறிஞ்சி மலர்கள்



12 ஆண்டுகளுக்கு ஒரு முறை பூக்கும் பூவான நீலக்குறிஞ்சி மலர்கள் தற்போது இலங்கையின் மத்திய மலைநாட்டின் நுவரெலியா மாவட்டத்தில் 2,100 மீட்டருக்கும் அதிகமான உயரத்தில் ஒளிந்திருக்கும் தேசிய பூங்காவின் ஹோட்டன் சமவெளியில் அதிகமான இடங்களில் பூக்கத் துவங்கியுள்ளன.

ஹோட்டன் சமவெளி உலகத்தில் மிக அரிய உயிரியல் சூழல்களுக்குள் ஒன்றாக கருதப்படுகிறது. இதில் 12 ஆண்டுக்கு ஒருமுறை பூக்கும் நீலக்குறிஞ்சி மலர்கள் கடந்த 2013 ஆம் ஆண்டு பூத்ததாகவும் அதன் பின்னர் இவ்வருடம் (2025) பூத்து உள்ளது எனவும் மீண்டும் 2037 ஆண்டு பூக்கும் எனவும் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்களுக்கும் மேலும் தெரிவிக்கின்றனர்.



டொட்மூண்ட் மாநகரில்....
தமிழர் அரங்கம்
சனிக்கிழமை 15.00- 18.00
திரையிசை நடனம்
(Cinimatic Dance)
வெள்ளிக்கிழமை 18:00–19:00
கீபோர்ட் (Keyboard)
அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகிறது.சிறுவர்களில் இருந்து பெரியோர்கள் வரை இணைந்து கொள்ளலாபம்
Für Kinder und Jungendliche und Erwachsene!
6€ Pro Stunde
வெள்ளிக்கிழமைகளில்
Jeden Freitag
தமிழர் அரங்கம்
Rheinische Srt.76-80
44137 Dortmund
Info:0151 633 633 33
0178 146 006 3
தமிழ் மொழி (Tamillsche Sprachunterricht)
வெள்ளிக்கிழமை 16:00–17:45
Free
அ ஆ இ ஈ உ
சிறார்களுக்கும்,இளையோர்களுக்கும், எளிமையான முறையில் தமிழ் கற்பிக்கப்படும்.
Für Kinder und Jungendliche!Auch speziell jugendliche, die sich mit der tamilische Sprache nicht auskennen
யேர்மன் மொழி (Deutsch für Anfänger / Innen)
ICH LERNE DEUTSCH
6€ Pro Stunde
வெள்ளிக்கிழமை 17.45 –19.15
யேர்மன் மொழியில் பேசவும் எழுதவும் கற்பிக்கப்படும்
யேர்மன் குடியுரிமை பெறுவதற்கு பயன் உள்ளதாக அமையும்

# எங்கட ஆச்சி

08





காரைக்கவி
கந்தையா
பத்மானந்தன்

எங்கட ஆச்சி முந்தி ஆம்பிளைப் பிள்ளையோ பொம்பிளைப் பிள்ளையோ மூண்டு விசயம் கட்டாயம் தெரிய வேணும் எண்டு நெடுகவும் சொல்லுவா. அந்த மூண்டு விசயமும் என்னண்டால் சமைக்கிறது சயிக்கிள் ஓடுறது மற்றது நீந்திறது. இந்த மூண்டு விசயமும் ஒரு ஆளுக்குத் தெரிஞ்சா எவரும் எங்கையும் எந்தச் சந்தர்ப்பத்திலும் மற்றவையில தங்கி இருக்காமல் சீவிக்கலாம் எண்டுவா. அது மட்டும் இல்லை ஒருத்தன் உந்த மூண்டையும் செய்வான் எண்டால் அவன்ரை உடம்பும் மனசும் நல்லா இருக்கும். அவனும் அவனைச் சுத்தி இருக்கிறவையும் சந்தோசமாக இருப்பினம் எண்டுவா.

எங்கட ஊரில நாங்கள் கிணத்து தண்ணியைத்தான் நம்பி இருக்கிறனாங்கள். அதிலும் மாரி காலத்தில கிணறு தளந்தட்டிக் கொண்டு நிக்கும். தண்ணி அள்ளேக்கை தப்பித்தவறி ஆரும் கிணத்துக்கை விழுந்தால் அவருக்கு நீந்தத் தெரிஞ்சாத் தப்பலாம். இல்லாட்டில் நீந்தத் தெரிஞ்சவர் ஆரும் அந்த வீட்டில இருந்தாக் குதிச்சு விழுந்த ஆளைக் காப்பாத்தலாம். இப்பிடி ஒருத்தருக்கும் நீந்தத் தெரியாட்டில் உதவி கேட்டு கத்திக் குழற வேணும். ஆரும் வரேல்லை எண்டால் அந்தச் சீவன் அநியாயமாப் போய்ச் சேத்திடும்.சில இடங்களில நீந்தத் தெரியாட்டிலும் காப்பாத்த வேணும் எண்டு குதிச்சு அநியாயமாய்ப் போய்ச் சேர்ந்த சீவன்கள் எத்தினையோ. நீந்தத் தெரியாம ஆத்தில குளத்தில கடலில அநியாயமாப் போச்சேர்ந்த எத்தனையோ சம்பவங்களை நாங்கள் அடிக்கடி கேள்விப்படுறம். உதால தான் எங்கட ஆச்சி நீச்சல் கட்டாயம் தெரிய வேணும் எண்டிறவ.

மற்றது சயிக்கிள் ஒட்டம் முக்கியம் எண்டிறவ. முந்தி எங்கட ஊரில இப்ப மாதிரி அடிக்கடி பஸ் ஓடுறேல்லை. கோயில் குளத்துக்கு ஆசுப்பத்திரிக்கு கடைகண்ணிக்கு போறதுக்கு நாங்கள் சயிக்கிள்தான் பாவிச்சனாங்கள். சயிக்கிள் இருந்தா ஓடத் தெரிஞ்சா பஸ்ஸுக்கு அதுக்கு இதுக்கெண்டு காத்துக்கொண்டு காசையும் நேரத்தையும் கரியாக்கத் தேவையில்லை எண்டு ஆச்சி சொல்லுவா.முந்தி சண்டை நடக்கேக்கை இடம்பெயர்ந்து சீவிக்கேக்கை கனபேருக்கு சயிக்கிள்தான் அவையின்ரை சீவியத்துக்கு உயிர் வாழுறதுக்கு கை குடுத்தது. முந்தி நாங் கள் யாழ்ப்பாணக் கம்பசில படிக்கேக்கை அப்ப இந்தியன் ஆமி வேலிவளியை நிண்ட காலம் நாங்கள் ஒவ்வொரு நாளும் சயிக்கிளிலைதான் போய்வாறனாங்கள்.எங்கட ஊருக்கும் தின்னவேலிக்கும் போய்வர கிட்டத்தட்ட நாப்பது கிலோமீற்றர் வரும் . வன்னியில் இருந்த காலத்தில் சயிக்கிளில் போய்வராத ஊரே கிடையாது. ஆச்சி அப்ப பேசி ஏசி எனக்கு சயிக்கிள் ஓடப்பழக்கினதால நான் தப்பிப் பிழைச்சனான் எண்டுதான் சொல்லுவன். இப்ப நான் எங்கயும் போகச் சயிக்கிளை எடுத்தா வீட்டம்மா உங்களுக்கு என்ன விசரே ஆரும் என்ன நினைப்பினம் எண்டுவா. அவவிலையும் பிழையில்லை சயிக்கிளிலை வேலைக்குப் போனால் அங்கை இஞ்சை போனால் கவுரக்குறைச்சல் எண்டு நினைக்கிற கனபேர் இருக்கினம்.

ஆச்சி சொல்லுற மற்ற விசயம் சமையல். அதைப் பற்றி கதைக்கத்தான் வெளிக்கிட்டனான். சமை எண்டால் பக்குவப்படல் எண்டு அகராதி சொல்லுது. அதாலதான் நாங்கள் சாமத்தியப்பட்ட பிள்ளையளை பக்குவப்பட்டிட்டினம் எண்டிறனாங்கள். அப்ப சமையல் எண்டாலும் பக்குவப்படுத்தல் எண்டு அர்த்தம் எடுக்கலாம். என்னத்தை பக்குவப்படுத்திறது எண்டால் சாப்பாட்டின்ரை சுவை மணம் நிறம் சத்துக்களைப் பக்குவப்படுத்திறது எண்டு பொருள். உது கனபேருக்கு விளங்கிறேல்லை எப்பிடி எண்டான்ன அவிச்சுக் கொட்டினாச் சரி எண்டு நினைப்பினம். உதாலதான் உங்கை எத்தனையோ வீடுகளிலை சண்டை சச்சரவு வந்து அடிபட்டு ஏன்



கனக்கப்போவான் நேற்று ஒரு இடத்தில கொலையிலை கூட முடிஞ்சிருக்கு எண்டு ஒரு செய்தி பாத்தனான்.

சமையல் மனிசன்ரை கூர்ப்பில முக்கியமான ஒரு விசயம் எண்டு ஆராய்ச்சி செய்தவை சொல்லுகினம். அப்ப ஒழுங்காச் சமைக்கத் தெரியாதவையை கூர்ப்படையாதவை எண்டாலாமோ எண்டு நீங்கள் முணுமுணுக்கிறது எனக்கு கேக்குது. உண்மையா ஒழுங்கா சமைக்கத் தெரியேல்லை எண்டால் கூர்ப்படையேல்லை எண்டுதான் சொல்ல வேணும். நெருப்பைக் கண்டுபிடிக்கேக்கையே மனுசன் சமைக்கப் பழகிப்போட்டான் எண்டு அப்பு சொல்லுறவர். இப்ப என்னண்டால் நெருப்பில்லாமலே அவிக்காம பொரிக்காம சமைக்கிற முறையள் கனக்க வந்திட்டுது.உங்கை இப்பவும் கனபேர் ஐயோ என்ரை பிள்ளைக்கு சுடுதண்ணி கூட வைக்கத்தெரியாது எண்டு பெருமையாச் சொல்லுவினம். உப்பிடிப் பெருமை பேசுறவைக்கு நல்லா சுடுதண்ணியை கொதிக்க கொதிக்க மூஞ்சையில ஊத்த வேணும் எண்டுவா ஆச்சி பெரிய அவுறுகம் விடுவினம். உப்பிடி வீண் விசும்பு விட்டு வளத்ததுகள்தான் போற போற இடங்களில குடும்பம் நடத்தத் தெரியாம குழம்பித் தெருவில நிக்குதுகள் எண்டுவா.சிலர் நினைப்பினம் ரெக்ளவேயில எடுத்துச் சாப்பிடலாம் இல்லாட்டில் ஹோட்டலிலை போய்ச்சாப்பிடலாம் என்னத்துக்குச் சமைச்சுக் கஸ்ரப்பட வேணும் என்னத்துக்கு சட்டி பெட்டி கழுவ வேணும் எண்டு நினைப்பினம். உப்பிடி நினைச்சு கடைவழியை அவன் தாறதை எடுத்துத் திண்டவை அதை ஒரு நாகரீகம் எண்டு நினைச்சவை பிறகு கண்ட கிண்ட வருத்தமும் வந்து பிறகு ஒண்டுமே தின்னேலாமல் உத்தரிக்கிறதை நாங்கள் எத்தனையோ இடங்களில பாக்கிறம்.

ஆச்சி சொன்ன மாதிரி சமைக்கத் தெரிஞ்சா எங்களுக்கு விரும்பினதை விரும்பின நேரத்தில சமைச்சுச் சாப்பிடலாம். அதால செலவும் சிக்கனமாகும் உடம்பும் கண்ட கிண்ட வருத்தம் ஒண்டும் வராமல் இருக்கும். உங்கை சமைக்கத் தெரியாத ஆக்கள் லொக்டவுண் நேரத்தில எவ்வளவு கஸரப்படுகினம்.வெளிநாடு வழியை போன எங்கட பெடியள் கனபேர் சமைக்கத் தெரிஞ்சதால தப்பிப் பிழைச்சவங்கள். பிறகு வடிவு மட்டும் பாத்து சமைக்கத் தெரியாத பொம்பிளையளைக் கூப்பிட்டு இப்பவும் சமைச்சுக் குடுத்து குடும்பம் நடத்திறாங்கள் எண்டு என்ரை கூட்டாளி ஒருத்தன் பகிடியாச் சொல்லுறவன்.உது மாதிரி கண்டபடி எக்கச்சக்கமாச் சீதனம் குடுத்து கட்டினே கன பொம்பிளையள் என்ன என்ரை அப்பன் ஆத்தை இவ்வளவு சீதன பாதனத்தை தந்தது உங்களுக்குச் சமைச்சுப் போடவே எண்டு சண்டை போடுவினம். அப்பிடியான இடங்களில சமைக்கத் தெரிஞ்ச ஆம்பிளையள் ஒரு மாதிரி சமைச்சுக் கிமைச்சு குடும்ப வண்டில மூச்சு முட்ட இழுத்து ஓடுறாங்கள்.எங்கட ஒரு வெள்ளைக்காறக் கொம்பனியில வேலை செய்யிற என்ரை சிநேகிதி ஒருத்தி ஆம்பிளையளும் பொம்பிளையளும் சமமெல்லே. அப்ப சேர்ந்தெல்லோ சமைக்க வேணும். அதென்ன அடுப்பூதிறது பொம்பிளையளின்ரை வேலை எண்ட மாதிரி கன ஆம்பிளையள் நினைக்கினம் எண்டுவா. அவ சொல்லுறது உண்மை தான் அதனாலதான் ஆச்சி சொல்லுறவ ஆம்பிளையோ பொம்பிளையோ சமைக்கத் தெரிய வேணும் எண்டு. உண்மையில ஆணும் பெண்ணும் சேர்ந்து சமைச்சா அலுப்பிருக்காது எண்டிறன்.

ஆனாலும் ஒரு விசயத்தை ஒத்துக் கொள்ள வேணும். அநேகமா எங்க எந்த இடத்திலையும் எந்தக் ஹோட்டலில பாத்தாலும் சமையல்காறர் ஆம்பிளையளாத்தான் இருப்பினம். அவை சமைச்சுக் குடுக்கிறதை பெண்டுகள் சாப்பிட்டுப் போட்டு ஆஹா ஓஹோ எண்டு போட்டு தங்கட வீட்டு ஆம்பிளையளைப் பாத்து நீங்களும் இருக்கிறியளே எண்டு கருத்துச் சொல்லுவினம். அதாலதான் நல்ல சமையலை நளபாகம் ஆக்கள் எண்டு சொல்லுவினம். நளனின்ரை சமையலிலை தமயந்தி மட்டும் இல்லை நாடே கட்டுப்பட்டுக் கிடந்தது எண்டு ஆச்சி சொல்லுறவ. முந்தி நான் படிப்பிக்கிற காலத்தில பள்ளிக்கூட நிகழ்வுகளுக்கு சமைக்கேக்கை ரீச்சர்மார் கறி கூட்ட என்னைத்தான் கூப்பிடுறவை. கொஞ்சம் பொறுங்கோ... நேரம் எல்லே போகுது இன்னும் உலை வைக்காம உங்கை என்னத்தை எழுதிக்கிளிக்கிறியள் எண்டு வீட்டம்மா கத்துறா . சமைச்சு முடிய பிறகு மிச்சத்தை எழுதிறன். சோறு முக்கியம் கண்டியளோ.

Nandy's Catering & Partyservice
NANDY'S
CURRY'S & MORE
WWW.NANDYS.DE
Düsseldorf
ஒரே குடையின் கீழ் எங்கள் சேவை
உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும் குன்றாத சுவையுடன், சுடச் சுடப் பரிமாறுகின்றோம்.
இலங்கை, இந்திய, ஐரோப்பிய உணவுகளையும் தயாரித்து வழங்குகின்றோம்.
பரிமாறுதல் ஒரு கலை அது எமது நிறுவனத்தின் கைவந்தகலை!
உணவு விநியோகம் பரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள் விழாவை திட்டமிட்டுதல், திருமணமேடை, மண்டபம் மற்றும் மண்டபச் சோடனைகள் மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு உதவ ஆயத்தமாக உள்ளோம்.
தொடர்புகளுக்கு: 0173-7424955
0211-7691974
www.Nandys.de | email: info@nandys.de



நீண்டகாலம் மக்கள் மனதில் நம்பிக்கை ஒளி பரப்பும் தங்க நகையகம்
Jaffna Bazar Jewellery
தங்க நகைகள் என்றால் தங்கள் மனதில் நிலைத்து இருப்பவர்கள் நாங்கள் என்றும் நாடுகள்
பொன்னுருக்கு, காதுகுத்து வைபவங்களுக்கு எம்மை அழையுங்கள்
புதிய வரவு!
புத்தம் புது அழகிய டிசைன்களில் தங்க நகைகள்
திருத்த வேலைகள் குறுகிய காலத்துக்குள் செய்து தரப்படும்
Branch:
Jaffna basar.
Taunus Str 31,
60329 Frankfurt Main
ஆலயங்களுக்கு தேவையான பூஜை பொருட்கள் எம்மிடம் நிறைவாக உண்டு
உங்கள் இலத்திற்கு தேவையான மளிகைப் பொருட்கள் என்றும் போல் மலிவு விலையில் கிடைக்கும்




KADHIR
Laila
Basmati Rice
ஆலயங்களுக்கு தேவையான பூஜை பொருட்கள் எம்மிடம் நிறைவாக உண்டு
பசுமையான மரக்கறி வகைகள்
கடல் உணவு வகைகள்
அனைத்தும் எம்மிடம் தரமாக மலிவாகக்கிடைக்கும்
Jaffna Bazar
Jaffna Bazar, Kaiser Straße.49 ,
69329 Frankfurt Main
Tel: 069 25 62 6353 \ 0049 69 25626353
0049 179 4792961 \ 0049 151 71520425

கலாநூரி
திவ்யா சுஜேன் (இலங்கை)

# பாரதி ஒரு பெரு வரம்; அவன் சித்தன் மட்டுமல்ல சிறந்த மருத்துவன்



பொருளில்லாப் பொருளின் விளை வில்லா விளைவாய் விளங்கும் எல்லையற்ற சக்தியை தன் உயிரிலும் உள்ளத்திலும் நிறைந்திருக்கச் செய்ததால் பாரதி இன்றும் எம் வாழ்வின் சக்தியாய் வாழ்ந்து கொண்டிருக்கிறார். எது வரினும் எப்படித் தான் இத்தனை சுவை பட வாழ்ந் தான் பாரதி என்று எண்ணாத நாளில்லை. வியக்காத பொழுதில்லை. ஆனால் அந்த சூட்சமத்தை நமக்கும் சொல்லித்தர பாரதி கவிதைகள் பல துணை நிற்கின்றன.

"இப்போது எனது உயிரிலே வேகமும்
நிறைவும் பொருந்தி இருக்கின்றன.
இப்போது எனது உடலிலே சுகமும்
வலிமையையும் அமைந்திருக்கின்றன.
இப்போது எனது உள்ளத்திலே தெளிவு
நிலவுகின்றது.
இது எனக்குப் போதும்.
சென்றது கருத மாட்டேன்' நாளை
சேர்வது நினைக்கமாட்டேன் "
- வசனகவி

இந்த மந்திரச் சொற்களை நாமும் உச்சரிக்கும் போதெல்லாம் கணம் தோறும் வாழும் கலையறிய வேண்டும் என்ற வேகம் விளையும்.

சோர்வு தருவது , ஊக்கம் தருவது, எழுச்சி தருவது , கிளர்ச்சி தருவது, மகி ழ்ச்சி தருவது , சினம் தருவது, வெறுப்பு தருவது, அச்சம் தருவது, பகை தருவது , காதல் மூட்டுவது , கொல்வது, உயிர் தருவது என ஆக்கம் ஊக்கம் யாவும் சக்தியின் செய்கை. எல்லாமே சக்தி யின் செயல்கள் தான் என்று உணர்ந்தால் நம்மை இறுகப் பற்றத் துடிக்கும் கவலை என்னும் பேய் விட்டு விலகி ஓடி விடும்.

எனவே நமக்குள் ரசமுள்ள செய்கை , இன்பமுடைய செய்கை , வலிய செய்கை, சலிப்பில்லாத செய்கை , விளையும் செய்கை , பரவும் செய்கை, கூடிவரும் செய்கை , இறுதியற்ற செய்கை என துன்பமில்லா நிலையை தரும் செய்கை களை சக்தி அருள வேண்டும்.

உயிரிலும் உள்ளத்திலும் மட்டுமல்ல உடலிலும் சக்தியைக் காக்க வேண்டும்.

" உடலைக் கட்டு உயிரைக் கட்டலாம். உயிரைக் கட்டு உள்ளத்தைக் கட்டலாம். உள்ளத்தைக் கட்டு சக்தியைக் கட்டலாம். " எனவே இந்த உடலை நோய் தின்ன விடாது காப்பது நம் கடன். அப்படியே நோய் வரினும் சக்தியை சரண்புகுந்தால் கெட்ட பாவம் விலகும். ஒளியேறி மீண்டும் சுடர் விடும்.

பாரதி தனக்காக கவிதை பாடவில்லை. நமக்காக பாடினான். மனித குலத்தின் நலனுக்காக வேண்டினான். அவன் ஒரு சித்தன். இன்றும் பல மகான்களும் , தத்துவ அறிஞர்களும் நம் நலனுக்காக பல உபதேசங்களையும் பயிற்சிகளையும் வழங்கி கொண்டிருக்கிறார்கள். அன்றே நம் பாரதி கலி அழிக்கும் வித்தைகள் பலவற்றைக் கற்றுக் கொடுத்திருக்கிறான்.

எத்தனை எத்தனை நூற்றாண்டு கடந்த பின்பும் நம்மிடையே ஏற்படக் கூடிய துன்பங்களை முன்னமே அறிந்தவர் போல மக்களின் நலனுக்காக அவர்களின் துன்பத்தைத் துடைப்பதற்காக கவிதை படைத்தருக்கிறான். பாரதி ஒரு தீர்க்கதரிசி.

" கிடைக்க வேண்டும், தர வேண்டும் " என்ற எதிர்பார்ப்பை விட " கிடைத்து விட்டது , யாவும் அவள் தருவாள் "என்ற நம்பிக் கையோடு சொல்லாடினான்.

2025 ஆம் ஆண்டு மட்டுமே 280 மில்லியன் மக்களுக்கு மன அழுத் தம் இருப்பதாக அறிக்கை வெளியிட ப்பட்டுள்ளது. அதிலும் ஆசிய மக்களு க்கு அதிகம். மன அழுத்தத்தைப் போக்க பல்வேறு வழிகளை நாளுக்கு நாள் கண்டு பிடித்துக் கொண்டே இருக்கிறார்கள். தமிழ் பேசும் மக்களுக்கு பாரதி ஒரு பெரு வரம். அவன் சித்தன் மட்டுமல்ல' சிறந்த மருத்துவன். தேவார பாராயணம் போல தினமும் பாரதி பாராயணம் செய்தாலே போதும். அரு மருந்தாகும்.

சிறு வயதில் இருந்தே தினமும் பாரதி யின் சில வரிகளை சொல்லி வர உள வீரம் வந்து சேரும்.

சித்தம் தெளிந்தால் செய்கை அழகா கும். நித்தம் நம் நெஞ்சில் உறுதி இருந் தால் எண்ணியவை கிடைக்கும். இப்படை ப்பு நமக்கு வேண்டியதை அருளும். " Law of attraction " என்னும் நுட்பத்தை நூற்றாண்ண்டுக்கு முன்பே தமிழர்க்கு தந்தவர் பாரதி. இவையெல்லாம் புரிந்தும், உணர்ந்தும், அறிந்தும், செய்கையில் விளைந்தும் நமக்கு ஒவ்வாதது ஒன்று நிகழ்ந்தால் ...

"பொருந்தாத பொருட்களை பொருத்தி வைத்தல் சக்தியின் லீலையன்றோ ?."

---



# அட்டன் காசல்ரீ நீர்த்தேக்கத்தில் விமான நிலையம்!



அட்டன் காசல்ரீ நீர்த்தேக்கத்தை நீர் விமான நிலையமாக சான்றளித்து உறுதிப்படுத்துவ தற்காக ஆய்வுப் பறப்பு மேற்கொள்ளப்பட் டுள்ளது.

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் சிவில் விமானப் போக் குவரத்து பரிசோதகர்களால் இந்த ஆய்வுப் பறப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பி டத்தக்கது.








விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# சிறப்பாக நடைபெற்ற செல்விகள். நிருபமா, நிருஜனா அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றம்

நிருத்திய நாட்டியாலய அதிபரும் ஆசிரியையுமான பரதசூடாமணி, திருமதி. அமலா அன்ரனி சுரேஷ்குமார் அவர்களின் மாணவிகளான நாட்டிய கலாஜோதி நிருபமா நகுலேந்திரன், நிருஜனா நகுலேந்திரன் சகோதரிக ளின் அரங்கேற்றம் 20.09.2025 ஆம் திகதி யேர்மனியில் சோஸ்ற் (Soest) நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.

முதலில் ஹம் காமாட்சி அம்பாள் ஆலயகுரு ஸ்ரீபாஸ்கர குருக்கள் அவர்களின் பூசை வழிபாடுகள் நடை பெற்றன. தொடர்ந்து நடனமங்கை யர் களின் அம்மா திருமதி.கலைமதி நகு லேந்திரன் அவர்கள் வரவேற்பு ரையை வழங்கினார். காமாட்சி அம்பாள் ஆலயகுரு ஸ்ரீபாஸ்கர குருக்கள் ஆசி யுரை வழங்கினார்.

பக்கவாத்தியக் கலைஞர்களின் கடவுள் வாழ்த்துப் பாட்டு இசையுடன், புஸ்பாஞ்சலி வணக்க நடனத்துடன் அரங்கேற்ற நிகழ் ச்சிகள் தொடர்ந்தன. நடன மங்கையர் செல்விகள். நிருபமா, நிருஜனா மிகச்சிற ப்பாக உடல் அமைப்பும், உடல்உறு தியும், உடல்அழகும் கொண்டவர்களாக, தங்களின் அங்க அசைவுகள் மூலம் உடல்மொழியை மிகச்சிறப்பாக வெளி க்காட்டிய தன்மை சபையோரை மெய்ம றக்க வைத்தது என்றால் மிகையாகாது. நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கிய அறிவிப்பாளர் அறிவிப்புத் திலகம் திரு. லோப் வலன்ரையின் தனது மதுரக்குரல் மூலம் மிகவும் சிறப்பான முறையில். நடன நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கி னார். அவருடன் இணைந்து. யேர்மன் மொழி அறிவிப்பாளர் சகானந்தி பூவேந் திரநாதன் அவர்களும் சிறந்த முறையில் அறிவிப்பை மேற்கொண்டார்.



தலைமை விருந்தினர் யேர்மனி தமி ழ்க் கல்விச் சேவைப் பொறுப்பாளர், யேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கத் தலை வர் திரு.பொ.சிறீஜீவகன் தனதுரையில், பெற்றோரின் இடைவிடாத அர்ப்பணிப்பு மிக்க செயற்பாட்டையும், நடன ஆசிரியை திருமதி.அமலா அன்ரனி சுரேஸ்குமார் அவர்களின் திறமைகளையும் விளக் கமாகக் எடுத்தியம்பி, அவரின் நீண்ட கால நடன ஆசிரிய சேவையைப் பாராட்டி வாழ்த்தி “நடனவித்தகி“ என்ற பட்டத்தை யும் வழங்கினார். தொடர்ந்து உரையாற் றிய சோஸ்ற் தமிழாலயப் பாடசாலையின் பொறுப்பாளர் திரு. சசிமோகன் அவர்கள் உரை நிகழ்த்தினார். அவர் செல்வி களின் நடனத்தை மிகச் சிறப்பாகப் பாராட்டிய தோடு, அவர்களின் எதிர்கால வாழ்வுக்குப் பாராட்டையும் வாழ்த்தையும் தெரிவித்து, அவர்களின் தமிழ்மொழி வளர்ச்சியும், உச்சரிப்புத் திறனையும் போற்றினார்.

பிரதம விருந்தினர் முதுகலைமானி, நடனஆசிரியை திருமதி.நிமலினி ஜெயக்குமார் உரையாற்றும் போதும், இருசகோதரிகளும் சிறந்த முறையில் உன்னதமாக இந்த நடனங்களை ஆடி னார்கள். ஆடவைத்த ஆசிரியையும், நடனமாடிய மாணவர்களையும் பாராட்டி மகிழ்வு கொள்கின்றேன் என்று கூறி னார். தொடர்ந்து. வாழ்த்துரை கூறிய நடன ஆசிரியை திருமதி.சாவித்திரி சரவணன் அவர்கள், நடனச் சகோதரிக ளின் ஊக்கத்தையும், நடனமாடி பாங்கி னையும் விதந்து கூறியதோடு, பக்கவா த்தியக் கலைஞர்கள் மிகவும் சிறப்பாக நடன அரங்கேற்றத்தை மிளிர வைத் தனர் என உரையாற்றினார். திருத்திய நாட்டியாலய அதிபரும் ஆசிரியையுமான நாட்டியக்கலைமணி, திருமதி.அமலா அன்ரனி சுரேஷ்குமார் அவர்கள் தன துரையில் அவர்கள் தமிழ் மொழியைச் சிறப்பாக கற்றுத் தேர்ச்சி பெற்றிருந் தமையும், இவை எல்லாவற்றுக்கும் உந்து சக்தியாக அமைந்தன எனக்கூறி னார். பக்கவாத்தியக் கலைஞர்களாக, நட்டுவாங்கம் நாட்டிய கலைமணி, பரத சூடாமணி,திருமதி.அமலா அன்ரனி சுரேஸ்குமார். பாடகர் சங்கக் கவி ரத்னா பவானி திரு.கிஷோர்குமார் சுப்பிரமணிய ஐயர். மிருதங்கம் லயசூடாமணி, லயபிர வாகம், கலாஜோதி திரு.பிரணவநா தன் பிரசாந்த். வயலின் வாழ்நாள் சாத னையாளன், இரட்டைவயலின் சாம்ரட் டாக்டர்.நெய்வேலி ராதாகிருஷ்ணன்.

நட்டுவாங்கம் உதவி நடன ஆசிரியரின் மாணவியும், மருமகளுமான திருமதி. யாதவி அன்ரனி சுரேஸ்குமார் ஆகியோர் பங்களித்தனர்.நிகழ்ச்சிப்படங்களை திரு. கோணேஸ் அவர்கள் அற்புதமாக எடுத்து உதவினார்.

**Foto: koness fotos**










# முத்தமழை இங்கு கொட்டித் தீராதோ!

## இல்லா ஒருவனை, ஒருத்தியை வேண்டியேங்கும் உசுரோ!!!

கனவு அது கெட்ட கனவோ நல்ல கனவோ! அதனை காலையில் மறந்துவிடுவோம். ஆனால் இப்பபோ அதனை மின் திரையில் காணலாம்.

உங்கள் வாழ்நாளில் இழந்தவற்றின் மீதே காதல் அதிகம். உங்கள் காதலி அல்லது காதலன் உங்களை விட்டு வேறு ஒரு வரை மணந்தால், கணமும் புழுங்கிச் சாவீர்கள்.இன்று காதல் சாதாரணம் என்று வைத்துக் கொண்டாலும், கனவில் அவளை கட்டி அணைப்பதுபோலவோ இல்லை கடற்கரையில் சந்திப்பது போலவோ கனவு வரலாம். கனவு காண்ப தற்கு பழையபடங்கள் பார்த்தாலே போதும். வகை வகையாக கனவுகாணலாம். எது வரை போகுமோ அதுவரை கனவுலகம் போகலாம்.

அழகான மனைவி, அல்லது அன்பான கணவன் இருந்தாலும், அடுத்தவன் பெண்டாட்டியை, அடுத்தவள் புருஷனை மேயத்துடிப்பவர்கள் தான் இன்று எத்தனை பேர். இதற்கு தொலைக்காட்சி நாடகங்கள் இதுவரை வழிசமைத்தன. இல்லா ஒருவனை, ஒருத்தியை வேண்டியெங்கும் உசுரோ!!! இப்படியானவர்களை இலக்கு வைத்து ஒரு அப்ஸ் இப்ப உலா வருகிறது.

பக்கம் பக்கம் நின்று ஒரு படம் எடுத்தால் போதும். ஏன் ஒரு படம் இருந்தாலே போதும். நீங்கள் விரும்பியபடி அவர்களை அணைக்கலாம் முத்தமிடலாம். ஆடைகூட மாற்றலாம்.

ஒருவரது படத்திற்கு தவம் இருந்த காலம் மலையேறிவிட்டது. அப்போது எல்லாம் காதலிக்கும் போது ஒரு படத்திற்கு அலையோ அலை என்று அலைந்து பெறவேண்டும். பெற்ற படத்தை பாதுகாப்பாக மற்ற வர்கள் கண்ணில் படாமல் வைத்திருக்க படும் பாடு அப்பப்பா. இப்ப சொல்லத்தேவை யில்லை. சுண்டுவிரலால் சுண்டிவிட சட்டென்று படம் வரும்.

**மாதவி**




யாரோடு யாரோடு படம் எடுக்க மனம் விரும்பியதோ! அவர்களுடன் இணைந்து படம் எடுக்க இடம் கொடுக்கும் ஒரு அப்ஸ் அது. உங்கள் பின்னணியை மாற்றும், பலகுடும்ப உறவுகளின் தலையெழுத்தையே மாற்றிவிடும் அப்ஸ் அது. எதனையும் முறையாக கவனமாக தேவைக்கும் மட்டும்,பாவித்தால் பயன்தான். கஞ்சாவைக்கூட மருந்தாக பாவித்தால் பயன்தான்.

ஒரு தந்தை இப்படியா மகளுக்கு முத்தம் கொடுப்பது, கொஞ்சுவது என்று கொஞ்ச மாதத்திற்கு முன்பு கமலகாசன் தன் மகள் சுருதிகாஷனை முத்தமிடுவது போல் ஒரு படம் உலாவந்தது. ஐயோ கமல் திரைப் படங்களில் முத்த மன்னன், மகளையும் விடவில்லை என பலரும் புலம்பினர். அது ஏ. ஐ. விளையாட்டு என்பதை பின் உணர்ந்தனர்.

இப்போ இருப்பது இந்த செயற்கை தொழில் நுட்பம் மனித அறிவுக்கும் குறைவானது. எனவே அது 2+2= என்றால் 4. சரி என்போம் 3 என்றால் பிழை என்போம். இதே ஏ. ஐ. எம்மை விட சுப்பர் பவர் நுட்பமாக வரும்போது நீங்கள் அது சொல்வது சரியா, பிழையா என அறியும் ஆற்றலை அது உங்களிடம் முடக்கிவிடும். எனவே அது சொன்னால் சரி அவனுக்கு எம்மைவிட அதிகம் தெரியும் என ஒத்துக் கொண்டு யாரோ ஒருவர் சொல்ல நாம் அதன்படி நடக்கும் காலம் வரும். நாம் விரும்பியதை எல்லாம் இப்ப செய்யும், நாளை அது விரும்பியதுபோல் நம்மை வச்சு செய்யும். ஒவ்வொரு தனிமனிதனின் மனங்களை எல்லாம் கணக்கு வைத்து, பதிவு செய்யும்.



**பின்னணியை மாற்றி பிறர் தலையெழுத்தையும் அலறவைக்கும்! ஒரு அப்ஸ்!!!**

தனிப்பட்ட மனிதரின் குண நலன்கள், என பலவற்றை அறிந்து ஒருவரது அந்தரங்கங்களை பதிவிட்டு தேவை ஏற்படும்போது, தேவைப்படுபவர்களுக்கு கொடுத்தும் உதவும். அல்லது தானே பயன்படுத்தும்.

வீட்டில் என்னை என்விருப்பபடி வாழவிட வில்லை என்று சண்டை போடுபவர்களையும், அவர்களையும் இனி யாரோ ஒருவரே தன்னை இயக்குகின்றார் என்ற உண்மை தெரியும் போது பெரும் அதிர்ச்சியே மிஞ்சும்.

AI-யால் உருவாக்கப்பட்ட படங்கள் தனிநபர்களின் வாழ்வில் பல்வேறு பிரச்சனைகளை ஏற்படுத்தலாம். அவற்றில் சில:

ஒரு நபரைப் பற்றி தவறான தகவலைப் பரப்ப அல்லது அவர்களுக்கு அவதூறு செய்ய AI படங்களைப் பயன்படுத்தலாம். ஒரு நபர் செய்யாத ஒன்றைச் செய்வது போன்ற படத்தை உருவாக்கலாம்.




தனியுரிமை மீறல்: ஒருவரின் அனுமதியின்றி, அவர்களின் உருவத்தைப் பயன்படுத்தி AI படங்களை உருவாக்கலாம். இது அவர்களின் தனியுரிமையை மீறுவதாகும்.

மன உளைச்சல்: ஒருவரின் படங்கள் தவறாகப்

28 ஆம் பக்கம் பார்க்க...







சேவியர்
(தமிழ்நாடு)

## நடுப்பக்கம்

# திரையுலகில் இப்போ டிஜிடல் யுத்தம்!

சினிமா எனும் மாய வலை காலம் காலமாக மனிதனுடைய ரசனைக் கால்களை இறுக்கிக் கட்டிக் கொண்டு தான் பயணிக்கிறது. திரையின் நிழல்களில் தங்களுடைய வாழ்வின் நிஜங்களை மறக்கவும், மீட்டெடுக்கவும் மக்கள் திரைப்படங்களை வரவேற்கிறார்கள். தங்களால் செய்ய முடியாததைத் தங்கள் ஹீரோ செய்யும் போது, அதன் மூலமாக தானும் அந்த சாதனையைச் செய்து விட்டதைப் போல ரசிகர்கள் புளகாங்கிதம் அடைகிறார்கள்.

ஆரம்ப காலங்களில் கலையும் கலையும் மோதின. அப்போது காலத்தால் அழிக்க முடியாத பல காவியங்கள் தோன்றின. போட்டி போட்டுக்கொண்டு கலைஞர்கள் நல்ல புதினங்களை, இதிகாசங்களை, வரலாற்று அடையாளங்களைக் காட்சிப்படுத்தினார்கள். அது பார்வையாளர்களைப் பரவசப்படுத்தியது. தாங்கள் கண்டிராய மாய உலகிற்குள் பயணிக்கவும், தாங்கள் அறிந்து கொள்ள விரும்பிய இதிகாசப் பதிவுகளுக்குள் உலவவும் சினிமாக்கள் உதவின.

கலைகள் மோதியபோது போட்டி ஆரோக்கியமாய் இருந்தது. பல கதாநாயகர்கள் திரையில் உயிர்பெற்று உலவி னார்கள். விடுதலைப் போராட்ட வீரர்கள், சமூகப் போராளிகள், சமயக் கதாநாயகர்கள் என பலரும் திரை களில் ஆளுமை செய்தார்கள். காலம் செல்லச் செல்ல கலைக ளும் கலைகளும் மோதிக்கொள்வதை சற்றே ஒதுக்கி வைத்து விட்டன.

அதன்பின் கலைஞர்களும், கலைஞர்களும் மோத ஆரம்பித்தனர். கதாநாயகர்களுக்கான போட்டி அங்கே உதயமானது. எந்தக் கதாநாயகனுக்கு பாடத் தெரிகிறது, ஆடத் தெரிகிறது, நடிக்கத் தெரிகிறது, சண்டையிடத் தெரிகிறது என்றெல்லாம் போட்டிகள் ஆரம்பமாயின. அதுவரை கலைகளை விமர்சித்து வந்த விமர்சகர்கள், பின்னர் கதாநாயகர்களை விமர்சிக்கத் தொடங்கினார்கள்.

யார் பெரியவன் எனும் போட்டி உருவானது. எந்தப் படம் என்பதை விட, யாருடைய படம் என்பதை நோக்கி போட்டி திசை திரும்பியது. காலங்கள் தோறும் பல கதாநாயக ர்களும் கதாநாயகிகளும் தோன் றினார்கள். ரசிகர்கள் தங்கள் பிரியத்துக்குரிய கதாநாயகனை பல்லக்கில் வைத்தார்கள், எதிர் நாயகனை பள்ளத்தாக்கில் போட்டார்கள்.

ஒரு திரைப்படம் ஐந்து திரையரங்குகள், ஐம்பது திரையரங்குகள் என வெளியாகின. நூறு திரைகளில் ஒரு படம் வெளியானால் அது உலக அதிசயமாய்ச் சிலாகிக்கப்பட்டது. ஐம்பது நாட்கள், நூறு நாட்கள், வெள்ளி விழாக்கள் என திரைப்படங்கள் சாதித்தன. ரசிகர்கள் அந்த போஸ்டர்களையும், பத்திரிகைச் செய்திகளையும் வெட்டி வெட்டிப் பாதுகாத்துப் புளகாங்கிதம் அடைந்தார்கள்.

இன்றைக்கு அந்தப் போட்டிகளெல்லாம் பாக்ஸ் ஆபீஸ் ஹிட் ! எனும் ஒற்றை இலக்கில் வந்து



நிற்கிறது. ஒரு திரைப்படம் கலைத்தன்மையோடு இருக்கிறதா, கலையை மேன்மைப்படுத்துகிறதா, மனித நேயத்தை மையப்படுத்துகிறதா என்பதெல்லாம் இரண்டாம் பட்சமாகிவிட்டது. ஒரு படம் வசூலில் நூறு கோடியைத் தாண்டிவிட்டதா, ஐநூறு கோடியைத் தாண்டிவிட்டதா, ஆயிரம் கோடியைத் தொட்டு விட்டதா என்பதே கேள்வி !

விமர்சகர்களும் இன்றைக்கு சார்பு நிலையில் நின்று பேசுகின்றனர். ஒரு திரைப்படத்தை வீழ்த்த வேண்டும் எனும் நோக்கத்தில் எல்லாவற்றையும் நெகடிவ் கண்கொண்டு பார்ப்பவர்கள் சிலர், இல்லாததையும் ஊதிப் பெருதாக்கி வெற்றி பெற வைக்க வேண்டுமென பேசுபவர்கள் சிலர். இவர்களுக்கெல்லாம் இரகசிய வருவாய் பல இடங்களிலிருந்தும் வருவது திரைத்துறைக்குத் தெரிந்தே இருக்கிறது.

சமூக வலைத்தளங்களின் ஆளுமையினால் இன்றைக்கு ஒரு திரைப்படம் சரியில்லை என்றால் அது இரண்டாம் நாளைக் கூட கடக்க முடியாமல் நொண்டியடிக்கும். முன்பெல்லாம் ஒரு திரைப்படம் வெளியாகி, அதன் விமர்சனம் பத்திரிகையில் வருவதற்கே குறைந்த பட்சம் ஒரு வாரம் பிடி க்கும். அதுவரை திரைப்படத்தைக் கணிசமான மக்கள் பார்த்து விடுவார்கள். ஆனால் இன்று அப்படியல்ல. படம் வெளியான அடுத்த நிமிடத்திலிருந்தே, டுவிட்டர் விமர்சனங்கள், இடைவேளை விமர்சனங்கள், படம் பார்த்து வருவோரின் விமர்சனங்கள் என விமர்சனங்கள் குவிந்து விடும்.

அதனால் ஒரு திரைப்படத்தை வெற்றி பெற வைப்பது என்பது கடினமான விஷயம் எனும் நிலை இன்று உண்டு. அதனால் தான் ஒரு திரைப்படத்தை ஆயிரம் திரை கள், மூவாயிரம் திரைகள் என வெளியிடுகிறார்கள். இதனால் குறைந்த பட்சம் ஒரு சில நாட்களு க்கான முன்பதிவாவது கிடை க்கும். அதன் மூலம் முதல் வார இறுதியில் கணிசமான வருவாயை ஈட்டி விடலாம் என்பதே கணக்கு. அதே போல இப்போதெல்லாம் பெரும்பாலான பெரிய இந்தியத் திரைப்படங்கள்

17 ஆம் பக்கம் பார்க்க...




உலகெங்கும் ஒரே நாளில் வெளியாகி அங்கும் பல கோடி ரூபாய்களைச் சம்பாதித்துக் கொடு க்கிறது. புலம் பெயர்ந்த மக்களின் பணம் திரைத் துறையின் வசம் செல்கிறது.

இதற்கு இன்னொரு காரணம், திரைப்படத் தயாரிப்பு என்பது கார்ப்பரேட் நிறுவனங்களின் ஒரு தொழிலாக மாறிப் போனது எனலாம். முன்பெல்லாம் திரைத்துறையோடு இயங்குபவர்கள் மட்டுமே திரைப்படங்களைத் தயாரித் தார்கள்.ஆனால் இப்போது பெரும் பணம் இருப்பவர்கள் திரைப்படங்களைத் தயாரிக்கிறார்கள். அவர்களுக்கு புராஃபிட் மார்ஜின் முக்கியமாகிறது.

அதனால் ஒரு படம் நூறு கோடி என்றால், அடுத்த படம் ஐநூறு கோடி என இலக்கு வைக்கிறார்கள். அப்படிப்பட்ட வெற்றியை எளிதில் ஈட்டி விட முடியாது. அதற்காகத் தான் ரசிகர் படையை வெறியேற்றும் வேலையை திட்டமிட்டே செய்கிறார்கள். எந்த நடிகரின் பாடல் அதிக வியூஸ் போகிறது, அதிக லைக்ஸ் போகிறது என்பது தொடங்கி, எந்த படம் அதிக லாபம் ஈட்டுகிறது என்பது வரை போட்டிகள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன.

கோவணத்தைக் கூட கடன் வாங்கி உடுத்தும் ரசிகனும், தன்னுடைய தலைவன் படம் 500 கோடி ஈட்ட வேண்டும் என்பதை மானப் பிரச்சினையாக எடுத்துக் கொள்கி

# திரையுலகில் இப்போ டிஜிடல் யுத்தம்!



றான். எப்படியாவது படத்தை வெற்றி பெற வைக்க வேண்டும் என்பதை ரசிகர்கள் தங்களுடைய வாழ்க்கை இலட்சியமாக்கிக் கொள்கிறார்கள். இதன் மூலம் கார்ப்பரேட் நிறுவனங்களும், திரை ஆளுமைகளும் பயனடைகிறார்கள்.

போஸ்டர் ஒட்டி, கட்டவுட் வைத்து, பாலாபிஷேகம் செய்யும் ரசிகர்களின் காலம் முடிவடைந்து விட்டது. இப்போதெல்லாம் டிஜிடல் யுத்தம் தான். டிஜிடல் வெளியில் அவர்கள் தங்களைத் தயார்படுத்திக் கொண்டு, திரையரங்குகளுக்கு தங்கள் இரத்தப் பாசனத்தை அளிக்கிறார்கள். அதிகாலையிலேயே திரையரங்க கவுண்டர்களில் காத்துக் கிடந்து டிக்கெட் வாங்கும் நிலையை இன்று, டிக்கெட் ரெசர்வேஷன் சாதிக்கிறது. ஆன்லைனில் ஆரம்பித்த ஐந்து நிமிடங்களில் எல்லாம் விற்றுத் தீர்ந்தது என்பதை சாதனையாகக் கொண்டாடுகிறான் ரசிகன்.

இப்படி தனக்கு எந்த விதத்திலும் லாபம் இல்லாத, தனது நடிகனுக்கும் அவரை வைத்து தொழில் செய்யும் நிறுவனங்களுக்குமாக தனது வாழ்க்கையை அர்ப்பணிக்கிறான் அப்பாவி ரசிகன். அப்படியே அப்பட்டமான அரசியல் நுட்பமே இதிலும் இருக்கிறது. ஒரு சிறு கூட்டத்தின் வளர்ச்சிக்காகவும், ஏக போக வாழ்க்கைக்காகவும் – ஒட்டு மொத்த நாட்டு மக்களும் மந்திரிச்சு விட்டதைப் போல அலையும் காட்சிகளை இங்கும் பொருத்திப் பார்க்கலாம்.

திரைப்படங்கள், கலையின் ஒரு உன்னத அம்சம். எந்த ஒரு விஷயத்தையும் எளிதில் மக்களின் இதயத்தில் இறக்குமதி செய்ய திரைப்படங்களால் கூடும். விடுதலைப் போராட்ட வீரியத்தை மக்களிடம் மாபெரும் எழுச்சியாய்க் கொண்டு சேர்த்ததில் திரைப்படங்களின் பங்கு அலாதியானது. இன்று அது



தவறான சித்தாந்தங்களைப் பரப்பவும், வெறுப்பை வளர்க்கவும், அரசியல் இலாபத்துக்காய் பதட்டங்களை உருவாக்கவும் பயன்படுவது மனதை உலுக்குகிறது.

திரைப்படம் எனும் அற்புத வடிவம் மீண்டெழவேண்டும். அதன் இலக்கு என்பது கலை, மனிதம், சமூக மேம்பாடு எனும் நோக்கத்தில் செயல்பட வேண்டும். அதற்கான கமர்ஷியல் அம்சங்களோடு அது சமூகத்தை அழகு செய்ய வேண்டும். வெறுப்பின் வேர்களுக்கு நீர் வார்க்காமல், அன்பின் வேர்களுக்கு ஆதரவாய் இருக்க வேண்டும். அத்தகைய ஒரு மாற்றம் எழ வேண்டுமெனில் ரசிகர்கள் பாக்ஸ் ஆபீஸ் ஹிட் எனும் சிந்தனையை மாற்றி விட்டு, கலை சமூக மாற்றத்தின் கருவி எனும் சிந்தனையோடு திரைப்படங்களை அணுக வேண்டும்.

இப்படிப்பட்ட ஒரு மாபெரும் மாற்றம் நேரும் எனும் கனவை நோக்கியே எனது சிந்தனைகளும் இளைப்பாறுகின்றன.

# -பேசும் படம்-

படங்கள்: கண்ணா

ஐயோ! கடவுளே! சத்தியமா ஏ.ஐ. இல்லை



எல்லா விரல்களும் பேசும்.



தம்பி வீடியோ முக்கியம்.



தேநீர் கலப்பது அபிநய சுந்தரியோ.



காச இருந்து என்ன மனச சிலறை கொடாது தவிர்க்கும்.



வீட்டுக்கு நாய் காவல். நாயைப் பார்க்க காவலுக்கு வீட்டில் ஆள் இல்லை



# கண்ணீர் வரும் நினைவுகள்! இது ஊர் நினைவுகளில் ஒன்று!



**பொன்.புத்திசிகாமணி**
(யேர்மனி)

புலம்பெயர்ந்து வாழும் ஒவ்வொருவருக்கும் அடிக்கடி ஊர் நினைவுகள் வந்து போகும்.சில நினைவுகள் இன்பத்தையும்,சில நினைவுகள் கவலையையும் தரும். கடந்த கால கவலை தரும் சம்பவங்கள் மனதில் நிலைக்க வழியில்லை.அவை கடந்து போனவை. சில உறவுகளின் இழப்புகள் நினைக்கும் தோறும் வேதனை தருபவை. சுமைகளைத் தவிர்த்து சந்தோசத்தைத் தரும் நிகழ்வை இந்த பகிர்வின் மூலம் தருவதற்கு முனைகிறேன்.

எங்கள் ஊர் மழைகாலத்தில் மகிழ்ச்சியைத் தரும்.சுகமான வசந்த காலம். இப்போது நினைத்தாலும் மனதிற்கு இதமாக இருக்கும். சில உறவுகள் அவர்கள் தந்த உணவுகள், அதன் சுவைகள், நினைக்கும்தோறும், நாவில் எச்சிலை ஊற வைக்கும். தெய்வானை மாமியின், கோதுமை மா புட்டும், காரமான செத்தல்மிளகாய் தேங்காய்ச் சம்பலும். என்றைக்கும் என்னை விட்டு நீங்காது. இதன் சுவையை வாசகர்களுக்கும் சுவைக்கக் கொடுக்க வேண்டும் என்கிற பொது நல நோக்கோடு இந்தப்பதிவைத் தருகிறேன்.

இதனை பிரசுரிக்கும்,"வெற்றிமணி "க்கு எனது நன்றிகள். சுவைமிகுந்த இந்தச் செய்தி "வெற்றிமணியின் 350 வது இதழில் வெளியாகி எனக்கும் சுவையை அதிகரித்திருக்கிறது. நெடுங்கால வரலாற்றில் என்றும் புதிய வடிவத்தில் தன்னை வளர்த்துக்கொள்ளும் "வெற்றிமணி"க்கு இவ்வேளை எனது வாழ்த்துகள்.

**இதனை பிரசுரிக்கும்,"வெற்றிமணி "க்கு எனது நன்றிகள். சுவைமிகுந்த இந்தச் செய்தி "வெற்றிமணியின் 350 வது இதழில் வெளியாகி எனக்கும் சுவையை அதிகரித்திருக்கிறது. நெடுங்கால வரலாற்றில் என்றும் புதிய வடிவத்தில் தன்னை வளர்த்துக்கொள்ளும் "வெற்றிமணி"க்கு இவ்வேளை எனது வாழ்த்துகள்.**

நாங்கள் ஊரில் எப்போதும் அந்த இடத்தில் தான் கிளித்தட்டு விளையாடுவோம். பக்கத்தில் செல்வபுரம் செல்லும் கிரவல் பாதை. அதற்கும் அப்பால் நாலைந்து வீடுகள். அந்த வீட்டைச் சேர்ந்தவர்கள் தான்,எங்கள் தீவிர ரசிகர்கள். கொஞ்சம் தள்ளி மேற்குப் பக்கமாக எங்கள் ஊர்க்கோவில். கொஞ்சம் மேட்டில்தான் எங்கள் கிளித்தட்டு மைதானம். சற்று உயரமானது. இறக்கத்தில் பரந்தன், புதுக்குடியிருப்பு பாதை.மேற்காக நந்திக்கடலையும்,வடக்காற்றையும் பிரித்து நடுவாக செல்கிறது.வடக்காறு என்றுமே வற்றுவதில்லை. இந்த நீர்நிலைகளில் இருந்து வரும் சீதளக் காற்று மாலை நேரத்தில் இதமாக இருக்கும்.

அன்றும் நாம் விளையாடிக் கொண்டிருக்கும்போது தெய்வானை மாமி அங்கு வந்தா. எங்களை அழைத்த மாமி "தம்பியளா எனக்கு நீங்கள் எனக்கொரு உதவி செய்ய வேணும்.என்ன மாமி என்ன உதவி என்று நான் தான் கேட்டேன். நாளை காலை என்ர காணிக்கை புதுக் கொட்டில் ஒன்று கட்டியிருக்கிறன்,அந்த கொட்டிலை ஒருக்கா மேய்ஞ்சு தாறியளோ! என்று கெஞ்சிக் கேட்டா.அவரிடம் இருந்து வந்த வார்த்தைகளால் மறுப்புச் சொல்ல முடியவில்லை.அதுக்கென்ன மாமி நாங்கள் வாறோம்."கூலி இல்லையையா, எனக்கு அந்த அளவிற்கு வசதியில்லை நல்ல சாப்பாடு வேணுமென்றால் தாறேன்"



எங்களுக்கு ஒன்றும் தரவேண்டாம் மாமி நாங்கள் வாறம் என்று கூறினோம்.

தெய்வானை மாமிக்கு இப்ப 75 வயதிற்கு மேல் இருக்கும். இரண்டு பிள்ளைகள். ஆணொன்று பெண்ணொன்று.பிள்ளைகள் சின்ன வயதாக இருந்த போதே கணவர் இறந்து போனார்.

பிள்ளைகளை வளர்ப்பதற்கு அவர் பட்ட கஸ்ரம் கொஞ்ச நஞ்சமில்லை. அவர்களும் ,பிள்ளை குட்டிகள் குடும்பம் ,என்று தங்கள் பாடு.சிலகாலம் மகனுடனும்,சில காலம் மகளுடனும் இருந்து பார்த்தார். ஒத்து வரவில்லை.இருந்த காணிபூமிகளை பங்கிட்டுக் கொடுத்தபின் இந்த வேறுபாடு தெரிஞ்சிது. இந்தக் காணித்துண்டை வைச்சிருந்த படியால் தனக்கென்று ஒரு குடிலைக்கட்டி வாழ முடிவு செய்தார்.அதையும் எழுதித் தரும்படி மகன் பெரிய பாடு.ஆனால் அதற்கு கிழவி ஒத்துக் கொள்ளவில்லை.அதன் பலன் ,தாய் என்றும் பாராமல் வீட்டை விட்டு வெளியேற்றிவிட்டான்.

மறுநாள் காலையில் நாங்கள் எல்லோரும் அங்கு போயிருந்தோம். சின்னப்பாவும் அங்கு வந்திருந்தார். அவர் அனுபவசாலி.அவரது வழிகாட்டலில் நாங்கள் உதவிசெய்ய வேண்டும்.

இந்த நிலம் எங்களுக்கு பரீட்சையமானது தான். நல்ல வெண்மணல் பரப்பு. கிழக்குப் பக்கம் ஓங்கி வளர்ந் திருக்கும் மாட்டு வாகை மரங்கள்.மேற்குப் பக்கம் வரிசையாய் பனை மரங்கள். இந்த இடத்தில் தான் நாங்கள் குடிசை கட்டி விளையாடுவோம். மழைகாலத்தில் சில இடங்களில் நிலம் நனைந்து பள்ளங்களில் நீர் நிறைந்து காணப்படும். ஆழமான பகுதி நீலமாகத் தெளிவாகத் தெரியும். அது எங்களை நீந்தி விளையாட அழைக்கும். இன்று தெய்வானை மாமிக்காக வீடுகட்ட வந்திருக்கிறோம்.

காணி அமைந்திருக்கும் அழகான, இந்த இடம்.வடக்குப்பக்கம் மீனாட்சி அக்காவின் ஆத்தியாந்தோட்டம்.நிறைய தென்னை மரங்கள் காய்ச்சுத் தொங்கின. இந்தத் தோட்டத்தில் ஓலைவாங்கி வடக்காற்றில் ஊறப்போட்டு கிடுகு பின்னியதாக மாமி சொன்னா. உழைப்பால் உரமேறிய தேகம் அவருடையது.யாருக்கும் தீங்கு நினைக்காத நல்ல மனம். அதனால் ஊரவருக்கு அவரைப் பிடிக்கும்.எங்களையும் சேர்த்துத்தான். இங்கேதான் தெயவானை மாமி குடில் போடுகின்றா. பொறியியலாளர் சின்னப்பா தான்.அவர் ஒரு அனுபவ சாலி. நாங்கள் அவருக்கு உதவியாளர்கள்.மேலே மூன்று பேர் கிடுகை வாங்கி வேய. இரண்டு பேர் கிடுகை கீழே நின்று எடுத்துக் கொடுக்க வேணும். வேய்தல் ஒரு பக்கம் வெகு விரைவாகச் சென்றது.

பக்கத்தில் நின்ற வேப்பமர நிழலில் தெய்வானை மாமி மதிய நேர சாப்பாட்டைத் தயாரித்துக் கொண்டிருந்தா. பக்கத்தில் நின்ற எங்களுக்கு வாசம் மூக்கைத் துளைத்தது. இதற்கென்று இழைத்த புதுக்கடகத்தில் பக்குவமாய் புட்டை அடுக்கி வைத்தார். மேல் நின்று பார்க்க தங்க நிறத்தில் நேர்த்தியாக அழகாக இருந்தது. குழைத்த மாவிற்கு இடையில் போடுகின்ற இளம் தேங்காய்ப்பூ அடுப்பில் வேகும் போது அந்த ஏரியாவே மணத்தது. எங்களுக்கு எப்படி இருந்திருக்கும். எப்போது சாப்பிடுவோம் என்ற ஆர்வத்தை ஏற்படுத்தியது.இரண்டு பக்கமும் வேய்ந்து முடிய. கொட்டிலின் உள்ளே மாமி ஏற்கனவே பின்னி வைச்சிருந்த பன்னாங்கை விரிச்சு எங்களை அமர வைச்சார்.

வரிசையாய் இருக்கவிட்டு வாழை இலையைப் பரப்பி புட்டுக்கடகத்தை தூக்கி வைச்சார்.காற்றோடு கலந்து வந்த புட்டு வாசம் பக்கத்தில் இருந்து எச்சில் ஊற வைத்தது. ஒரு பேசனில் செத்தல் மிளகாய் சம்பல்.கரும் சிகப்பில் காணப்பட்டது. வாயில வைச்சால் கொண்டெழுப்பும் அவ்வளவு உறைப்பு. அதற்குள் மாசிக்கருவாடு போட்டிருந்தா. எவ்வளவு புட்டு எடுத்துச் சாப்பிட்டேன் என்று எனக்குத் தெரியாது. நான் மாத்திரமல்ல மற்றவர்களும் தான்.போய்க் கொண்டே இருந்தது.அவ்வளவு சுவை. உணவின் சுவை அதனைத் தயாரிக்கும் கைப்பக்குவத்தைப் பொறுத்தது என்று சொல்லுவார்கள். அது உண்மைதான் போலும். எங்கள் ஊர் கோதுமை மாவுக்கு இவ்வளவு ருசி இருக்குமா? என்ன! அவ அன்போடு பரிமாறிய அந்தப்பக்குவமா? என்ன!மாமியின் கையை பிடித்து முத்தமிட்டேன்.

குழைத்த புட்டு நேர்த்தியாக இருந்தது. எல்லாம் ஒரே அளவில்,இதுவும் ஒரு கலையே. தெய்வானை மாமி வயசில் முதிர்ந்தவர்தான் அழகானவர்,"கந்தையானாலும் கசக்கிக் கட்டு, கூழானாலும் குளித்துக் குடி" என்பதற்கேற்ப. அவ்வளவு சுத்தமானவர். வசிக்கும் வீடு சட்டி பானை அனைத்திலும் தான். நான் ,நாட்டைவிட்டு வெளியில் வந்த பின்பு அம்மா எழுதும் புதினங்களில் தெய்வானை மாமியைப் பற்றியும் இருக்கும். நானும் ஒவ்வொரு கடிதத்திலும் கேட்டு எழுதுவேன்.



ஒருநாள் வந்த கடிதம் அப்படியே என்னை உட்கார வைத்தது. தம்பி உன்ர தெய்வானை மாமி போய்ச் சேந்திற்றா தம்பி. கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது. மனக்கண்ணில் என்றும் தெய்வானை மாமி.சுவையான அப்பம் சுட்டபடி,நல்ல தோசை சுட்டபடி வெள்ளை சேலை கட்டியிருக்கும் வெள்ளை மனம் கொண்ட அழகான அந்தக் கிழவி எங்கள் மனதில் என்றும் வாழுவாள். சில பாத்திரங்கள் எங்களை விட்டு மறையாது.இன்று தெய்வானை மாமியில்லை.ஆனால் இத்தனை ஆண்டுகள் கழித்தும் அந்தச்சுவை இன்னும் தொண்டைக்குள் நிற்கிறது.

Dr.IN



# அறளை பெயர்தல்

## வயதாகும்போது மூளை மங்குதலைத் தடுத்தல்– நடைப்பயிற்சி

உடற் பயிற்சி உடல் நலத்திற்கு அவசியமானது என்பது இப்பொழுது பெரும்பாலானவர்களுக்குப் புரிந்திருக்கிறது. இருந்த போதும் அவர்கள் எல்லோரும் அதனைச் செய்வதேயில்லை. அதற்குக் காரணங்களாக இவற்றைச் சொல்லலாம்.

முக்கியமாகச் சோம்பல். பலருக்கும் தங்களது வழமையான வேலைகளைத் தவிர புதிய விடயங்களில் ஈடுபடுவதற்குத் தயக்கமும் சோம்பலும் இருக்கிறது.

புதிய விடயங்களுக்கு நேரம் எவ்வாறு ஒதுக்குவது என்பது தெரிவதில்லை.

“எனது உடல் ஆரோக்கியமாக இருக்கிறது.“ எனக்கு ஏன் உடற்பயிற்சி என்பது பலரது விதண்டா விவாதம் ஆகும். கண்கெட்டாற் பிறகு சூரிய நமஸ்காரம் ஏன் எனப் பேச்சுக் சொல்வார்கள். நோய் வராமல் தடுப்பதற்கே முக்கியமாக உடற்பயிற்சி தேவை. நோய் வந்து முட்டிய பின் அல்ல.

உடற் பயிற்சிகளில் மிகவும் எளிதானதும், எல்லோராலும் செய்யக் கூடியதும், சுலபமானதும் நடைப் பயிற்சிதான் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. இந்த நடைப் பயிற்சியானது உடல் நலத்திற்கு மிகவும் நல்லது என்பதை பல மருத்துவ ஆய்வுகள் சுட்டிக் காட்டியுள்ளன.

ஆனால் நடைப்பயிற்சிக்கும் அறிவாற்றல் குறையாது இருப்பதற்கும் தொடர்பு உள்ளது என புதிய மருத்துவ ஆய்வு சொல்கிறது.

65 வயதிற்கு மேற்பட்ட 300 பேர் ஆய்வுக்கு உட்படுத்தப்படுதப்படனர். அவர்கள் தினமும் எவ்வளவு தூரம் நடக்கின்றனர் என்பது கண்டறியப்பட்டது. உடனடியாகவும், 9 வருடங்கள் கடந்த பின்னரும் அவர்களது




மூளையை MRI ஸ்கான் செய்து பார்த்தனர். ஒவ்வொரு வாரத்தில் 6 முதல் 9 மைல் தூரம் நடந்தவர்களது மூளையிலுள்ள ஆரோக்கிய பகுதியின் (Gray matter) கனவளவு அதிகரித்திருக்கக் காணப்பட்டது.

எனவே இவர்களது அறிவு சார்ந்த செயற்பாடுகள் குறைவதற்கான சாத்தியங்கள் குறைவாகும். அதாவது மூளை மங்குவதற்கான சாத்தியங்கள் குறைவு. ஆயினும் நடக்காதவர்களின் மூளையின் ஆரோக்கியமான பகுதியில் அவ்வாறான நல்ல மாற்றம் அவதானிக்கப்படவில்லை. ஏற்கனவே செய்யப்பட்ட சில ஆய்வுகளின் மூலம் நல்ல உடற்பயிற்சிகள் செய்வதனால் கலங்களில் நல்ல மாற்றங்கள் ஏற்படும் என்பது தெரிய வந்தது. இப்பொமுது நடைப் பயிற்சியும் அவ்வாறே நல்ல மாற்றங்களைக் கொண்டுவரும் என்பது தெரிகிறது.

வேறு எதற்காவது அல்லாவிடினும், எதிர்காலத்தில் அறளை பெயர்ந்து, பிள்ளைகளுக்கும் சொந்த பந்தங்களுக்கும் சுமையாகவும் தொல்லை கொடுப்பாது இருப்பதற்காகவாவது தினசரி நடைப் பயிற்சி செய்யுங்கள்.

**அறளை பெயர்தலைத் தடுக்க நவீன தொழில் நுட்பங்களில் ஈடுபாடு காட்டுவதும் உதவும்**

முது வயதில் மூளை மங்காதிருப்பதற்கு அறளை பெயர்தலைத் தடுக்க, இன்றை வாழ்விலிருந்து விடுபடாமல் நவீன விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றங்களில் தொடர்ச்சியாக ஈடுபடுவது உதவும் என்பது முன்னொரு ஆய்வில் தெரியவந்த்ததை நினைவுபடுத்தலாம்.

கம்பியூட்டர், இணையம், மொபைல் போன் போன்ற நவீன சாதனங்களை, இவை எனக்கு முடியாதது என ஒதுக்கிவிடாது பயன்படுத்துவது நன்மை பயக்கும். பழவகைகள், நார்ப்பொருள் உணவுகள், இலைவகை உணவுகளை தினசரி உணவில் தாராளமாகச் சேர்ப்பதும் அவசியமாகும்.

உடற்பயிற்சி அவசியம் என்பதை வைத்தியர்களும் சரி நோயாளிகளும் சரி ஏற்றுக் கொள்கிறார்கள். ஆனால், வைத்தியர்கள் சொல்லும் அளவிலான பயிற்சியைச் செய்ய பலருக்கும் முடிவதில்லை. உடலால் முடிவதில்லை என்பது ஒரு காரணம், நேரம் கிடைப்பதில்லை என்பது இரண்டாவது காரணமாகும்.

Dr.Timothy S.Church தலைமையிலான குழுவினர் ஒரு ஆய்வு செய்தனர். அதன் முடிவுகள் துயுஆயு 2007:இதழில் அன்று வெளியாகியிருந்தன. மாதவிடாய் நின்றுவிட்ட, அதீத எடையுள்ள, உடலுழைப்பு அற்ற 464 பெண்களை உள்ளடக்கிய ஆய்வு அது. ஆறு மாதங்கள் செய்யப்பட்டது. உடற்பயிற்சியே செய்யாதவர்கள், வெவ்வேறு அளவிலான பயிற்சிகளைச் செய்தவர்கள் என நான்கு பிரிவினராக வகுத்துச் செய்யப்பட்ட ஆய்வு அது.

தினசரி 10 நிமிடங்கள் அதாவது வாரத்தில் 75 நிமிடங்கள் மட்டும் பயிற்சி செய்தவர்களுக்குக்கூட அவர்களது இருதயத்தினதும் சுவாசப்பையினதும் ஆரோக்கியமானது எந்தவித பயிற்சிகளையும் செய்யாதவர்களை விட அதிகரிக்கிறது என அவ் ஆய்வு புலப்படுத்தியது. ஆனால், இந்தளவு பயிற்சியானது ஒருவரின் எடையைக் குறைக்கவோ, பிரஸரைக் குறைக்கவோ போதுமானதாக இல்லை என்பது உண்மைதான். ஆயினும், வயிற்றின் சுற்றளவைச் சற்றுக் குறைக்கிறது. இது பொதுவான ஆரோக்கியம் அதிகரிக்கிறது என்பதற்கான ஆரம்ப அறிகுறி என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு குறைந்த அளவிலான பயிற்சி செய்து உடல் ஆரோக்கியம் மேம்பட்டால் பிற்பாடு கூடியளவு பயிற்சி செய்வதற்கான உடல் நிலையையும் மேலும் தொடர்ந்து பயிற்சிகளைத் தொடர்வதற்கான மன ஊக்கத்தையும் பெறுகிறார்கள். இவ்வாறு தொடர்ந்து செய்யும்போது மேலும் கூடிய உடல் ஆரோக்கிய எல்லைகளை எட்டுகிறார்கள் என்பதே முக்கியமானது. எனவே, சோம்பிக் கிடக்காதீர்கள். சிறிய அளவிலான உடற் பயிற்சியையாவது ஆரம்பியுங்கள். படிப்படியாக அதிகரியுங்கள். உடல் நலம் நாடி வரும், பிரஸர், கொலஸ்ட்ரோல், நீரிழிவு, மாரடைப்பு, பக்கவாதம் யாவும் விலகி ஓடும்.



டாக்டர் எம்.கே.முருகானந்தன்
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
குடும்பவைத்தியர்

“ஆக்கிரமித்த எமது நிலங்களை விடுவியுங்கள்”

**பெருந்திரளாக கூடிப் போராட்டம்**

**தமிழ்ப் பிரதேசங்களில் மக்கள் போராட்டம்**

Dr. எம். கே. முருகானந்தன்

”எங்களைப் பட்டினி போட்டுக் கொல்லாதீர்கள்”
விலை உயர்வுக்கு எதிராக கூட்டமிட்டு போராட்டம்.
இதுவும் வயிற்றுக்கான மற்றொரு பெரும் கூட்டம்தான்.
அரிசிக்கான....
வஜிரா பிள்ளையார் கோவில் முற்றத்தில் ..



விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.





யாழ்ப்பாணத்திற்கான
இந்திய துணைத்தூதுவர்
ஸ்ரீமான் சாய் முரளி

# 'அம்பிகையின் பரத நிருத்திய அரங்கப்பிரவேசம் யாழ்ப்பாண சமூகத்துக்கான பரிசு'

கொக்குவில் கலாபவனம் கலாகீர்த்தி சாந்தினி சிவநேசன் அவர்களின் மாணவியும் மேனாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் - கலாநிதி கௌரி சண்முகலிங்கன் ஆகியோரின் தவப்புதல்வியுமான செல்வி அம்பிகை சண்முகலிங்கன் அவர்களின் பரத நிருத்திய அரங்கப்பிரவேசம் இம்மாதம் 5ம் திகதி மாலை ,யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் இடம் பெற்ற வேளை ஆசியுரை வழங்கிய செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் அவர்கள் 'தெய்வக்குழந்தை அம்பிகையின் ஆற்றல் வியப்பினைத் தருகின்றது. அவரின் குனித்தபுருவமும் , கொவ்வைச்செவ்வாயின் குண்சிரிப்பும் தனித்துவமானவை என்றார்.மேனாள் துணைவேந்தர் பேராசிரியர் பொன் பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் தமது தலைமை உரையில் அம்பிகையின் கலைத் துறை ஈடுபாடினையும் நடனச்சிறப்பினையும் பாராட்டினார்.



முதன்மைவிருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய யாழ்ப்பாணம் இந்திய துணைத்தூதுவர் ஸ்ரீமான் சாய் முரளி அவர்கள் 'தமிழர் பண்பாட்டு இதயத்தின் மையத்தில் உள்ள கலை வடிவத்தினை நேர்மையுடன் பயின்று பக்குவமாய் அளிக்கை செய்த அம்பிகையின் இன்றைய நிகழ்ச்சி யாழ்பாண சமூகத்துக்கான பரிசு என்பேன் என்றார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா அவர்கள் தமதுரையில் 'சிறந்த கலைஞரான மேனாள் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் - நல்லாசிரியை கலாநிதி கௌரி சண்முகலிங்கள் ஆகியோரின் செல்வக் குழந்தையான அம்பிகை கலைமகளின் குழந்தை என்பதனை உறுதிப்படுத்துவதாய் இந்த நிருத்திய அரங்கப்பிரவேசம் மன நிறைவினைத் தருகின்றது. இன்று எம் பல்கலைக்கழகதின் கலைப்பீட மாணவியாக இணைந்துள்ள அம்பிகை எதிர்காலத்தில் எமக்கு பல பெருமைகளை சேர்ப்பாள் ' என்றார்

சிறப்பு விருந்தினர்களக்க கலந்து சிறப்பித்த யாழ்ப்பாணப்பல்கலைக் கழககலைப்பீடாதிபதி பேராசிரியர் சி. ரகுராம் அவர்களும் தமிழ்நாடு காந்தி கிராம கிராமிய பல்கலைக்கழக பேராசிரியர் ஒ.முத்தையா அவர்களும் அம்பிகையின் அபிநய சிறப் பினையும் பக்குவமான பாவ வெளிப்பாடினையும் நயந்து வாழ்த்தினர். 'அம்பிகை யின் ஆடல் அரங்கேற்றம் மிகமிக நேர்த்தியானது. தத்துவ பூர்வ மான அவரின் பாவ வெளிப்பாட்டினை கண்கலங்கிட ஆசையாக ரசித்தேன் கலாகீர்த்தி சாந்தினி சிவநேசன் அவர்களின் அரங்கேற்றங்களின் நிறைகுடமாக அம்பிகையின் அரங்கேற்றம் அமைந்தது என கௌரவ விருந்தினராக கலந்து கொண்ட ஈழத்து மூத்த பரதக்கலை ஆளுமையான கலாபூஷணம் பத்மினி செல்வேந்திரக்குமார் தமதுரையில் குறிப்பிட்டார்

குருவான கலாகீர்த்தி ஸ்ரீமதி சாந்தினி சிவநேசன் அவர்களுடன் அணிசெய்கலைஞர்களாக நட்டுவாங்கம் -நடனத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் முதுகலைமாணி ஸ்ரீமதி தேவந்தி திருநந்தன்,பாட்டு இராம நாதன் ஆற்றுகை, கான்பிய கலைகள் பீடாதிபதி முதுகலைமாணி திரு தவ நாதன் றொபேட், மிருதங்கம் நடனத்துறை விரிவுரையாலர் முதுதத்துவமாணி திரு க. கஜன் ,வயலின் , வாத்தியத் துறை விரிவுரையாளர் நுண்கலைமாணி திரு கே. வேலதீபன்.புல்லாங்குழல் வாத்தியத்துறை விரிவுரையாளர் நுண்கலைமாணி திரு சி. யூட் ஆகியோருடன் ஒப்பனைக் கலைஞரான கிழக்குப்பல்கலைக்கழக நடனத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு எஸ்.சோபிதன் ஆகியோர் இசைந்திருந்தனர்.











விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# அவள் ‘இருக்கின்றாள்’ என்பதே எனக்கின்பம்!

மனத்தையுடையவன் மனிதன். அந்த மனிதனில் ஆட்சி செய்யும் மனம் ஒரு குரங்கு. ஒரு மனிதனிடம் அன்பும் உண்டு. ஆத்திரமும் உண்டு. இரண்டும் கலந்த வாழ்வில் அன்பே உருவான மனிதனிடம் பெட்டிப்பாம்பாக அடங்கியிருக்கும் ஆத்திரம் சந்தர்ப்பம் சூழ்நிலைக்கேற்ப வெளிவரும். அதில் அன்பை வளர்க்கவும், ஆத்திரத்தை அடக்கவுமே உலக இலக்கியங்கள் போதிக்கின்றன.

> “அன்பின் வழியது
> உயிர்நிலை அஃதிலார்க்கு
> என்புதோல் போர்த்த உடம்பு“

என்பது திருக்குறள். உயிருள்ள உடலென்றால், அங்கு அன்பு இருக்கவேண்டும். இல்லையென்றால், அவனுடைய உடல் எலும்பும் தோலும் போர்த்தப்பட்ட ஒரு ரோபோவே என்னும் வள்ளுவரின் வாக்கின் பிரகாரம் மனிதனுக்கு மாத்திரமன்றி அனைத்து ஜீவராசிகளுக்கும் அன்பு என்னும் இந்தப் பண்பு மேலோங்கி இருக்கின்றது.

அன்பின் மூலம் அர்ப்பணிப்பு, தியாகம், பொறுப்புணர்ச்சி, ஆகிய மனிதப்பண்புகள் மேலோங்குகின்றன. அன்பான ஆணும் பெண்ணும் கூடி வாழ்வதினாலேயே பாலுறவின் முழுமையான பயனையும் நுண்சுவையினை அடைய முடியும். “மலரினும் மெல்லிய காமம். சிலர் அதன் செவ்வி தலைப்படுவர்“ சிலரே அதன் பயனை அடைவார்கள். மற்றையவர்கள் ஆத்திரக்காரனுக்குப் புத்தி மத்திமம் என்பதால் அன்பின் வலிமையை இழந்து விடுகின்றார்கள்.

அன்பின் வலிமையை நோக்கும் போது உதாரணமாக, பறவை இனங்களிலே கேரளாப் பகுதிகளில் வாழுகின்ற இருவாச்சிப் பறவையின் அன்பின் இறுக்கத்தைப் பார்ப்போம். இப்பறவை இனமானது மேலான இல்லறவாழ்வில் உருவான ஒரு கருவை வளர்த்து அன்போடு வெளியுலகுக்கு கொண்டுவருகின்றன. ஆணும் பெண்ணும் கூடி கருக்கட்டிய தாய்ப்பறவைக்கு முட்டையிடும் காலம் வரும்போது, கூடற்ற இப்பறவை இனம் பொருத்தமான மரப்பொந்தைத் தேடி எடுக்கும். அங்கு தாய்ப்பறவை நுழைந்து கொள்ள தந்தைப் பறவையானது களிபோன்ற மணலைக் கொண்டு வந்து அந்த மரப் பொந்தைத் தன்னுடைய அலகு செல்லும் அளவு வழியை மட்டும் வைத்து அடைத்துவிடும். உள்ளே எவ்விதமான பாம்புகளும் உள்நுழையாமல் பாதுகாத்துவிடும். தாய்ப்பறவையானது உள்ளே குளிர்மையாக வாழ்ந்து கொண்டு தன்னுடைய அலகால் கொத்திக் கொத்தித் தன்னுடைய இறகுகள் அத்தனையையும் பிய்த்து மெத்தைபோல் அமைத்து அதன்மேல் அமர்ந்து கொண்டு முட்டையை அடைகாத்துக் குஞ்சு பொரிக்கும். இக்காலங்களில் தாயின் குஞ்சின் அழுக்குகளை எல்லாம் தன்னுடைய அலகால் தந்தைப் பறவை துப்பரவு செய்து வெளியே எடுத்துவிடுவது மட்டுமன்றி வெளியே இருந்து புழு, பூச்சிகள் கனிகள் போன்ற உணவு வகைகளைத் தாய்க்கும் குஞ்சிக்கும் அன்போடு வழங்கிக் கொண்டிருக்கும். இறகு முளைத்த குஞ்சு பொந்தின் பாதையை உடைத்து வெளியே வந்து பறந்து போகத் தந்தைப் பறவையானது அத்திப்பழம் ஒன்றைத் தாய்ப்பறவைக்கு வழங்கித் தன் இணையை அழைத்துக் கொண்டு அங்கிருந்து பறந்து செல்லும். இந்த அன்பின் இறுக்கம் வியக்க வைக்கின்றது.



இதேபோல் மருத்துவமனையில் காலுடைந்து சிகிச்சை பெற்று வந்த ஒரு கன்றுக் குட்டிக்குத் தாய்ப்பசு காலையும் மாலையும் இருவேளையும் தனியாக நடந்து வந்து பால் கொடுத்துவிட்டுப் போகின்ற தாய்ப்பாசத்தை எண்ணி வியந்து போகின்றோம். இவ்வாறு அன்பு உணர்வு உயிரினங்களில் புதைந்து கிடக்கின்றது.

இந்த அன்பு வயது கடந்தும் வாழும்

> “புதுமலர் அல்ல காய்ந்த
> புற்கட்டே அவள் உடம்பு!
> சதிராடும் நடையாள் அல்லள்
> தள்ளாடி விழும் மூதாட்டி
> மதியல்ல முகம் அவட்கு
> வறள்நிலம்! குழிகள் கண்கள்!
> எது எனக்கின்பம் நல்கும்?
> ‘இருக்கின்றாள்‘ என்ப தொன்றே!

என்று பாரதிதாசன் மூதாட்டியானாலும், தோற்றப் பொலிவு குன்றினாலும், அவள் என்னோடு இருக்க வேண்டும் என்பதே அன்பின் வெளிப்பாடு.

இந்த அன்பான இதயத்தை உடைத்தெறியும் ஆயுதமே ஆத்திரம். 60 கடந்தால் நாய்க் குணம் என்பார்கள். அந்த நாய்க்குணத்தாலேயே முதியவர்கள் பலர் விவாகரத்துப் பெற்றிருக்கின்றார்கள் என்பதை அறியக்கூடியதாக இருக்கின்றது. புலம்பெயர்வில் தனிமனிதன் வயது கடந்தாலும் துணையின்றி வாழ வாய்ப்புக்களை அந்நாடுகள் செய்து கொடுத்திருக்கின்றன. அதனால், சுடுதண்ணீரைக் காலில் ஊற்றியதுபோலத் துள்ளுபவர்களைத் தாங்க எவ்வளவு காலம் குளிர் தண்ணீராக வாழ முடியும் என்று முடிவெடுக்கின்ற பாங்கே விவாகரத்து. சாம்பல் பூத்த ஆத்திரத்தைப் போக்க அன்புதான் நீரென்பதை உணர்ந்தால் வாழ்க்கை இனிக்கும்.

அதாவது உண்மையான அன்பு உள்ள மனிதர்களிடம் இறுக்கமாகக் கோபத்தை பிடித்திருந்தாலும் அதைத் தளர்த்திவிடுவதுதான் சிறப்பு. அதனாலே எந்தக் கேடும் வரப்போவதில்லை.



கௌசி சிவபாலன்
(யேர்மனி)

இதைத்தான்

> “உன்னைப் பார்த்ததும் உன்மீதான கோபம்
> இறுகப் பிடித்த உள்ளங்கையில் இருந்த
> குறுமணல் போல நழுவுகிறது“

என்று அப்துல் ரக்மான் எழுதியுள்ளார். சிலருக்குக் கோபம் புஷ் வானம் போல தோன்றி உடனே மறைந்து விடும். தோன்றும் போது தள்ளி நின்றால், மறையும் போது தண்மையாக உணரலாம். இதைத்தான் ஊடல் என்பார்கள். அன்பு கணவன் மனைவி, காதலன் காதலி, நண்பன் நண்பி, சகோதரன் சகோதரி. தோழன் தோழி என்று உறவின் இணைப்பிலே இருப்பதுபோல கோப மும் உண்டு. ஒருவர் கூறுவதை மற்றவர் செவிடமடுத்தாலே, கூறுவதைக் கிரகித்தாலே கோபத்தை விரட்டிவிடலாம். அதனால், மனமென்னும் குரங்கைத் தாவவிடாமல், தப்பியோட விடாமல் எம்முடைய கைக்குள்ளே வைத்துக் கொள்ள வேண்டும்.

அப்போது அன்புதான் எந்நாளும் வெல்லும்.

## நீங்காத நினைவுகள் 1999



அமரர் கவிஞர்.வி.கந்தவனம் அவர்கள்
வெற்றிமணி பத்திரிகையின் பழைய
இதழ்களைப் பார்வையிட்டபோது...
அருகில் கவிஞருடன் வெற்றிமணி ஆசிரியர் 1999

03 ஆம் பக்கத் தொடர்ச்சி...

# தமிழர்களுக்கு வழங்கிய தேர்தல் வாக்குறுதிகளை ‘அப்படியென்றால் என்ன’ எனச் செயற்படுகிறதா அரசு



அனுர அரசும் மென்போக்காக முன்னெடுத்துவருகிறது. ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் தமிழ் மக்களது பிரச்சினைகள் தொடர்பான நிலைப்பாட் டிலிருந்து ஜே.வி.பி.இன்னும் மாறவி ல்லை என்பது தெளிவாக தெரிகிறது.முன்னர் ஆக்ரோஷமாக கத்திக்கொண்டிருந்தவர்கள் இன்று சிரித்துக்கொண்டு மென்மையாக தங்களது நிகழ்ச்சி நிரலை முன்னெடுத்து வருகிறார்கள். மன்னாரில் காற்றால் திட்டத்துக்கு எதிராக தமிழ் மக்கள் போராடி வரும் சூழலில் ஜனாதிபதி அனுர அதிரடியாக அத்திட்டத்தை முன்னெடுக்குமாறு பணிப்புரை விடுத்திருக்கிறார். தேர்தல் மேடைகளில் காணி விடுவிப்பு,அரசியல் கைதிகள் விடுவிப்பு,காணாமல் போனோருக்கான தீர்வு என பேசியவர்கள் இன்று ‘அப்படியென்றால் என்ன‘ என கேள்வியெழுப்பும் அளவுக்கு செயற்பட்டு வருகிறார்கள்.

ஜே.ஆர்.கூறியதுபோல் ஆணைப் பெண்ணாக்குவதைத்தவிர மற்றெல்லாவற்றையும் செய்யக்கூடிய ஜனாதிபதிப் பதவி, 2/3 இற்கும் கூடுதலான தனிக் கட்சிப் பாராளுமன்றப் பலத்தையும் கொண்டிருக்கும் அனுரா அரசுக்கு எதையும் செய்யக்கூடிய ஓர் அரிய வாய்ப்பு இருக்கிறது. அந்த வாய்ப்பை அனுர சரியாகப் பயன்படுத்துவாரா அல்லது முன்னைய ஆட்சியாளர்களை போல் அவரும் தமிழ் மக்களை ஏமாற்றிவிடுவாரா என்பதே இன்று தமிழ் மக்களிடத்தில் எழுந்திருக்கும் கேள்வியா கும். சிங்கள மக்களுக்கு தன்னை ஒரு ஹீரோவாக காட்டிக்கொள்ள முனையும் அனுர,தமிழ் மக்கள் மத்தியிலும் அந்த ஹீரோயிசத்தை வளர்க்க வேண்டுமாகவிருந்தால் தேர்தல் மேடைகளில் கூறிய சில வார்த்தைகளுக்காவது உயிர்கொடுப்பது அவசியமாகும்.தனது அரசாங்கம் நாட்டின் அனைத்து இன மக்களின் ஆதரவையும் பெற்றது என்று ஐ.நா.வில் பேசிய ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினை பற்றியோ, தீர்வு பற்றியோ எதுவும் பேசாதது தமிழ் மக்களிடத்தில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தது.அதேபோல்,எம்மை ஆதரித்த தமிழ் மக்களுக்கு நாம் துரோகம் செய்ய மாட்டோம் என்றும், புதிய அரசியலமைப்பில் தீர்வு காணப்படும் என்றும் அரசாங்கத்தின் முக்கியஸ்தர்கள் அவ்வப்போது உச்சரித்தாலும் அவற்றைத் தமிழ் மக்கள் நம்பும் அளவுக்கு அவர்களுடைய செயற்பாடுகள் அமையவில்லை.

தமிழ் மக்களின் தாயகத்தை அதாவது வடக்கையும் கிழக்கையும் சட்ட ரீதியாகப் பிரித்தது ஜேவிபி. சுனாமிக்குப் பின்னரான சுனாமிப் பொதுக் கட்டமைப்பை எதிர்த்து அனுர தனது அமைச்சுப் பதவியைத் துறந்தார்.இவை அண்மைக்கால ஜே.வி.பி.யின் தமிழர் விரோத செயற்பாடுகள்.ஆனால் இவற்றையெல்லாம் மன்னித்து தமிழர்களில் கணிசமானோர் அனுர அரசுக்கு தேர்தலில் ஆதரித்தார்கள். காரணம்,ஒரு நம்பிக்கை மாத்திரமே.

அந்த நம்பிக்கையை அரசாங்கம் நிறைவேற்றுமா என்பதே இன்று எழும் கேள்வியாகும்.தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்ற வகையில் அவர்களுக்கு அரசியல் பிரச்சினை உண்டு என்பதை அரசாங்கம் ஏற்றுக் கொண்டதாக தெரியவில்லை. பதிலாக தமிழ் மக்களுக்குப் பிரச்சினைகள் உள்ளன. அவை சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகள் என்பதே அவர்களின் நிலைப்பாடாக இருக்கிறது.ஆனால் சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளைவிட முன்னுரிமை அளிக்கவேண்டியது தமிழ் மக்களுக்கான பிரச்சினைக்கான அரசியல் தீர்வு என்பதை அரசாங்கம் புரிந்துகொள்வதிலேயே நாட்டின் எதிர்காலமும் ஆட்சியாளர்களின் எதிர்காலமும் தங்கியிருக்கிறது என்பதை புரிந்துகொள்வது அவசியமாகும்.

எனவே பாராளுமன்றத்திலும் சிங்கள மக்கள் மத்தியிலும் பலமாக இருக்கும் அரசாங்கம் தமிழர்களுக்கான தீர்வில் சற்று கரிசனை காட்டுவது காலத்தின் தேவையாகும்.முன்னைய ஆட்சியாளர்கள் செய்த தவறுகளால் அவர்கள் பெற்றுக்கொண்ட தண்டனைகள்-பின்னடைவுகள் தொடர்பான படிப்பினைகள் அனுரா அரசின் முன்னால் பாடங்களாக இருக்கின்றன.

இவர்களும் அவர்கள் செய்த தவறை செய்வார்களாக இருந்தால் இந்த நாட்டை கடவுளாலும் காப்பாற்ற முடியாத ஒரு நிலைமை உருவாகும் என்பதை வரலாற்று பாடங்களினூடாக கற்றுக் கொள்வது காலத்தின் தேவையாகும்.





விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.




# அநுரவின் முதலைக் கண்ணீர்

## முள்ளிவாய்க்காலை அழித்துவிட்டு, காசாவிற்காக அழுவது ஏன்?

**நவீனன்**

காசாவை விட அதிகளவில், முள்ளிவாய்காலில் இடம்பெற்ற பேரவலம் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் கண்ணுக்கு ஏன் புலப்படவில்லை என்பதே மிகப்பெரும் கேள்வியாகும். சர்வதேச ரீதியில் தம்மை நல்லவர்களாக காட்ட முயலும் சிங்கள சிறிலங்கா அரசாங்கம் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்ற கூடாது என்பதில் உறுதியாக உள்ளதை அநுரவும் நிரூபித்துள்ளார். தமிழ் தேசிய இனம், தேசிய விடுதலைக்காக கொடுத்த விலைகள் அதிகம். தமிழர் தாயகத்தில் ஏற்பட்ட பாதிப்புக்கள் அதிகம். பாலஸ்தீன மக்களின் துயரத்தை புரிந்து கொண்ட ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நீதிக்காக ஏங்கும் தமிழ் மக்களின் போராட்டத்தையும், அவர்களது வலியையும் புரிந்து கொள்ளாமை கடந்த ஆட்சியாளர்களின் மனநிலையில் தான் தேசிய மக்கள் சக்தியும் இருக்கின்றதா என்ற கேள்வியை எழுப்புகிறது.

கடந்த மாதம் செப்டம்பரில் ஐ.நா பொதுச் சபையின் 80 ஆவது கூட்டத் தொடரில் சிறிலங்கா ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க கலந்து கொண்டு உரையாற்றும் போது, பாலஸ்தீன மக்களுக்கான தனி அரசுக்கான பிரிக்க முடியாத உரிமையை அங்கீகரிக்கிறோம் என்று கூறினார்.ஆனால் காசாவை விஞ்சியதாக தமிழ் இன படுகொலையான முள்ளிவாய்காலில் இடம்பெற்ற பேரவலம் ஏன் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் கண்ணுக்கு புலப்படவில்லை என்பதே முக்கியமான கேள்வியாகும்.

பாலஸ்தீனத்தை அங்கீகரிக்கும் ஜனாதிபதி தமிழ் தேசிய இனத்தை மறந்தது ஏன் என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்றுதான். சர்வதேச ரீதியில் தம்மை நல்லவர்களாக காட்ட முயலும் அரசாங்கம் தமிழ் மக்களின் அரசியல அபிலாசைகளை வழங்குவதில் எவ்வித அக்கறையும் காட்டுவதில்லை என்பதை மீண்டும் தெளிவுபடுத்தி உள்ளார்.



### ஐ.நா அங்கீகாரம்:

கடந்த மாதம் செப்டம்பரில் ஐ.நா பொதுச் சபையின் என்பதாவது கூட்டத் தொடரில் ஒரு இறையாண்மை கொண்ட தனி நாடாக பாலஸ்தீனம் பல நாடுகளால் அங்கீகரிக்கப் பட்டுள்ளது.இதுவரை 81 சதவீத ஐ.நா உறுப்பு நாடுகளால் இம்முடிவு எட்டப் பட்டுள்ளது. தற்போது ஐ.நாவில் அங்கத்துவம் வகிக்கும் 193 ஐ.நா. உறுப்பு நாடுகளில் 157 நாடுகளால் பாலஸ்தீன தேசம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஐ.நா பொதுச் சபையில் இதன்மூலம் 194 நாடுகள் அங்கீகாரம் பெற்றுள்ளன. இலங்கை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவும் பாலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரிப்பதற்கு ஆதரவை வழங்கியுள்ளார். அங்கீகரிக்கப்பட்டுள்ள பாலஸ்தீனம் இஸ்ரேலுடன் வடக்கு, மேற்கு மற்றும் தெற்கிலும், கிழக்கில் ஜோர்தானுடனும், தென்மேற்கில் எகிப்துடனும் தனது எல்லைகளைப் பகிர்ந்து கொள்கிறது.

19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்தே பிரித்தானியாவின் ஆளுகையின் கீழ் இருந்த பிரதேசமாகவும் விளங்கிய பாலஸ்தீன நாடு தொடர்ந்து பேரவலங்களை சந்தித்து வருகின்றது. மேலும் அருகில் இருந்த அரபு நாடுகளிலும் அதிகம் மக்கள் பாதிக்கப்பட்டும் உள்ளனர். காலங்காலமாக போரால் பாலஸ்தீனம் கடும் நெருக்கடிகளை சந்தித்து வருகிறது. இஸ்ரேலிய மற்றும் பாலஸ்தீன மக்களின் நியாயமான பாதுகாப்பு மற்றும் மனிதாபிமான தேவைகளை அங்கீகரிப்பதும் அவசியம். 1967 ஆம் ஆண்டின் எல்லை வரையறையை கொண்டு, இரண்டு நாடுகள் அருகருகே இருப்பதற்கான அடிப்படையை வழங்கிய ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானங்களின் படி ஒரு நியாயமான மற்றும் நீடித்த தீர்வுக்காக நாம் ஒன்றுபட வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

### தமிழ் தேசிய இன எதிர்காலம்:

சிறிலங்கா தீவைப் பொறுத்த வரை பிரித்தானிய ஏகாதிபத்தியத்திடம் இருந்து சுதந்திரம் பெற்ற நாள் முதல் தமிழ் தேசிய இனம் தமக்கு சம உரிமையை கோரி ஆரம்பித்தில் முப்பது வருடமாக அகிம்சை வழியில் போராடியது. ஆனாலும் அதனை தென்னிலங்கையில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த ஆட்சியாளர்கள் கண்டு கொள்ளாததுடன் தமிழ் மக்கள் மீது இன வன்முறையை கட்டவிழ்த்து விட்டனர். இதன்விளைவாக தமிழ் தேசிய இனத்தின் இருப்பையும், அவர்களது தேசத்தையும் பாதுகாக்க தமிழ் இளைஞர், யுவதிகள் ஆயுதமேந்திப் போராட வேண்டிய நிர்ப்பந்த நிலை ஏற்பட்டிருந்தது.

அகிம்சை வழியில் போராடி வெற்றி பெறா நிலையில் கடந்த முப்பது வருட ஆயுதப் போராட்டம் ஈழத்தில் நடந்தது.

ஆனால் ஆயுதப் போராட்டம் 2009 ஆம் ஆண்டு மௌனிக்கப்பட்ட பின்னர் மீண்டும் 16 வருடங்களாக நீதி கேட்டும், சமவுரிமை கேட்டும் தமிழ் மக்கள் ஜனநாயக ரீதியாக போராடி வருகின்றனர். ஆக, தனது நாட்டிற்குள் சிங்கள தேசிய இனத்தைப் போல் இன்னொரு இனமான தமிழ் தேசிய இனமும் சுதந்திரமாக வாழ்வதற்காக 76 வருடத்திற்கு மேலாக சொல்லண்ணா, துன்ப துயரங்களுடன் போராடி வருகின்றது.

அதற்காக தமிழ் தேசிய இனம் கொடுதத விலைகள் அதிகம். நாட்டில் ஏற்பட்ட பாதிப்புக்கள் அதிகம். பாலஸ்தீன மக்களின் துயரத்தை புரிந்து கொண்ட ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க சொந்த நாட்டில் நீதிக்காக ஏங்கும் மக்களின் போராட்டத்தையும், அவர்களது வலியையும் புரிந்து கொள்ளாமை கடந்த ஆட்சியாளர்களின் மனநிலையில் தான் தேசிய மக்கள் சக்தியும் இருக்கின்றதா என்ற கேள்வியை எழுப்புகிறது.

வேடிக்கை என்னவென்றால் ஒருபுறம் பாலஸ்தீனம் மீது கருணை காட்டும் ஐ.நா சபை, தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளையும், அவர்கள நீதிக் கோரிக்கைகளையும் நீதியான முறையில் அணுகி தீர்வைப் பெற்றுக் கொடுக்க தவறியுள்ளது என்பதை மறுக்க முடியாது.

28 ஆம் பக்கம் பார்க்க...

மணமகன் தேவை



யேர்மனியில் Wirtschafts ingenieur
Master படிப்பைத் தொடங்கியுள்ள
36 வயது நற்குணமுள்ள சைவ
வேளாள பெண்ணிற்கு பொருத்தமான
பட்டதாரி மணமகனை பிறாங்பேட் சுற்று
வட்டத்தில் எதிர்பார்க்கும் பெற்றோர்.
49 1577 43 18 528






# கனடாவில் உடலுக்கும், உள்ளத்திற்கும் ஆரோக்கியம் தந்த நிகழ்ச்சி

## மறந்துபோகுமா மண்ணின் வாசனை!

அண்மையில் புதன்கிழமை 08.10.2025 மாலை 5.00 மணிக்கு கனடா பொக்குறூஸ் முதியோர் நலன்புரிச் சங்கம் மார்க்கம் அமைப்பினர் நடத்திய ஆரோக்கியமான நிகழ்வு. முதல் நிகழ்வாக மூத்தகுழந்தைகளான 55 வயது முதல் 80 வயதானவர்களுக்கு யோகா அப்பியாசங்களை மாலினி பரராஜசிங்கம் அவர்களின் வழிகாட்டலில் சிறப்பாகச் செய்தனர்.

ஆலயங்களில் எங்கு தூண் இருக்கும் என்று தேடி அத்தூணைப்பிடித்து எழும்ப வசதியாக இடம்பார்த்து தூணடியில் இருப்பார்கள். (இருந்து எழும்பமுடியாதவர்கள்) சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம் என்பதற்கு இணங்க அவர்களது அப்பியாசங்கள் உடலாரோக்கியம் பேணும் வண்ணம் அமைந்திருந்தது.

தொடர்ந்து சிறப்பு அமர்வாக யேர்மனியில் இருந்து வருகை தந்த வெற்றிமணி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் மு.க.சு.சிவகுமாரன் அவர்கள், சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ள நிகழ்வுகள் தொடர்ந்தன. விழா அமைப்பின் தலைவி சுந்தரேஸ்வரி. யோகராஜா அவர்களும், காரியதரிசி நவநீதன் அவர்களும் வெற்றிமணி பத்திரிகை ஆசிரியர் பற்றியும் அவர் கனடாவில் பெற்ற கௌரவ விருதுகள் பற்றியும் வியந்து பேசினர்.






வெற்றிமணி பத்திரிகை ஆசிரியர் தனதுரையில், இங்கு முன்வரிசையில் இருப்பவர்கள் எவரும் முதியவர்களல்ல, முதிர்கனிகள். ஒவொருவரும் சிறந்த ஆளுமைகொண்டவர்கள். என் முன்னால் இருக்கும் திரு. ஆ. சிவநேயச்செல்வன் மகாஜனாக்கல்லூரி பழய மாணவர். அவரது கம்பீரமும், பின்னாளில் தினக்குரல் பத்திரிக்கை யின் ஆசிரியராக காட்டிய நேரத்தியும் என்மனதில் இளமையாகவே இருக்கின்றது.

உடல் வயதினை அடைந்தாலும் இவர் செய்த பணிகள் என்றும் எம்மவர் மத்தியில் இளமையாகவே இருக்கும். இளமை முதுமை எமது செயலைப்பொறுத்தது. இங்கே மாலினி பரராஜசிங்கம் அவர்களின் செயல் அவருக்கு மட்டுமல்ல அவரோடு பயணிக்கும் உங்களுக்கும் முதுமையைத் தராது என்பது என் கருத்து என்றார்.

கடந்த 06ம் திகதி ஆசிரியர் தினம் அதனையொட்டி இந்நிகழ்வில் ஆசிரியர்களாக சிறந்த சேவையை வழங்கிய சிலர் அங்கு கௌரவிக்கப்பட்டனர். வெற்றிமணி ஆசிரியர் மு.க.சு.சிவகுமாரன், அவர் துணைவி ஜெயபவானி சிவகுமாரன், இவர்களுடன் திரு நாகராஜா அவர்களும் இணைந்து சேவைச் சான்றிதழ்களை வழங்கினர்.

### நிர்வாகசபை உறுப்பினர்களும், யோகசன ஆசிரியையும்

### சான்றுகள் பெற்றவர்கள் விபரம்

ஆறுமுகம். சிவநேசச்செல்வன் (முன்னாள் தினக்குரல் பிரதம ஆசிரியர்), லக்சுமி நடராஜா. வசந்தி. பாலஸ்காந்தன். நவநீதன். நவரட்ணம்., கன்னிகை அந்தோனிப்பிள்ளை, மாலினி. பரராஜசிங்கம், நமசிவாயம். கந்தையா, திருச்செல்வம். திருநாவுக்கரசு, சுந்தரலிங்கம். ராஜலிங்கம். பொக்குறூஸ் முதியோர் நலன்புரிச் சங்கம் மார்க்கம் சார்பாக நவநீதன் (காரியதரிசி) சுந்தரேஸ்வரி யோகராஜா (தலைவர்) ஜெயதேவி சிவபாதசுந்தரம் (தனாதிகாரி.) இவர்களுடன் யோகா ஆசிரியர், மாலினி பரராஜசிங்கம், நிர்வக உறுப்பினர்களும் இணைந்து ஒன்றுபட்டு நிகழ்வுகளை முன்னெடுத்தது நிகழ்சிக்கு மகுடம் சூட்டியது. மறந்துபோகுமோ மண்ணின் வாசனை(மாலினி) அலை பாயுதே கண்ணா (வசந்தி)திருவடி சரணம் என்ற பாடல் (அருள்) சிந்தனை செய்மனமே (பரமு)பல உறுப்பினர்கள் நினைவில் நீங்காத பாடல்களை பாடி யாவரையும் இளமைக்காலத்தில் மிதக்கவைத்தனர்.

நெகிழவைத்தனர். நிகழ்ச்சிக்கு வந்த பலரும் இளமைபெற்று திரும்பிய நிகழ்வாக இந்நிகழ்வு அமைந்தது.







Nandys Restaurant Bochum, Kortumstraße 9, 44787 Bochum/GERMANY | Tel: 0049 234 610 68 540



அருண் செல்வராஜ்
(அட்டன்– பொகவந்தலாவை)

# கருவூரில் விஜய் கட்சி காலியானதா? கருங்காலியானதா!

தமிழக அரசியலில் அடுத்த வருடம் யார் மகுடத்தை சூடுவது என்கிற பெரும் போட்டி நிலவுகிறது. திமுக, அதிமுக, நாம் தமிழர் கட்சி என மும்முனை போட்டிகள் இருந்த நிலையில், திமுகவின் வெற்றியை ஒரு வேளை கனவாக்கி விடுவார்களோ என்கிற பயத்தை விஜயின் தமிழக வெற்றி கழகத்தின் வருகை அமைந்துள்ளது.

நாம் தமிழர் கட்சியின் சித்தாந்தத்தை தாண்டி சீமானின் வாக்குகள் குறைய வாய்ப்பில்லை என்று அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர் .அப்போது யாரின் வாக்கு குறையும் என்றால் அது நிச்சயமாக திமுகவின் வாக்கு வங்கியே ஆகும் . இருந்தாலும் சீமானிடம் இருந்து விஜய் இரசிகர்கள் வாக்காக மாறி த.வெ.வுக்கு போகவும் இடம் உண்டு.

அதிமுக ஏற்கனவே உடைந்து சின்னாபின்னமாகி உள்ள நிலையில் மேலும் செங்கோட்டையன் மற்றும் எடிப்பாடியாரின் முறுகு நிலை பாரிய தாக்கத்தை செலுத்தியுள்ளது.

பாஜக அதிமுகவை கைப்பாவையாக உபயோகிக்க நினைக்கிறது ஆனால் அந்த கூட்டணி நிச்சயமாக வெற்றி பெற வாய்ப்புகள் குறைவு.

எனவேதான் திமுக, நாம் தமிழரையும்,தமிழக வெற்றி கழகத்தையும் நேரடி எதிரியாக எதிர்க்கிறது.

இதில் சீமான் திமுக மீதான எதிர்ப்பை குறைத்து தழிக வெற்றி கழத்தை முழுமையாக எதிர்க்க காரணம் தன் கட்சியின் இளைஞர் வாக்குகள் தப்பி தவறியேனும் விஜய் மாயையில் விழுந்து விட கூடாது என்பதுதான்.

தவறியேனும் நாம் தமிழர் வாக்கு திமுக பக்கம் போகாது மாறாக விஜய் பக்கம் போகாமல் இருக்கவே சீமான் விஜயை அதிகமாக விமர்சனம் செய்கிறார்.

ஆகாவே நாம் தமிழரையும்,தமிழக வெற்றி கழகத்தையும் முழுமையாக எதிர்க்கவேண்டிய சூழ்நிலை திமுகவுக்கு உள்ளது . சீமானை அவதூறு கொண்டு கட்டுப்படுத்தி வந்த திமுக விஜயை எப்படி கட்டுப்படுத்துவது என்று திணறிவந்த சூழலில் கரூரை திமுக பயன்படுத்தி கொண்டது .



ஒருபக்கம் விஜயின் அரசியல் அனுபவமின்மையும் , காலம் தாழ்த்திய சில பணிகளும் 41 மரணங்களுக்கு காரணம் என்று சொன்னாலும் , இந்த விபத்தின் பின்னணியில் திமுக இருக்கும் என்பது அனைவரின் யூகமும் கூட .

கிட்டத்தட்ட ஆயிரம் அடியாட்கள் கூட்டத்துக்குள் இறக்கி விடப்பட்டு இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது , இறந்தவர்களின் உடல்கள் குறிப்பிட்ட சில மணித்துளிகளுக்குள்ளே மரணபரிசோதனை செய்யப்பட்டுள்ளது , மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது , போலீசாரின் பாதுகாப்பு குறைக்கப்பட்டுள்ளது , போலி அவசர ஊர்திகள் விடப்பட்டுள்ளது இவை அனைத்தும் எதோ ஒரு திட்டமிட்ட செயலாகவே பார்க்க தோன்றுகிறது .

விஜயின் அரசியல் ஆசை என்பது தனக்கு இருக்கும் மக்கள் செல்வாக்கை மட்டுமே கொண்டது ,மாறாக எந்த ஒரு அரசியல் சிந்தாந்தம் உடையது இல்லை , இதுவரை கொள்கை இல்லாத கட்சியாக மட்டுமே உள்ளது .விஜய்க்கு இது புதியது என்றாலும் மக்களின் உயிரை சிறிய விடயமாக கருத கூடாது .

என்னை பொறுத்தவரையில் திமுகவின் வலையில் விஜய் விழவில்லை மாறாக எங்கே வலையை எப்போது எவ்வாறு விரிக்கவேண்டும் என்று திட்டமிட்டு கொடுத்து மாட்டிக்கொண்டார் .

அரசியல் சாணக்யத்தனம் இன்னும் விஜய்க்கு வேண்டும் , திமுகவின் அரசியல் யுக்தி மிக மோசமாகவே உள்ளது. செந்தில் பாலாஜி எனும் நபரையோ ,ஸ்டாலின் எனும் நபரையோ இலகுவாக எடை போடமுடியாது , அவர்களின் கருப்பு வரலாறுகள் மிகப்பயங்கரமானவை .

மத்தியில் ஆளும் பாஜக எப்படி சரி திமுகவை கட்டுபடுத்த வேண்டும் என்று நினைப்பது உண்மைதான்,உள்ளே நண்பர்கள், வெளியே எதிரிகள் எனும் இரட்டை நிலைப்பாடே திமுக மற்றும் பாஜகவின் தற்போதைய நிலையாக உள்ளது.

ஆனால் முழுமையாக திமுகவை கட்டுபடுத்த இந்த முறை தேர்தல் வியூகத்தை அல்லது அதிகாரத்தை இன்னும் அதிகமாக பாஜக பயன்படுத்தும். வரும் நாட்களில் பல கைதுகளோ அல்லது விசாரணைகளோ வரலாம். அது கரூர் பிரச்சினையின் ஊடீஜ விசாரனையாக கூட இருக்கலாம்.

செந்தில் பாலாஜி ஏற்கனவே ஊழல் வழக்கில் சிக்கி இருந்தாலும் கரூர் பிரச்சினை முழுமையாக அவரை சிக்க வைத்துவிடுமோ என்கிற பயமும் திமுக பக்கம் உள்ளது உண்மைதான்.

நாம் தமிழரின் 8.8 விழுக்காடு வாக்கு வங்கியில் பெரிய மாற்றம் இருக்க வாய்ப்பில்லை ஒரு வேளை 7 விழுக்காடுகளுக்கு செல்லும்.

விஜயை தவிர்த்து தமிழக வெற்றி கழகத்தில் யாரும் மக்கள் பலம் கொண்டவர்களோ அல்லது பேச்சி திறன் கொண்டவர்களோ இல்லை ஆகவே இது பெரிய பின்னைடவாகும். இருந்தாலும் விஜய் முகம்தான் அவரது த.வெ.க. சின்னம் போல் இளசுகள் மன தில் பதிந்துவிட்டது. எனவே எந்த தொகு தியிலும் அவர் நிறுத்தும் வேட்பாளருக்கு அவர்

விஜய் என்றே தோன்றினால். ஒரு சுனாமியாக பட்டாளம் புறப்படலாம். பல இடங்களில் விக்கட் விழலாம். விஜய் தன் விவேகத்தை வளர்க்க வேண்டு?ம், இரசிகர்களை மட்டுமல்ல தி. மு. வை எதிர்ப்போரை தம்பக்கம் எடுக்க வேண்டும். அதற்கு தி. மு. சும்மா இருக்குமா. அரசியல் பலரக முதலைகள் உள்ள குளம். இந்த முதலைகளை அறிந்தே சுப்பஸ்டார் சுப்பராக நழுவினார் என்பது இப்போது பலருக்கும் புரிந்து இருக்கும். கலைஞரின் தி. மு. க வை விட நாம் அவர் தமிழைத் தான் நேசித்தோம் என்று சொல்வோரே இப்போதும் நம் நாட்டில் அதிகம்.




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# Allianz



**Piratheeb Pathmanathan Allianz**
வாடிக்கையாளர்கள் தொடர்பு இலக்கம்: 0151 240 33 546

**நான் எந்தக் கார் காப்பீட்டு நிறுவனத்தையும் வெல்லவே முயல்வேன் நிச்சயமாக!**

## எங்களிடம் மாறினால் ஒவ்வொரு காப்புறுதியிலும் வருடம் 300 Euro க்கும் அதிகமான பணத்தினை சேமிப்பதற்கு நாங்கள் உதவுவோம்



உங்களிற்கு நான், அனைத்து வாகனக் காப்புறுதிகளின் ஒப்பிடுகையில் சிறந்ததைத் தருவேன் என்பது உறுதி!

உங்கள் கார், வீடு, ஆரோக்கிம் அல்லது ஓய்வூதிய திட்டம் என எதுவாக இருந்தாலும், அதற்கான சிறந்த தீர்வை நான் கண்டுபிடிப்பேன். கட்டணரீதியாக மற்றும் சேவைரீதியாக, மற்றைய வாகனக் காப்பீட்டையும் விட மிகச் சிறந்ததை, நான் தருவேன்.



அத்தோடு, எம்நாட்டவருக்கு தமிழில் உதவவும், எதிர்காலத்தில் இணைந்து உயரவும் மற்றும் புதிய புதிய வாய்ப்புக்களை உருவாக்கவும் அதிக ஆர்வம் கொண்டுள்ளேன்.

### உங்கள் Allianz காப்புறுதி முகவர்

காப்புறுதி இன்று வழமையைவிட மிகவும் அத்தியாவசியமானதாகிவிட்டது.

முற்பாதுகாப்பு செய்தவரே, தன் வாழ்க்கையை கடினமின்றி நடத்த முடியும் எதிர்பாராத சூழ்நிலைகள் அல்லது விதி தனது எதிர்காலத்தை பொருளாதார ரீதியாக பாதிக்கும், என்ற பயமின்றி.



Allianz பிரதிநிதியாக, உங்கள் பாதுகாப்பு, முன்னேற்றம் மற்றும் உங்கள் சொத்துப் பெருக்கம் தொடர்பான அனைத்து விடயங்களிலும், நான் உங்கள் நம்பகமான நபராவேன்.

உங்களிற்கு தேவைகள் எப்போதும் வரலாம், அதனாலேயே எனக்கும் விடுமுறைகள் கிடையாது நீங்கள் வாரத்தின் ஏழு நாட்களும் என்னை தொடர்புகொள்ளலாம்.



### என் நோக்கம்:

ஆரோக்கியம் என்ற அளவற்ற செல்வமும், பாதுகாப்பு என்ற அத்திவாரமும் கொண்டு நம் வளமான வாழ்வை கட்டியமைத்தல்.

திறமையும் மற்றும் உணமையான பொறுப்புணர்வும் உள்ள ஒரு பங்குதாரரைத்தான் நீங்கள் நம்ப வேண்டும்.

---

நீங்கள் என் அலுவலகத்திற்கு வருவது, என்னையும் உங்களையும் மகிழ்விக்கும்!

Allianz பொதுமுகவர்: ______________________

Edmund-Weber-Str. 204, - 44651 Herne | [015124033546] | [p.pathmanathan@allianz.de]



# பொட்டு
## அழகும் அறிவியலும்

மனித சமூகம் வளர்ச்சியடைந்த போதெல்லாம் கலாச்சாரம், மரபு, சடங்கு ஆகியவை மனித வாழ்க்கையில் அழியாத பாகமாக இருந்து வருகின்றன.

இவற்றில் பலவற்றிற்கு ஆழமான ஆன்மீகப் பின்னணி உள்ளது சிலவற்றுக்கு உடல் நலனுடன் தொடர்பான அறிவியல் விளக்கங்களும் உள்ளன. அவ்வாறான அழகிய மரபுகளில் ஒன்றுதான் நெற்றியில் பொட்டு வைப்பது.

பெண்களின் முகத்தை அழகாக்கும் பொட்டானது வெறும் அழகுப் பொருளாகவே சிலரால் கருதப்பட்டாலும், அதன் பின்னால் மறைந்திருக்கும் உளநலம், உடல்நலம், ஆன்மீகம் ஆகிய மூன்று தளங்களும் வியப்பைத் தரும் அளவிற்கு அறிவியலுடன் பிணைந்திருக்கின்றன.

### பொட்டு - வரலாறும் மரபும்

நெற்றியில் பொட்டு வைப்பது பண்டைய காலத்திலேயே நடைமுறையில் இருந்துள்ளது. சிந்து சமவெளி நாகரிகத்தில் கண்டெடுக்கப்பட்ட சில மண் சிற்பங்களில் பெண்களின் நெற்றியில் சிறிய வட்டமோ, கோடோ வடிவமோ காணப்படுகிறது. இது அந்தக் காலத்திலேயே பொட்டு அல்லது திலகம் கலாச்சாரத்தில் முக்கிய பங்கு வகித்தது என்பதை நிரூபிக்கிறது.

புராணங்களில், தெய்வங்கள் தங்கள் பக்தர்களின் நெற்றி மத்தியில் புண்ணிய பசுமணல் அல்லது சிந்தூரம் வைப்பதைக் குறிக்கும் நிகழ்வுகள் காணப்படுகின்றன. அதனால், இது தெய்வீகத்துடன் தொடர்புடைய ஒரு ஆத்ம சின்னம் என்றும் கருதப்பட்டது.

திருமணமான பெண்கள் சிவப்பு குங்குமம் வைப்பது வழக்கம் இது “மங்களக் குறி“ என்று அழைக்கப்பட்டது. திருமணத்திற்குப் பின் பெண்கள் தங்கள் கணவரின் நலனையும் நீண்ட ஆயுளையும் குறிக்கும் அடையாளமாக பொட்டு வைத்தனர். இது அவர்களைத் திருமண மானவர்கள் எனப் பிரித்தறியவும் உதவி யது.

ஆண்கள் விபூதி, சந்தனம் போன்றவற்றை வைப்பதும் பரவலாக இருந்தது.

### மத மற்றும் ஆன்மீக விளக்கம்

நெற்றி மத்தியில் பொட்டு வைப்பது மதபூர்வமான ஒரு அர்த்தத்தைக் கொண்டுள்ளது. வேதங்களும் தந்திரங்களும் குறிப்பிடுவது போல, நெற்றி மத்தியில் உள்ள இடம் “ஆஜ்ஞா சக்கரம்“ எனப்படும் ஆறாவது சக்தி மையம் ஆகும்.

இந்த சக்கரம் மனிதனின் “ஞானக் கண்“ அல்லது “மூன்றாவது கண்“ என்று அழைக்கப்படுகிறது. இச்சக்கரம் திறந்தவுடன், மனிதன் வெளி உலகைத் தாண்டி உள்ளுணர்வின் வெளிச்சத்தை அடைகிறான் என யோக மரபுகள் விளக்குகின்றன.

ஆஜ்ஞா சக்கரத்தின் மையத்தில் உள்ள சக்தியை சுறுசுறுப்பாக வைத்திருக்க நெற்றி மத்தியில் திலகம், குங்குமம், சந்தனம் போன்றவை வைப்பது வழக்கமாகிவிட்டது. இது மூளையில் உள்ள பினியல் குருதி (Pineal gland) பகுதியைச் சுட்டுகிறது. அந்தக் குருதி ஆன்மீக விழிப்புணர்வுடன் தொடர்புடையதாக யோக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

வசியம் செய்வதிலிருந்து காக்கும் ஒரு வழியாகவும் பொட்டு வைத்தல் காணப்படுகின்றது.

### பொட்டின் நிறங்களும் அதன் அர்த்தங்களும்

பொட்டின் நிறங்கள் பலவாக இருந்தாலும், ஒவ்வொரு நிறத்திற்கும் தனித்தனி அர்த்தம் உள்ளது:

- ✸ சிவப்பு: ஆற்றல், உயிர்ச்சி, உற்சாகம் மற்றும் மங்களம். திருமணமான பெண்கள் இதையே பயன்படுத்துவர்.
- ✸ வெள்ளை: அமைதி, தூய்மை, பக்தி.
- ✸ மஞ்சள் / சந்தனம்: குளிர்ச்சி, ஆன்மீக ஒழுக்கம், மன அமைதி.
- ✸ கருப்பு: தீய சக்திகளிலிருந்து பாதுகாப்பு. சிறுவர்களுக்கு வழக்கமாக வைப்பது இதுதான்.

இவ்வாறு ஒவ்வொரு நிறமும் மனிதனின் மனநிலை, உடல்நிலை, ஆன்மீகநிலை ஆகியவற்றுடன் தொடர்புடையதாய் கருதப்படுகிறது.





பொலிகையூர் ரேகா
(இங்கிலாந்து)

### விஞ்ஞான விளக்கம்

இன்றைய காலத்தில் பல விஞ்ஞானிகள் மரபு வழக்கங்களின் பின்னணியில் உள்ள உடலியல் மற்றும் நரம்பியல் காரணிகளை ஆராய்ந்துள்ளனர். நெற்றியில் பொட்டு வைப்பதற்கும் பல அறிவியல் காரணங்கள் உள்ளன.

### 1. நரம்பு மையத்தின் அழுத்தம்

நெற்றியின் நடுவே உள்ள புருவங்களுக்கிடையிலான இடம் (Glabella) மூளையின் முக்கிய நரம்புகள் இணையும் மையமாகும். இந்த இடத்தில் மெதுவாக அழுத்தம் ஏற்படும்போது, மூளையின் முன்பகுதிக்கு இரத்த ஓட்டம் சரியாக நடைபெறும்.

இது மனஅழுத்தம் குறைதல், கவனத்திறன் உயர்வு, தலைவலி குறைதல் போன்ற பல நன்மைகளைத் தருகிறது.

### 2. அக்குபிரசர் புள்ளி

அக்குபிரசர் மருத்துவத்தின் படி, நெற்றியின் மையம் ஒரு முக்கிய புள்ளியாக கருதப்படுகிறது. அங்கு சிறிய அழுத்தம் தருவது மனஅமைதி, தூக்கம், நிம்மதி ஆகியவற்றை அளிக்கிறது. தினமும் பொட்டு வைப்பது அந்தப் புள்ளியைச் சீராக தூண்டுவதால் உடல்நலனுக்கும் மனநலனுக்கும் பயன் தருகிறது.

### 3. மூளையின் பினியல் குருதி தூண்டல்

நெற்றி மத்தியில் உள்ள பகுதி, மூளையில் உள்ள பினியல் குருதியின் வெளிப்புற இடத்துடன் தொடர்புடையது. இந்தக் குருதி மெலடோனின் (Melatonin) என்ற ஹார்மோனை உற்பத்தி செய்கிறது இது தூக்கச் சுழற்சி, மனஅமைதி மற்றும் உடல் சமநிலையை கட்டுப்படுத்துகிறது. பொட்டு வைப்பது இந்தக் குருதியைச் செயல்படுத்தி, மனநிலையைச் சீராக்கும்.

### 4. குளிர்ச்சி அளிக்கும் இயற்கைப் பொருட்கள்

சந்தனம், குங்குமம், மஞ்சள், பசுமணல் போன்றவை இயற்கையாகவே குளிர்ச்சி தரும் தன்மையுடையவை. நெற்றி மத்தியில் இவை வைப்பதால் உடல் வெப்பம் குறைந்து தலைநோய், கண்நோய், மனச்சோர்வு போன்றவை குறையும்.

### 5. மனநிலையை சீராக்கும் ஹார்மோன்கள்

சில ஆய்வுகள் தினமும் நெற்றி மத்தியில் சிறிய அளவு அழுத்தம் கொடுப்பது செரட்டோனின் என்ற மனநிறைவு ஹார்மோன் அளவை அதிகரிக்கக்கூடும் எனக் கூறுகின்றன. இதனால் மனஅழுத்தம் குறைந்து அமைதி நிலை ஏற்படுகிறது.

### 6.குளிர்ச்சியையும்,உடலின் சக்தியைப் பேணலும்

நம் மனம் கவலையால் வாடும்போது, நெற்றிப் பகுதியானது சூடாகித் தலைவலி அதிகமாவதை உணர்கிறோம். நெற்றியில் இடும் திலகம், அந்தப் பகுதியைக் குளிர்விப்பதோடு நம் உடலின் சக்தி வெளியேறி விரயமாவதையும் தடுக்கிறது.

பொட்டு வெறும் அழகுச் சின்னம் அல்ல் அது சமூகத்தில் பெண்ணின் மனநிலையும், குடும்பத்தின் நலனையும் பிரதிபலிக்கும் ஒரு கலாச்சார குறியாக இருந்து வந்துள்ளது.எம் மரபுகள் வெறும் மூடநம்பிக்கைகள் அல்ல. அவை அறிவியலின் அடிப்படையில் உருவான பழமையான நுண்ணறிவு முறைகள்.

நெற்றி மத்தியில் பொட்டு வைப்பது ஒரு சிறிய செயல் என்றாலும், அது மனிதனின் உடல், மனம், ஆன்மா ஆகிய மூன்றையும் ஒருங்கிணைக்கும் ஒரு செயல்.

பொட்டு- பெண்களின் அழகையும், மனிதனின் ஆன்மீக விழிப்புணர்வையும் ஒருங்கே பிரதிபலிக்கும் சிறிய வட்டம் ஆனால் அதற்குள் நிறைந்திருப்பது ஆயிரம் ஆண்டுகள் பழமையான அறிவும் அறிவியலும் தான்.

விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

05 ஆம் பக்கத் தொடர்ச்சி... அறிவு; ஆற்றலின்...

என்பது ஆற்றல் ஓட்டத்தை நுணுக்கமாக வடிவமைக்கும் பிரபஞ்சத்தின் ஒரு வழி. கோடிக்கணக்கான ஆண்டுகளில், உயிரியல் அமைப்புகள் ஆற்றலை பிடித்து மாற்றி அமைக்கும் திறனில் மேம்பட்டு வந்துள்ளன. இதனால் அவை நீண்ட காலத்திற்கு அதிக ஒழுங்கை நிலைநிறுத்த முடிந்தது.

ஒளிச்சேர்க்கை (photosynthesis), சுவாசம் (respiration), பன்மையுயிரி-னங்கள் (multicellularity), மற்றும் இறுதியாகச் சிந்தனை (consciousness) — இவை அனைத்தும் இந்த வெப்ப இயக்கவியல் நடனத்தில் ஆற்றல் பயன்பாட்டின் மேம்பட்ட அடையாளங்களாகும்.

| பரிணாம நிலை | ஆற்றல் பயன்பாடு | திறன் ஒப்பீட்டு ஆற்றல் தேவை (Arbitrary units) | தரவு வகை |
|---|---|---|---|
| ப்ரோகரியோட்டுகள் (ஆக்ஸிஜன் இன்றி) | ஒரு குளுக்கோஸுக்கு 2 ATP | 1 | உண்மை தரவு |
| சயனோபாக்டீரியா (ஒளிச்சேர்க்கை) | சூரிய ஒளியின் 1-2% உயிர்ச்சத்தமாக மாற்றம் | 2 | உண்மை தரவு |
| யூகேரியோட்டுகள் (மைட்டோகாண்ட்ரியா) | ஒரு குளுக்கோஸுக்கு 36 ATP | 18 | உண்மை தரவு |
| பன்மையுயிரினங்கள் | ஒற்றை உயிரின் 10 மடங்கு ஆற்றல் | 30 | மதிப்பீடு |
| காம்பிரியன் வெடிப்பு | உயிரினங்கள் ஆக்ஸிஜன் சார்ந்த சிக்கலான சுவாசம் | 60 | கருத்தியல் |
| பாலில்லா இனப்பெருக்கம் | குறைந்த செலவு, 100% மரபணு பரிமாற்றம் | 5 | கருத்தியல் |
| பாலின இனப்பெருக்கம் | அதிக செலவு, மரபணு பல்வகைத் தன்மை | 15 | கருத்தியல் |
| ஊர்வன (Ectotherms) | 1 கிலோ பல்லிக்கு 50 கலோகலரி/நாள் | 10 | உண்மை தரவு |
| மனித மூளை | உடல் ஆற்றலின் 20-25% பயன்பாடு | 120 | உண்மை தரவு |
| வேட்டையாடி -சேகரிப்போர் | 2,500 கலோகலரி/நாள் | 80 | உண்மை தரவு |
| நவீன மனிதர் (தொழில்துறை யுகம்) | எரிபொருளுடன் 230,000 கலோகலரி/நாள் | 900 | உண்மை தரவு |

**(தரவு ஆதாரம்:** Adapted and synthesized from Lane Martin, 2010; Gillooly et al., 2001; Aiello Wheeler, 1995; Smil, 2017)

**தொடரும்...**

15 ஆம் பக்கத் தொடர்ச்சி...

பயன்படுத்தப்படும்போது, அது அவர் களுக்கு மன உளைச்சல், பதட்டம் மற்றும் மனச்சோர்வை ஏற்படுத்தலாம். அவமானம்: தவறான படங்களால் ஒருவ ரின் சமூக மதிப்பு பாதிக்கப்படலாம்.

சைபர் மிரட்டல்: AI படங்களைப் பயன்படுத்தி ஒருவரை மிரட்டவோ அல்லது கேலி செய்யவோ பயன்படுத்தலாம்.

நம்பகத்தன்மை இழப்பு: AI படங்களின் அதிகரித்த பயன்பாடு, உண்மையான படங்களுக்கும் போலி படங்களுக்கும் உள்ள வித்தியாசத்தைக் கண்டறிவது கடி னமாக்கும். இது தகவல்களின் நம்பகத்த ன்மையை குறைக்கும்.

இந்த பிரச்சனைகளைத் தவிர்க்க, AI படங்களை உருவாக்கும் மற்றும் பயன்படு த்தும் போது பொறுப்புணர்வுடனும், நெறி முறையுடனும் செயல்படுவது மிகவும் முக்கியம். ஒரு பொருளை முறையாகவும், அளவாகவும் பயன்படுத்தினால் நன்மை பயக்கும். AI ஒரு சக்திவாய்ந்த கருவி, அதை எப்படிப் பயன்படுத்துகிறோம் என்பதைப் பொறுத்து அது நன்மையையும் தீமையையும் தரக்கூடியது. குடும்ப உறவு களைப் பிரிப்பது போன்ற எதிர்மறை விளைவுகளும் ஏற்படலாம்,

அதே நேரத்தில் பல நன்மைகளை யும் வழங்குகிறது. எனவே, எந்த ஒரு பொருளையும் அல்லது செயலையும் அதன் விளைவுகளைப் பற்றி நன்கு ஆரா ய்ந்து முறையாகப் பயன்படுத்தினால் மட்டுமே அது நன்மை பயக்கும் என்பதை உணருங்கள். போகிற போக்கில் பார்த் தால் பல குற்றச்செயல்கள் அவை குற்றம் இல்லை என்று குற்றப்பட்டியலில் இருந்து நீக்கப்படுவதுபோல், நாம் குற்றம் என இன்று நினைப்பவை நாளை நீக்கப்பட்டா லும் ஆச்சரியம் இல்லை.

**(மாதவி.விமானத்தில் இருந்து. 12.10.2025)**

23 ஆம் பக்கத் தொடர்ச்சி... அநுரவின்

மேலும் ஐ.நாவில் உலகில் எந்த நாடும் போரை விரும்பவில்லை. போர் அல்லது மோதல், அது எங்கு, எப்படி நடந்தாலும், அது ஒரு சோ கம் என்பதை யாவரும் அறிவார்கள். இப்போ தும் கூட அந்த சோகத்தின் வலி உலகின் பல பகுதிகளிலும் உணரப்படுகிறது. மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக போரின் கசப்பான அனுபவத்தை அனுபவித்த ஒரு நாடாக, அதன் அழிவை தமிழர்கள் நாங்கள் நன்கு அறிவோம். தமிழர் தாயகத்தில் மே18 இல் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவு கூறப்பட்ட வேளையில், சிங்கள தேச த்தில் போர் வெற்றி தினம் அனுஷ்டிக்கப்பட்டது. இந்த போரில் இறந்த ஆயிரக்கணக்கான மக்களின் நினைவுச் சின்னங்களுக்கு முன், அவர்களின் பெற்றோர், குழந்தைகள் மற்றும் மனைவிகள் எழுப்பிய வேதனையான வேண்டுகோள்களைப் பார்க்கும் எவரும், போரைக் கனவு காணக்கூட மாட்டார்கள் எனவும் தெரிவித்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்திருந்தார்.

காசா பகுதியில் இடம்பெற்ற மனித பேரவலம் குறித்தும் அது துயரமான திறந்தவெளி சிறைச்சாலையாக உள்ளதாகவும் கவலை வெளியிட்ட அநுர தமிழர் தாயக நிலையை ஒருபோதும் எண்ணிப் பார்ப்பதில்லை. காசாவை விட அதிகளவில், முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற பேரவலம் ஏன் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் கண்ணுக்கு புலப்படவில்லை என்பதே மிகப்பெரும் கேள்வியாகும். சர்வதேச ரீதியில் தம்மை நல்லவர்களாக காட்ட முயலும் சிங்கள சிறிலங்கா அரசாங்கம் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்ற கூடாது என்பதில் உறுதியாக உள்ளதை அநுரவும் நிரூபித்துள்ளார்.




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# சோலைக்குயில் அவைக்காற்றுக் களத்தின் 37 ஆவது ஆண்டு விழா

சோலைக்குயில் அவைக் காற்றுக் களத்தின் ஆண்டு விழாவில் ,12.10.2025 அன்று காலை விருந்தினர்கள் பேராசிரியர் சி .சிவலிங்கராஜா அவர்கள் , மூத்த கவிஞர் சோ.பத்மநாதன் அவர்கள் ,பேராசிரியர் சி.ரகுராம் அவர்கள்,எழுத்தாளர் திருமதி புனிதவதி சண்முகலிங்கம் அவர்கள் ,வைத்தியர் சி .சிவகலை அவர்கள் ஆகியோர் விழா மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

பேராசிரியர் சி .சிவலிங்கராஜா அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.““நிலத்தின் தன்மை பயிரில் தெரியும் ““என்று அவர் கூறியது” காதில் ஒலிக்கிறது .நேரத்திற்கு முன்னரே வந்து ,நேரக் கட்டுப்பாட்டைக் கவனத்தில் எடுத்து உரையாற்றி ,வெளியே அதிக வெப்பநிலை நிலவியபோதிலும் நிறைவு வரை காத்திருந்து எம்முடன் உணவருந்திச் சென்ற அவரது சால்பு பெரிது . மிக நன்றி ஐயா .

விருந்தினர்களில் ஒருவராகக் கலந்துகொண்டவர் மூத்த கவிஞர் சோ.பத்மநாதன் அவர்கள். அவர் மிக ஆரம்பகாலத்திலிருந்தே இலக்கியச் செயற்பாடுகளில் மட்டுமல்ல, உளசமூகச் செயற்பாடுகளிலும் உடன் வந்தவர் .எமது நாடகங்களில் அவரது கவிதைகளைத் தாராளமாகவே பயன்படுத்தி உள்ளோம். ““கடல் வானம் நிலமெல்லாம் காலனிடும் ஓலம். கடைவிரித்



தேன் வாருங்கள் .மலிவு விலை உயிர்கள் ““என்ற அவரது அற்புதமான கவிதை வரியோடு ஒரு நாடகம் ஆரம்பமாகும். சீர்மிய ஆசிரியர் கருத்தரங்குகளில் கவிதைக்கான வளவாளராகப் பல முறை கலந்துகொண்டவர் .

இந்த நிகழ்வில் அவரிடமிருந்து முடிவைத் தொடுவாய் முயன்று நூலின் முதல் பிரதியைப் பெற்றுக்கொள்கிறார் அபிராமி ராஜ்குமார் அவர்கள். கவிஞருக்கான நன்றியைச் சொல்வதற்கு வார்த்தைகளைத் தேடுவது மிகக் கடினம் .

மன நாடக மேடையில் நூலில் எனது மதிப்பிற்குரியதமிழ் ஆசிரியர், நாடக எழுத்தாளர், நெறியாளர் திரு.செ.கதிரேசர்பிள்ளை பற்றி நிறையவே எழுதியுள்ளேன் .நூல் வெளியீட்டின் போது வருகை தந்திருந்த அவரது மகன்க.ஆதவன் அவர்கள் வண. பிதா.செ.அன்புராசா அடிகளார் அவர்களால் கௌரவம் செய்யப்பட்டார்.

அடிகளார் மன்னாரில் இருந்து இந்த நூல் வெளியீட்டிற்காகவே நெடுந்தூரம் பயணம் செய்து வருகை தந்து நிறைவு வரை காத்திருந்து முழு நிகழ்வையும் பார்வையிட்டுச் சென்றார். ■



# கனடாவில் ஒரே அஞ்சல் பெட்டிகள் இருமுறை உடைத்து திருடுவதின் மர்மம்

அஞ்சல் பெட்டிகளில் தொடர்ந்து அஞ்சல்கள் திருடப்படுவதாக பல்வேறு குடியிருப்புப் பகுதிகளில் வந்த குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை நடத்திய காவல்துறையினர், வீட்டு வாயில்களில் இருந்து அஞ்சல்களைத் திருடி வந்த ஒரு இந்திய வம்சாவளியைச் சேர்ந்த எட்டு பேரை கனடா காவல்துறை கைது செய்திருக்கிறார்கள்.

அஞ்சல் பெட்டிகள் ஒரு முறை உடைத்தால், அடுத்து இருவாரங்களின் பின் மீண்டும் உடைக்கப்படுவது ஆச்சரியமானது.

முதல் தடவை உடைக்கும் போது, கிரடிட் காட் பல தனி நபர்களுக்கு வந்திருந்தால், அவர்களுக்கான இரகசிய எண் (pin number) இரு வாரத்தின் பின் அவர்களுக்கு அஞ்சலில் வரும்.

அந்த இரகசிய எண்ணை எடுப்பதற்காகவே ஒரே அஞ்சல் பெட்டிகள் இருவாரத்தின் பின் உடைக்கப்படுகிறது என்ற உண்மை தெரியவந்துள்ளது.

காசோலைகள், கிரெடிட் கார்டுகள், அரசு அடையாள அட்டைகள் பரிசுக் கூப்பன்கள் வந்த அஞ்சல்களைத் திருடி மோசடியில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மீது வழக்குப் பதிவு செய்து கைது செய்திருக்கிறது.

இவர்களிடமிருந்து திருடப்பட்ட தனிநபர்களின் 450 அஞ்சல்கள், கிரெடிட் கார்டு, காசோலைகள் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது. ■




தாயகத்தில்... வவுனியாவில் அமைந்துள்ள
“பண்டாரவன்னியன் புத்தகசாலையில்”
ஈழத்துப் புத்தகங்களை நீங்கள் பெறமுடியும்.

தொடர்புகளுக்கு:
பண்டாரவன்னியன் புத்தகசாலை
வவுனியா, இலங்கை
+94772244616
youtube@akkakuruvi

இது வெற்றிமணியின் ஒரு இலவச விளம்பரம். நம் இளஞர்கள் முயற்சிக்கு கைகொடுப்போம்!

# வேடம் வேறு நிஜ வாழ்க்கை வேறு

## அண்மையில் பார்க்கிங் திரைப்படம் மூலமாக தேசிய விருது பெற்ற நடிகர் எம்.எஸ்.பாஸ்கர் வெற்றிமணிக்கு வழங்கிய நேர்காணல்

தமிழ் சினிமாவில் கதாநாயகர், வில்லன், காமெடி நடிகர் என பன்முகங்களை காட்டும் நடிகர்கள் மத்தியில் முன்னணி பாத்திரத்தில் திகழக்கூடியவர் நடிகர், பாடகர், பின்னணி குரல் கலைஞர் எம்.எஸ் பாஸ்கர். எந்த கதாபாத்திரமாக இருந்தாலும் அது நடிப்பு என்பதையும் தாண்டி தன்னை அந்த நிஜ கதாபாத்திரமாகவே மாற்றிக் கொள்ளக் கூடிய ஒரு அரும்பெரும் நடிகர்.

மொழி, எட்டு தோட்டாக்கள் " பார்க்கிங்" கென இவரின் திறமைகளை பறைசாற்றும் திரைப்படங்கள் எத்தனை எத்தனையோ. அந்த வகையில் 2023 வெளியாகிய பார்க்கிங் திரைப்படத்திற்காக சிறந்த துணை நடிகருக்கான தேசிய விருதை தன்வசமாக்கியுள்ளார். ஹரிஷ் கல்யாண் கதாநாயகனாக நடித்த " பார்க்கிங் " திரைப்படமானது "மூன்று தேசிய விருதுகள்" அள்ளி குவித்துள்ளது. 71வது தேசிய திரைப்பட விருதுகளில் சிறந்த தமிழ் திரைப்படம், சிறந்த துணை நடிகர், சிறந்த திரைக்கதை ஆகிய மூன்று முக்கிய விருதுகளை வென்றது குறிப்பிடத்தக்கது. தமிழ் திரையுலகில் பல திரைப்படங்களில் அந்த கதாபாத்திரங்களாகவே வாழ்ந்து மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்திருக்கும், எம் எஸ் பாஸ்கர் வெற்றிமணிக்கு வாசகர்களுக்காக வழங்கிய செவ்வி.

**? தேசிய விருது பெற்றது தொடர்பாக என்ன கூற விரும்புகிறீர்கள்?**

விருது கிடைத்தது மகிழ்ச்சி. நான் நன்றாக நடித்திருக்கிறேன் என்று அவர்கள் எனக்கு இந்த விருதை கொடுத்திருக்கிறார்கள். அது ரொம்ப மகிழ்ச்சியாக உள்ளது.

**? "பார்க்கிங்" திரைப்படம் அனைவராலும் விரும்பி பார்க்கப்பட்ட பேசப்பட்ட திரைப்படம் அந்த திரைப்படத்தில் பணியாற்றிய அனுபவம் பற்றி கூறுங்கள்? நீங்கள் பணியாற்றும்போது தேசிய விருது கிடைக்கும் என நினைத்தீர்களா?**

நான் எதையுமே எதிர்பார்ப்பதில்லை. எனக்கு கொடுக்கப்பட்ட வேடத்தை சிறப்பாக செய்ய வேண்டும் என்ற எண்ணம் மட்டுமே இருந்தது. அதுதான் ஒரு இயக்குனர் என் மீது வைத்திருக்கக் கூடிய நம்பிக்கை. பார்க்கிங் திரைப்படத்தின் இயக்குனர் அன்பு மகன் ராம்குமார் பாலகிருஷ்ணன் அந்த கதாபாத்திரத்தை நான் சிறப்பாக நடிப்பேன் என நம்பி எனக்கு கொடுத்திருந்தார். அந்த நம்பிக்கை நான் காப்பாற்ற வேண்டும். இந்த கதாபாத்திரம் ஒரு சிறந்த கதாபாத்திரம். தான் என்ற அகங்காரமுடைய கதாபாத்திரம். அதனை சிறப்பாக செய்ய வேண்டும் என்ற எண்ணம் தான் இருந்தது. விருதுக்காக நான் நடிப்பதில்லை. நான் மக்கள் மனதை சென்றடைய வேண்டுமென்றே நடிக்கின்றேன்.



**? இக்கால தலைமுறை நடிகர்களுடன் பணியாற்றுவது எப்படி இருக்கின்றது?**

நான் முன்பு கூறியதைப் போல நான் யாரிடமும் எதையும் எதிர்பார்ப்பதில்லை. நம்முடைய பழக்கவழக்கத்தினால் நிச்சயமாக அவர்கள் நம்மை மதிப்பார்கள்.



நேர்கண்டவர்: இரா.மோகனசாந்தி

ஆனால் இந்த திரைப்படத்தில் நடித்த என் அன்பு மகன் ஹரிஷ் கல்யாண், அன்பு மகள் கதாநாயகி இந்துஜா மற்றும் இயக்குனர் அன்பு மகன் பாலகுமார் ராமகிருஷ்ணா என்னை மிகவும் மரியாதையுடனே நடத்தினார்கள். மேலும் திரைப்படத்தின் தயாரிப்பாளர் அன்பு மகன் "ஸ்ரீனிஷ்" இந்த திரைப்படம் உங்களுக்கு தேசிய விருதை பெற்று தரும் என உறுதியாக நம்பினார்.

**? இனிவரும் காலங்களில் என்ன மாதிரியான கதாபாத்திரங்களில் உங்களை காண முடியும்?**

எனக்கு மக்கள் மனதில் நிச்சயமாக போய் சேரக்கூடிய மக்கள் மதிப்பளிக்கக்கூடிய வகையிலான நல்ல கதாபாத்திரத்தில் நடிக்க வேண்டும் என்ற ஆசை மட்டுமே உள்ளது.

**? உங்கள் குடும்பம் பற்றி? தேசிய விருது கிடைத்தது அவர்களுக்கு எப்படியான தருணத்தை ஏற்படுத்தியது?**

எனது மனைவி, மகள், மகன், மருமகன், சுற்றத்தார் எல்லோரும் மிகுந்த மகிழ்ச்சி. தேசிய விருது கிடைத்தது என்ற விடயத்தை அறிந்தவுடன் என் மனைவி, மகள் உணர்ச்சிப் பெருக்கினால் கண்கலங்கி அழுதார்கள். மகன் கட்டியணைத்து வாழ்த்து கூறினார். இப்போது என் பேத்தி தான் என் உயிர். அவள் பிறந்த பிறகுதான் எனக்கு தேசிய விருது கிடைத்தது. மகள் பிறந்த போது நான் பின்னணி குரல் கொடுக்கும் கலைஞன். மகன் பிறந்த பின்பு நடிகனானேன். மகள் திருமணத்தின் பின்பு சினிமாவில் நல்ல நல்ல வேடங்கள் அமைந்தன தற்போது பேத்தி பிறந்த பின்பு எனக்கு தேசிய விருது கிடைத்துள்ளது.

96 திரைப்படத்தில் உங்கள் மகன்



அறிமுகமானார். அவரையும் உங்களைப் போல முழு நேர சினிமா துறை சார்ந்தவராக்க ஏதேனும் முயற்சிகளை மேற்கொள்கின்றீர்களா? அவருக்காக நான் எதையுமே செய்யவில்லை.

**? எம் எஸ் பாஸ்கரின் நிஜ வாழ்க்கையில் அவர் எப்படியானவர்.?**

நான் ஒரு ஜாலியான பேர்வழி. 'கரார்ரராக இருப்பதெல்லாம் எனக்கு தெரியாது. பார்க்கின் படத்தில் நான் நடித்தது ஒரு வேடம் மட்டுமே. படத்தில் நடிப்பதை போன்று நான் நிஜத்திலும் கரார் என்று இல்லை. வெவ்வேறு கதாபாத்திரங்களை ஏற்று நடித்துள்ளேன். அதனை நிஜ வாழ்க்கையுடன் ஒப்பிட முடியாது. வேடம் வேறு நிஜ வாழ்க்கை என்பது வேறு. நான் ஜாலியான மனிதர், ஏதாவது ஒரு விடயம் செய்து விட்டு வீட்டில் மனைவியிடமும் என் மகளிடமும் திட்டு வாங்கிக் கொண்டிருப்பேன்.

**? இயக்குனர் ராதா மோகனுடன் நீங்கள் நடித்த படங்கள் மற்றும் கதாபாத்திரங்கள் உணர்வுபூர்வமானவை. அவை பற்றி?**

ஐயா என நான் அவரை அன்புடன் அழைப்பேன். அவருடைய எந்த திரைப்படமாக இருந்தாலும் நான் இருக்க வேண்டும் என அவர் நினைப்பார். அவரின் ஒரு சில திரைப்படங்களில் என்னால் நடிக்க முடியாமல் போனதற்கு நானே முழுமையான காரணம், நான் வேலைப்பளு காரணமாகவும் வேறு திரைப்படங்களில் பணியாற்றியதன் காரணமாகவும் நடிக்க முடியாமல் போனது. இனி வரும் காலங்களில் அவர் திரைப்படத்தில் என்னை காணலாம்.

சிறந்த துணை நடிகருக்கான தேசிய விருதை வென்றுள்ள கலைஞர் எம் எஸ் பாஸ்கருக்கு "வெற்றிமணி" பத்திரிகை சார்பாக வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன், என்றும் தமிழையும் தமிழ் மக்களையும் நேசிக்கும் இக் கலைஞர் தொடர்ந்தும் திரைத்துறையில் பல சாதனைகளை புரிந்து பிரகசிக்க வேண்டும். ■



விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# மாமியாரான பிறகுதான் வயதாகி விட்டது புரிந்தது

1980களில் தென்னிந்திய சினிமாவைக் கலக்கிய கனவுக்கன்னி. ரஜினிகாந்த், கமல் உள்ளிட்ட உச்ச நடிகர்கள் பலருடனும் நடித்தவர், புகழின் உச்சியில் இருக்கும்போதே நடிகர் நாகார்ஜுனாவைத் திருமணம் செய்துகொண்டு, தெலங்கானாவின் மருமகளானார். சினிமாவில் 40 ஆண்டுகளை நிறைவு செய்திருக்கும் அமலாவுடன் ஒரு சந்திப்பு ...

### சினிமாவில் அறிமுகம் எப்படி?

நான் இறுதி ஆண்டு படித்துக் கொண்டிருந்தேன். டி.ராஜேந்தர் , 'மைதிலி என்னைக் காதலி' படத்தில் நடிக்கக் கேட்டார். 'எனக்கு கிளாஸிக்கல் டான்ஸ் தவிர எதுவுமே தெரியாது'என்று சொன்னேன்.'எனக்கு அதுதான் வேண்டும் 'என்று சொன்னவர், தான் நினைத்த 'மைதிலி'யாக என்னை நடிக்க வைத்து என் சினிமா வாழ்க்கையை ஆரம்பித்து வைத்தார்.

### உங்கள் குடும்பம் பற்றி...?

அப்பா, கடற்படை அதிகாரி . எனவே, கரக்பூரில் பிறந்து, பல ஊர்களிலும் வளர்ந்தேன். டான்ஸ்தான் என வாழ்க்கை 8 வயதில் முடிவு பண்ணினேன். உடனே, சென்னையில்உள்ள கலாக்ஷேத்ரா கொஸ்டல் வாழ்க்கை ஆரம்பமானது

### மாறுபட்ட சினிமா அனுபவம்?

பல மொழிகளிலும் நடித்தேன். ரஜினி , கமல் ஜோடியா நடிக்கும் வாய்ப்பும் ஆரம்பத்திலேயே கிடைத்தது. 'வேதம் புதிது' படத்தில் நடித்தது மாறுபட்ட அனுபவம். ஒத்திகை இல்லாமல் நடிக்க வைத்தார் பாரதிராஜா



### நடிப்புக்கு ஏன் இடைவெளி?

கல்யாணத்துக்கு பின்னர் குடும்ப வாழ்க்கையில் பிஸியாக இருந்ததால் , சினிமாவிலிருந்து விலகினேன்

### வயது கூடினாலும் அழகு குறையாத ரகசியம்?

இந்த விஷயத்துல எனக்கு முன்மா-திரி நாக் தான். 'கூலி' படத்தில் அவரின் ஸ்டைல், ஃபிட்னஸ், அழகைப் பார்த்து அசந்துபோய் கைதட்டிய ரசிகைககளில் நானும் ஒருத்தி.

10 வயதில் சைவத்துக்கு மாறியதுடன், பிராணிகளிடமிருந்து தயாரிக்கப்படும் எந்த உணவுப்பொருள்களையும் உட்கொள்ளாத 'வீகன் டயட்'டை கடந்த 18 ஆண்டுகளாக கடைப்பிடித்துவருகிறேன்

---

# கண்ணியமாகவே போராடுவேன்

பொலிவுட் நடிகை தீபிகா படுகோனே குழந்தை பிறந்த பிறகு படப்பிடிப்பில் 8 மணி நேரம் தான் பணியாற்றுவேன் என்று கூறிய நிபந்தனையால் சில முக்கியமான படங்களில் இருந்து தீபிகா படுகோனே நீக்கப்பட்ட சம்பவங்களும் நடந்திருக்கின்றன.

இந்த சர்ச்சை குறித்து நடிகை தீபிகா படுகோனே முதல் முறையாக பேசியிருக்கிறார். இது குறித்து அவர் அளித்துள்ள பேட்டியில்,"ஒரு பெண்ணாக இருப்பதால் நான் 8 மணி நேர வேலையை வலியுறுத்துவதாகவே இருக்கட்டும்.

ஆனால் இந்திய திரையுலகில் பல ஆண் சூப்பர் ஸ்டார்கள் பல ஆண்டுகளாக 8 மணி நேரம் தான் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் அது குறித்து தலைப்புச் செய்திகள் வெளி வருவதில்லை. நியாயமான வேலை மற்றும் பணி செய்யும் சூழ்நிலைக்காக பல நேரங்களில் போராடி இருக்கிறேன்.

இது எனக்குப் புதிதல்ல.ஆனால் நான் எப்போதும் என் போராட்டங்களை அமைதியான முறையில் நடத்துவேன்.சில விசித்திரமான காரணங்களுக்காக, சில நேரங்களில் அவை பகிரங்கமாகிவிடும். ஆனால் அமைதியாகவும் கண்ணியமாகவும் என் போராட்டங்களை நடத்துவது எனக்குத் தெரிந்த வழி" என்று தெரிவித்துள்ளார்.



# ரஜினியுடன் நடிக்க மறுத்த சிவாஜி

ரஜினிகாந்தும், சிவாஜியும் இணைந்து சில படங்களில் நடித்துள்ளனர். ஆனாலும் மாவீரன் படத்தில் ரஜினியுடன் நடிக்க மறுத்திருக்கிறார் சிவாஜி. 1986ஆம் ஆண்டு வெளிவந்த இந்த படம் அமிதாப்பச்சன் நடித்த மர்த் என்ற படத்தின் ரீமேக்.

இதில் ரஜினியுடன் அம்பிகா, ஜெய்சங்கர், சுஜாதா உள்ளிட்ட பலர் நடித்தனர். ராஜசேகர் இயக்கினார், இளையராஜா இசை அமைத்தார். இந்த படத்தில் ரஜினியின் தந்தை வேடம் மிக முக்கியமானது, இந்த வேடத்தில் முதலில் சிவாஜி நடிப்பதாக இருந்தது. அது தொடர்பான விளம்பரங்களும் வெளியிடப்பட்டன .

பின்னர் சிவாஜி அதில் நடிக்கவில்லை, அவருக்கு பதிலாக பொலிவுட் நடிகரும், மல்யுத்த வீரருமான தாரா சிங் நடித்தார். படத்தில் தந்தை வேடத்திற்கான காட்சிகள் குறைவாக இருந்ததால் சிவாஜி நடிக்க மறுத்து விட்டதாகவும், அப்போது பல படங்களில் சிவாஜி பிசியாக நடித்துக் கொண்டிருந்ததால் கால்ஷீட் ஒதுக்கி கொடுக்க முடியாததால் நடிக்கவில்லை என்றும் கூறப்பட்டது.

# விஜய் தேவரகொண்டா ஜோடியான கீர்த்தி சுரேஷ்

நடிகைகளுக்குத் திருமணம் நடந்துவிட்டால் அதன்பின் கதாநாயகிகளாக நடிக்க வாய்ப்பு தர மாட்டார்கள் என்பதை இன்றைய நடிகைகள் உடைத்தெறிந்து விட்டார்கள்.

இன்னும் சொல்லப் போனால் குழந்தை பெற்ற பிறகும் கூட கதாநாயகிகளாக வலம் வந்து கொண்டிருக்கிறார்கள்.

சமந்தா, தீபிகா படுகோனே, ஆலியா பட் அப்படியான ஒரு நிலையை உடைத்தெறிந்தவர்கள். அந்த வரிசையில் கீர்த்தி இணைந்துள்ளார். கடந்த வருடம் திருமணம் செய்து கொண்ட. கீர்த்தி தற்போது தமிழில் ரிவால்வர் ரீட்டா, கன்னி வெடி ஆகிய படங்களில் நடித்து வருகிறார். அடுத்து பெயரிடப்படாத தமிழ்ப் படம் ஒன்றில் இயக்குனர் மிஷ்கின் உடன் இணைந்து நடித்து வருகிறார். தற்போது தெலுங்கில் விஜய் தேவரகொண்டா ஜோடியாக நடிக்கவுள்ளார்.





















விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.